REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 நவம்பர் 16 வியாழக்கிழமை
# தினகரன்
THINAKARAN தினகரன்
வரு. 91 இல. 272 | Thursday 16, November, 2023 | 20பக்கங்கள் | 50/-






## பொருளாதார நெருக்கடியை ஒரே பட்ஜட்டில் நிவர்த்திக்க முடியாது

### பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியதன் பின் மறுசீரமைப்பை மேற்கொள்வது அவசியம்

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை ஒரேயொரு வரவு செலவு திட்டத்தினால் தீர்த்துவிட முடியாதெனவும், இதற்கு தீர்வு காணும் வகையில் பாதையை மாற்றிக்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பு சங்ரீலா ஹோட்டலில் நேற்று (15) கொழும்பு பல்கலைக்கழகத்தின் வணிக முகாமைத்துவ பட்டப்பின்படிப்புப் பட்டதாரிகள் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வரவு செலவுத் திட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்விலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான 06

### ரயில்வேயை அதிகார சபையாக்க வேண்டும்

## சிறந்த ரயில் சேவையை பெற அமைச்சர் பந்துல ஆலோசனை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ரயில்வே திணைக்களத்தை அதிகார சபையாக தரம் உயர்த்தினால் சிறந்த ரயில் சேவையை பெற்றுக் கொடுக்க முடியுமென, போக்குவரத்து, ஊடகத் துறை அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

திணைக்களத்தை அதிகார சபையாக மாற்றி, தனி கேந்திரமான நிர்வாகத்திற்குப் பதிலாக நிர்வாக பகிர்வை 06

## மட்டு. கல்லடியில் American ihub திறப்பு



மட்டக்களப்பு, கல்லடியில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சங் மற்றும் கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரால் American ihub நிலையம் நேற்று (15) திறந்து வைக்கப்பட்டபோது...



### வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்

### ஜெனீவாவில் இணங்கியதை அரசு நிறைவேற்ற வேண்டும்

03

# தரக்குறைவான மருந்து இறக்குமதி செய்தோரை கைது செய்ய உத்தரவு

### மாளிகாகந்த மஜிஸ்திரேட் நேற்று உத்தரவு பிறப்பிப்பு

### அரசாங்கத்தின் நடைமுறைகளை மீறிச் செயற்பட்டதாக குற்றச்சாட்டு



நாட்டுக்குள் தரக்குறைவான இமுனோகுளோபுலின் (Immunoglobulins) ஊசிமருந்தை இறக்குமதி செய்தமை தொடர்பில், அரசாங்கத்தின் வழமையான நடைமுறைகளை மீறிச் செயற்படும் சுகாதார அமைச்சின் பொறுப்பான அதிகாரிகள் அனைவரையும் கைது செய்யுமாறு மாளிகாகந்த மஜிஸ்திரேட் லோச்சனா அபேவிக்கிரம நேற்று (15 ஆம் திகதி) உத்தரவிட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை தயாரித்ததாக கூறப்படும் நிறுவனத்தின் உரிமையாளர் ஜானக பெர்னாண்டோவை எதிர்வரும் (29) வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இத்தடுப்பூசிகளுக்கு சீல் வைக்கப் பட்டமைக்கான காரணம் மற்றும் தடுப்பூசிகளின் நிலை தொடர்பில் நீதிமன்றத்துக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கும் இன்று முதல் ஒரு வார காலத்துக்குள் அறிக்கை அனுப்புமாறு மருந்துப் பொருட்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் முன்னாள் நிறைவேற்று அதிகாரி டொக்டர் விஜித் குணசேக்கரவுக்கு அழைப்பாணை விடுத்துள்ளார்.

இதற்கு முன்னர் வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவுக்கமைய செயற்படாமல் வேண்டுமென்றே தாமதப்படுத்துவதாகக் கருதுவதாக நீதவான் குறிப்பிட்டார்.

டொக்டர் விஜித் குணசேகர நீதிமன்றம் கோரிய அறிக்கையை நேற்று வெளியிடாமையால் விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டதாகவும் வைத்தியர் விஜித் குணசேகரவுக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்குமாறும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, சட்ட மாஅதிபர் சார்பில் விடயங்களை தெரிவித்து நீதிமன்றில் கோரினார். முதல்நாள் அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு தினம் ஒன்றை குறிப்பிடாததால் அழைப்பாணை மாத்திரமே வழங்கப்படுமென நீதவான் தெரிவித்தார்.

இந்த சம்பவத்தில் சந்தேக நபர்களின் கொடுக்கல் வாங்கல்களை செய்துள்ள சகலரின் தொலைபேசி பதிவு அறிக்கைகளைப் பெற்று ஆராயுமாறும் குறிப்பாக வாட்ஸ்அப் பதிவுகளை உரிய முறைகள் மூலம் சரிபார்க்கவும் 06

## பட்ஜட்டின் சில யோசனைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவை

### வரவேற்பதாக சபையில் சுமந்திரன் MP தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2024: வரவு செலவுத்திட்டத்தில் முன் வைக்கப்பட்டுள்ள சில விடயங்களை வரவேற்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள அரச 06

### ரூ.10,000 வாழ்க்கை செலவு அதிகரிப்பு

## மலையக மக்களுக்கும் கொடுப்பனவு வேண்டும்

### வேலுசாமி இராதாகிருஷ்ணன் MP

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வரவு செலவு திட்டத்தின் மூலம் அரசாங்க ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள பத்தாயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, மலையக தோட்டத் 06

### தங்கம், இலத்திரனியல் பொருட்கள் உட்பட

## தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்தினால் அதிகபட்ச தண்டனை




தங்கம் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் உட்பட தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்துபவர்களுக்கு அதிகபட்ச தண்டனைகளை விதிக்க, இலங்கை சுங்கத் திணைக்களம் தீர்மானித்துள்ளது. 06

## புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறு அடுத்த வாரம்

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு



தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சை பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமை பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகளே, வெளியிடப்பட 06

### வெல்லம்பிட்டி பாடசாலையொன்றில்

## மதிற்சுவர் இடிந்து விழுந்து ஆறு வயது மாணவி பலி





### 05 மாணவர்களுக்கு காயம்

### அதிபர் மீது பிரதேசவாசிகள் தாக்குதல்

**வெல்லம்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றில் மதிற்சுவர் இடிந்து விழுந்ததில், 06 வயது மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் 05 மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.**

**இச் சம்பவத்தையடுத்து பிரதேச மக்கள் இணைந்து அதிபர் மீது நடத்திய தாக்குதலில்** 06

## தங்கத்தின் விலை தொடர் அதிகரிப்பு

### 24 கரட் பவுண் ரூ.1,79,850 ஆனது



நாட்டில் தங்கத்தின் விலை தொடர்ந்தும் அதிகரித்து வருகிறது. கொழும்பு செட்டியார் தெருவின் நிலவரப்படி, 24 கரட் பவுண் தங்கம் 01 இலட்சத்து 79 ஆயிரத்து 850 ரூபாவாக அதிகரித்துள்ளது.

அதேநேரம், 06

## யாழ். நகரில் இளையோரை குறிவைத்து போதை விருந்து

### ஒருபோதும் ஏற்க முடியாது என்கிறார் சுகாஷ்



யாழ். நகரில் இளைஞர்களை குறிவைத்து அரங்கேற்றப்படும் போதை விருந்து, களியாட்டங்களை ஒருபோதும் ஏற்கமுடியாதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில் கடந்த வாரம் இடம்பெற்ற 06

### டயனா கமகே விவகாரம்

## விசாரணை அறிக்கை சிறப்புரிமை குழுவுக்கு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இராஜாங்க அமைச்சர் டயனா கமகே, எம்.பிக்களான சுஜித் பெரேரா, ரோஹன பண்டார ஆகியோருக்கிடையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான விசாரணைக்குழுவின் அறிக்கை, சிறப்புரிமைக் குழுவிற்கு அனுப்பி 06



# ஜனாதிபதி திரைப்பட விருது வழங்கும் விழா



ஜனாதிபதி திரைப்பட விருது வழங்கும் விழா நேற்று முன்தினம் (14) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தாமரை தடாக அரங்கில் வெகுவிமர்சையாக நடைபெற்றது. இந்நிகழ்வில் ஜனாதிபதி, சபாநாயகர் உட்பட ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, ஊடக அமைச்சின் செயலாளர் ஆகியோர் விருதுகள் வழங்குவதை படங்களில் காணலாம். (படங்கள்: சுலோச்சன கமகே, நிசங்க விஜேரத்ன)

## நகர்வலம்



# விவசாயிகளுக்கு வழங்கவென உற்பத்தி செய்யப்பட்ட ஒருதொகை பசளை உரங்கள்

## கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிப்பு





திறப்பனை தினகரன் நிருபர்

திறப்பனை விவசாய சேவை மத்திய நிலையத்தினால் விவசாயிகளுக்கு வழங்குவதற்கென உற்பத்தி செய்யப்பட்ட இயற்கை பசளை உரங்கள் மற்றும் அதற்கென பயன்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருட்கள் அனைத்தும் திறப்பனையில் உள்ள பழைய உள்ளூராட்சி மன்ற கட்டிடத்திற்கு பின்னால் சேதமடைந்த நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த அரசாங்க காலத்தில் அமுல்படுத்தப்பட்ட சேதன பசளை உற்பத்தி திட்டத்தின் கீழ், திறப்பனை பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காகவே இந்த சேதன பசளை உற்பத்தி செய்யப்பட்டதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அதிக அளவில் தயாரிக்கப்பட்ட பொதி செய்யப்பட்ட உரப்பைகள் மற்றும் மண் வகைகள் அத்துடன் உற்பத்திக்கு கொண்டு வரப்பட்ட மற்றும் பொருட்கள் அனைத்தும் அழிந்து போவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதா என இப்பகுதி விவசாயிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட மண், தரமற்றது என கருதி விவசாயிகள் குறிப்பிட்ட இந்த பசளையை வாங்க மறுத்துள்ளனர். இதனால் தான் குறிப்பிட்ட இந்த பசளைகள் பழுதடைவதற்கு காரணம் எனவும், இந்த பசளை உற்பத்தி திட்டத்திற்கு அதிகளவில் பணம் செலவளிக்கப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

# மறைந்த மூத்த அறிவிப்பாளர் நடேச சர்மாவிற்கு இந்துமதபீடம் அனுதாபம்



இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அறிவிப்பாளர் காலஞ்சென்ற அமரர் சோமஸ்கந்த நடேச சர்மா திடீர் மறைவு குறித்து இந்துமத பீடம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

சிரேஸ்ட அறிவிப்பாளரான அவர், சுமார் முப்பது வருடகாலம் இலங்கை வானொலியில் கடமையாற்றியுள்ளதோடு தொலைக்காட்சிகளிலும் அவ்வப்போது செய்திவாசித்துதனதுபணியை மேற்கொண்டு வந்த இவரின் சேவையை பாராட்டி கலாபூசணம் விருது வழங்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலயங்களில் தனக்கு நேரம் கிடைக்கும்போது ஆலயப்பணிகளிலும் ஈடுபட்டு வந்தவராவார். புகழ்பூத்த ஆலயங்களின் திருவிழாக்களை வானொலி மூலம் அஞ்சல் செய்தும் பல சேவைகளை செய்துள்ள இவரது சேவையை முன்னிட்டு கொழும்பு ஸ்ரீ வித்யா குருகுலத்தின் அகில இலங்கை இந்து மாமன்றத்தில் நடைபெற்ற ஆண்டு விழாவில் இவருக்கு கௌரவம் வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அனைவரினதும் நன்மதிப்பை பெற்ற அமரர் நடேச சர்மாவின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை மனதார பிரார்த்தனை செய்வோம் என சர்வதேச இந்துமத பீட செயலாளர் சிவஸ்ரீ ராமசந்திர குருக்கள் பாபு சர்மா தனது அனுதாப செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# அநுராதபுரம் ரயில் நிலையத்தில் 545 லீட்டர் டீசல் திருட்டு

## 05 பணியாளர்கள் இடைநிறுத்தம்

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

அநுராதபுரம் ரயில் நிலைய பாதுகாப்பு பிரிவின் நிலைய அதிகாரி உள்ளிட்ட பணியாளர்கள் ஐவரின் சேவை நேற்று (15) இடைநிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் 19 ஆம் திகதி அநுராதபுரம் புகையிரத நிலையத்தில் இடம்பெற்ற 545 லீட்டர் டீசல் திருட்டு சம்பவம் தொடர்பின் அடிப்படையில் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

புகையிரத பொது முகாமையாளர் அது தொடர்பில் நியமிக்கப்பட்டிருந்த மூவரடங்கிய விசாரணை குழுவினரின் பரிந்துரையின் அடிப்படையில் இவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# காலி பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யாவில் புதிய கணினி கூடம் திறந்து வைப்பு



காலி கோட்டை பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட கணினி பயிற்சிக்கூடம் மாணவர்களின் பாவனைக்காக அண்மையில் கையளிக்கப்பட்டது.

கலாபீட டிரஸ்டி நுஸ்கி முஹம்மதின் வழிகாட்டலின் கீழ் மாக்கான் மாக்கார் குடும்ப உறுப்பினர்களினால் இந்த கணினிக் கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 25 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்த கணினி கூடத்தில் 10 கணினிகள் மாணவர் பயிற்சி பெற இணைக்கப்பட்டுள்ளன.

அதிபர் மௌலவி முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் ரஸூக் (பஹ்ஜி) தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலாபீட டிரஸ்டி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களான ஸக்கி தீன் மாக்கான் மாக்கார், ஸம்ஸுதீன் மாக்கான் மாக்கார், நிர்வாக சபை உறுப்பினர்களான டாக்டர் ஷாமில் மாக்கான் மாக்கார், ரவூப் அரூஸ், கலாபீட பணிப்பாளரும் கொழும்பு உம்மு சாவியாவின் பேஷ் இமாமுமான மௌலவி ரயீஸுல் முகத்தமுஷ்ஷாதுலி முஹம்மத் பாஸில் (பஹ்ஜி) உட்பட கலாபீட விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தின் கீழ் குவைத் நாட்டு பரோபகாரிகளின் நிதியுதவியில் அல் ஹிமா சமூக சேவை அமைப்பு பல்வேறு சேவைகளை முன்னெடுத்து வருகிறது. அதன்கீழ் கஹடோவிட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குறைந்த வருமானம் கொண்ட குடும்பத்தலைவி ஒருவருக்கு அல்ஹிமா அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ. நூறுல்லாஹ் (நளீமி) பெறுமதியான தையல் மெஷினொன்றை கையளிப்பதை படத்தில் காணலாம்.

# சமாதான நீதவானாக சத்தியபிரமாணம்



அநுராதபுரம் இஹல கொட்டியாவையை பிறப்பிடமாகவும் கம்பிரிகஸ்வெவயை வசிப்பிடமாகவும் கொண்ட மர்ஹூம் ஜெய்னுலாப்தீன் முகம்மது இல்லியாஸ் (ஆசிரியர்) அகில இலங்கை சமாதான நீதவானாக மாவட்ட மேலதிக நீதவான் திருமதி கே.எம்.ஆர்.டீ.எஸ். ஹேவாவசம் முன்னிலையில் அண்மையில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சிறந்த கணித ஆசிரியராகவும் கம்பிரிகஸ்வெவ ஜும்ஆப் பள்ளி பரிபாலன சபைத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி பழைய மாணவரான இவர் கணித பயிற்றப்பட்ட ஆசிரியராக கல்விமாணிப்பட்டம் (B.ED) யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் முது கல்விமாணிப்பட்டத்தையும் (M.ED) தேசிய கல்வி நிர்வாகத்தின் முது கல்விமாணி முகாமைத்துவப் பட்டம் (M.ED & Mgt) போன்ற உயர் பட்டப்படிப்புகளை மேற்கொண்டுள்ள இவர் மர்ஹூம்களான ஜெய்னுலாப்தீன் உம்மு குல்தும் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவர்.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 நவம்பர் 16 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.42
லுஹர் - 11.57
அஸர் - 03.19
மஃரிப் - 05.50
இஷா - 07.03

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் ஐப்பசி 30
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# பொருளாதார அபிவிருத்தியே அரசாங்கத்தின் பிரதான இலக்கு

2024ஆம் ஆண்டை பொருளாதார ரீதியில் வலுவான ஆண்டாக மாற்றிக்கொள்வதற்கு, 1.8 சதவீத பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிப்பதே அரசாங்கத்தின் அடிப்படை நோக்கமென நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலே, அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அடுத்த வருடத்துக்கான பட்ஜட்டில் அரச ஊழியர்கள், வறிய மற்றும் பொருளாதார ரீதியாக நலிவடைந்த குடும்பங்கள் என்பவற்றின் நலன்கள் தொடர்பிலும் சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி நிறுவனங்களை மேம்படுத்துவது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு அரசின் வருமானம் 04 ஆயிரத்து 127 பில்லியன் ரூபாவாகும்.

இந்நிலையில், அரசின் செலவினம் 06 ஆயிரத்து 978 பில்லியன் ரூபாவாக உள்ளது. மேலும் பாதீட்டு பற்றாக்குறை 2 ஆயிரத்து 851 பில்லியன் ரூபாயென்ற வகையிலேயே அரசாங்கம் தற்போது செயற்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

128 வீதமாக இருந்த கடன் சுமையை 95 சதவீதமாக குறைத்தல், நிதித் தேவையை 34.6 சதவீதத்திலிருந்து 13 சதவீதமாக குறைத்தல் மற்றும் வெளிநாட்டுக் கடன் நிதியை 9.4 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதமாகக் குறைத்தல் என்பவற்றை பிரதான நோக்கமாக கொண்டு, அடுத்த ஆண்டுக்கான பாதீட்டை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.



காலி கராபிட்டிய வைத்தியசாலைக்கு விசேட கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டிருந்த சுகாதார அமைச்சர் ரமேஷ்பத்திரன, மருத்துவமனை புனரமைப்பு பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு மத்திய பொறியிலாளர் பணியக சபையின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார். அமைச்சருடன் சுகாதாரஅமைச்சின் பிரதிப்பணிப்பாளர் நாயகம் சி.எச். எம்.என்.தினிப்ரிய உள்ளிட்ட அதிகாரிகளும் சென்றிருந்தனர்.

## நெடுந்தீவில் 750 T–56 துப்பாக்கி ரவைகள் மீட்பு

CID க்கு கிடைத்த தகவலையடுத்து தேடுதல்

யாழ். நெடுந்தீவு பகுதியில் நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த சுமார் 750 க்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள்,நேற்று முன்தினம் (14) கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரம் பகுதியில் மக்கள் நடமாட்டம் இல்லாத தனியார் காணி ஒன்றில், இத்துப்பாக்கி ரவைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய அந்தப் பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ள நெடுந்தீவு பொலிஸார், ஊர்காவற்துறை நீதிமன்றத்தின் அனுமதியை பெற்றனர். அகழ்வு இயந்திரத்தின் உதவியுடன் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினரும் இணைந்து தேடுதல் நடத்தினர். இதன் போது,ரி56 துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 750 க்கும் மேற்பட்ட துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்டன.



சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு தேசிய கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல் மற்றும் அவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வழிகாட்டுவதற்காக தேசிய ரூபவாஹினியால் ஆரம்பிக்கப்படவுள்ள connect sri lanka தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் வர்த்தக ஒப்பந்த பரிமாறல் போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதனை வெளிநாட்டு அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவும் அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் பிரேரணையை பரிமாறிக் கொண்டார்கள். இந்நிகழ்ச்சி தொடர்பான வர்த்தக ஒப்பந்தம் ரூபவாஹினி கூட்டுத்தாபனத் தலைவர் கலாநிதி பிரசாத் சமரசேகர மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் டொக்டர் சாரங்க அழகப் பெரும ஆகியோருக்கிடையே பரிமாறிக் கொள்ளப்பட்டது.

## கைதாகி சிறையிலிருந்த இந்திய மீனவர்களில் சிலர் நேற்றும் விடுதலை

கட்டம்,கட்டமாக விடுவிக்கும் ஏற்பாடுகள் செயலுருவில்

(எம்.கே. ஷாகுல் ஹமீது)

இலங்கை சிறையிலிருந்த 22 இந்திய மீனவர்களில் 21 பேர், நேற்று (15) விடுதலை செய்யப்பட்டனர்.யாழ்,நீதிமன்றம் இவர்களை விடுதலை செய்ய உத்தரவிட்டது. இன்னும் ஓரிரு தினங்களில் இவர்கள் தாயகம் வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.கட்டம்,கட்டமாக விடுதலை செய்யும் ஏற்பாடுகளு க்கு இணங்க இவர்கள் மூன்றாம் கட்டமாக விடுதலை செய்யப்பட்டனர்.மீனவர்களை விடுவித்தமைக்காக அமைச்சர் அலிசப்ரி மற்றும் இலங்கை அரசாங்கத்துக்கு இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி நன்றி தெரிவித்தார்.



தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி வந்து மீன் பிடிப்பதாக கூறி இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து செல்வதும், அவர்களின் விசைப்படகுகளை பறிமுதல் செய்வதும் வழக்கமாகும் . இந்த வகையில் கடந்த மாதம் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற ராமேசுவரம் மற்றும் மண்டபம் பகுதிகளை சேர்ந்த 64 மீனவர்களை இலங்கை இராணுவம் கைது செய்தது.

இவர்களை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

சமீபத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி உள்ளிட்ட சிலர், இலங்கைக்கு விஜயம் செய்து வெளிநாட்டமைச்சர் அலிசப்ரியுடன் பேச்சு நடத்தினர்.

## ஜுமாதுல் ஊலா மாதம் பிறைக்குழு விசேட அறிவிப்பு

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

ஹிஜ்ரி 1445 ஜுமாதுல் ஊலா மாதத்திற்கான தலைப்பிறை பார்க்கும் மாநாடு,நேற்று முன்தினம் (14) செவ்வாய்க்கிழமை மாலை மஃரிப் தொழுகையின் பின்னர் இடம்பெற்றது. கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு மாநாட்டு மண்டபத்தில், பிறைக் குழு தலைவர் மௌலவி ஹிஷாம் அல் பத்தாஹி தலைமையில் இடம்பெற்றது.

ஜுமாதுல் ஊலா மாதத்திற்கான தலைப்பிறை நாட்டின் எப்பாகத்திலும் தென்படாததால் ரபிஉனில் ஆகிர் மாதத்தை நேற்று புதன்கிழமை முப்பதாக பூர்த்தி செய்து, நேற்று புதன் கிழமை (15) மாலை மஃரிப் தொழுகைக்கு பிறகு ஜுமாதுல் ஊலா மாதம் ஆரம்பமாவதாக பிறைக்குழு உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

கொழும்பு பெரிய பள்ளிவாசலின் ஏற்பாட்டில் இடம்பெற்ற பிறை பார்க்கும் மாநாட்டில், பெரிய பள்ளிவாசல் தலைவர் தாஹிர் ரசீன் உள்ளிட்ட பள்ளிவாசல் நம்பிக்கையாளர்கள், பிறைக் குழு உறுப்பினர்கள், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை உறுப்பினர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அலுவலர்கள், இலங்கை வக்பு சபை

தலைவர், ஏனைய பள்ளி வாசல்கள், ஸாவியாக்கள், தரீக்காக்களின் பிரதிநிதிகள், மேமன் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

## முஸ்லிம் பெண்கள் ஹபாயா அணிந்து செல்ல தடையில்லை

சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவிப்பு

நாட்டின் எப்பாடசாலைகளிலும் முஸ்லிம் பெண்கள் ஹபாயா அணிந்து செல்ல தடையில்லை என, சட்ட மாஅதிபர் திணைக்களம் உள்ளிட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி ஹபாயா விவகாரத்தில்,மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆசிரியை பஹ்மிதா றமீஸ் தாக்கல் செய்திருந்த எழுத்தாணை உத்தரவு கோரும் (Writ) வழக்கு அண்மையில் முடிவிற்கு வந்தது.

கலாசார ஆடையோடு பாடசாலைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டுமென, ஆசிரியை பஹ்மிதா மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அதேநேரம் தனது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தியமைக்காக கல்லூரியின் அதிபர் லிங்கேஸ்வரி ரவிராஜனுக்கு எதிராக குற்றவியல் வழக்கையும் குறித்த ஆசிரியை தாக்கல் செய்திருந்தார்.

அதிபருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சமரச அடிப்படையில் முடிவுக்கு வந்ததிருந்தது.

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

பொதுப் பட்டமளிப்பு 2023 (I)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா 2023 (I), 2023 டிசம்பர் 13 மற்றும் 14 ஆகிய இருதினங்களிலும் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) நடைபெறும். பட்டம்பெற இருப்போருக்கான பட்டதாரி விண்ணப்ப படிவம் தபால் மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பூரணமான பட்டதாரி விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 19 நவம்பர், 2023 ஆகும்.

மேலதிக தகவல்களை https://ou.ac.lk/2023convo1 எனும் இணையத்தளத்திற்கு சென்று பார்வையிடவும்.

விசாரணைகளுக்கு : 011-2881040 / 461 / 350

பதிவாளர்
16 நவம்பர் 2023

சிவனொளிபாதமலை யாத்திரையில்

## பொலித்தீன், பிளாஸ்டிக் எடுத்துச் செல்ல கட்டுப்பாடு

சிவனொளிபாதமலை யாத்திரைக் காலம் டிசம்பர் மாதம் போயா தினத்தில் ஆரம்பமாகிறது.இக்காலத்தில்,பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் கொண்டு செல்வதை கட்டுப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தெரிவித்தார். ஒவ்வொரு யாத்திரை காலத்தின் முடிவிலும் நூற்றுக்கணக்கான தொன் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக்கள் ஸ்ரீபாத மலை சுற்றுச்சூழலில் சேர்கின்றன.இதனால்,இவற்றை அகற்றுவதற்கு மஸ்கெலியா பிரதேச சபைக்கு நுவரெலியா மாவட்ட செயலகம் வருடாந்தம் 02 மில்லியன் ரூபாவை வழங்குவதாகவும் அவர் கூறினார். சிவனொளிபாதமலை சுற்றுச்சூழலில் சேரும் பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரிக்க முடியாதுள்ளது. இதனால், கழிவுகளில் சில பகுதி சுற்றுச்சூழலில் சேர்கின்றன. இந்நிலையில், இவை சிதைவடையாததால் சுற்றுச்சூழலும், அங்கு வாழும் விலங்குகளும் கடுமையாக பாதிக்கப்படுவதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

எரிபொருள் பற்றாக்குறை

## காசா பிரதான ஆஸ்பத்திரியில் இருநூறு நோயாளர் உயிரிழப்பு

காசா நகரம் உள்ளிட்ட காசாவின் பல பகுதிகளில் ஹமாஸ் தரப்பினருக்கும் இஸ்ரேல் இராணுவத்தினருக்கும் இடையேயான மோதல் தொடர்கிறது. காசாவிலுள்ள பிரதான வைத்தியசாலையில் எரிபொருள் பற்றாக்குறையால், 200 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் ஹமாஸ் தரப்பினரின் பாராளுமன்றம் மற்றும் நகரத்திலுள்ள ஏனைய கட்டடங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது. அத்துடன் வடக்கு காசாவின் கட்டுப்பாட்டை ஹமாஸ் தரப்பினர் இழந்து விட்டதாகவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேநேரம் அல்ஷிபா வைத்தியசாலையில் ஹமாஸ் தரப்பினரின் கட்டளை மையம் இயங்குவதாக உளவுத்துறையினர் உறுதிப்படுத்தியுள்ளனர். எனினும் ஹமாஸ் தரப்பினர் இதனை மறுத்துள்ளனர்.

வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம்

## ஜெனீவாவில் இணங்கியதை அரசு நிறைவேற்ற வேண்டும்

வடக்கிலிருந்து புலம்பெயர நேரிட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாண முறையான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,



"வடக்கிலிருந்து புலம்பெயரச் செய்யப்பட்ட முஸ்லிம்களின் சவால்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை. 33 வருடங்கள் கடந்தும் முறையான வேலைத்திட்டங்கள் வகுக்கப்படவும் இல்லை. மீளக்குடியேறும் இம்மக்களின் முயற்சிகளை அங்குள்ள அரச அதிகாரிகளும் ஒரு சில அரசியல்வாதிகளும் தடுத்து நிறுத்தவே முயற்சிக்கின்றனர் என்றார்.

## முஸ்லிம் சமய கலாசார பணிப்பாளருடன் சந்திப்பு

பஹன மீடியா நிறுவனத்தின் தலைவர் செய்யத் சாலிம் மௌலானா மற்றும் முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் இஸட்.ஏ.எம். பைசல் ஆப்தீன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று நேற்று (15) முஸ்லிம் கலாசார திணைக்களத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது சமயத்தலைவர்களுக்கு ஊடகத்துறை தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் மஸ்ஜிதுகளை சமூக முன்னேற்றத்துக்கான மத்திய நிலையங்களாக செயற்படுத்துவதற்கு அதன் நிர்வாகிகளை பயிற்றுவிப்பது மற்றும் அறிவூட்டல் தொடர்பான விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன.



அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகளின் ஏல விற்பனை

DFCC வங்கி பி.எல்.சி.யின் சகல கிளைகளிலும் 2022 செப்டெம்பர் 01 ஆம் திகதி வரை அடகு வைக்கப்பட்டு 2023 ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை மீட்கப்படாத தங்க நகைகள் பின்வருமாறு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்:

| உத்தேச திகதியும் நேரமும் | இடம் |
| --- | --- |
| 2023 நவம்பர் 25<br>மு.ப. 10.00 | வெள்ளவத்தை கிளைக் கட்டிடம்<br>இல. 02, 33ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.<br>நீர்கொழும்பு கிளைக் கட்டிடம்<br>இல. 454, பிரதான வீதி, நீர்கொழும்பு. |

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஏதேனுமொன்றில் ஏல விற்பனையை நடத்தவும் ஏல விற்பனைகளை இரத்துச்செய்ய அல்லது ஒத்திவைக்கவும் வங்கிக்கு உரிமை உள்ளது.

உதவி துணைத் தலைவர் - நுகர்வோர் சேவைகள்
DFCC வங்கி பி.எல்.சி.,
இல. 73/5, காலி வீதி, கொழும்பு 03.

0112 350000 www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
செவ்வாய் 2023.11.14
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5298
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,748,960.00
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 3 5 3 9 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3540
சீட்டிழுப்பு திகதி 2023.11.14
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,539,009.60
ஆங்கில எழுத்து E
வெற்றி இலக்கங்கள் 01 08 49 64
விசேட எழுத்து E
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 35295

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1646
2023.11.14
59043
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 414,544,996.00
ஆங்கில எழுத்து V
சுப்பர் இலக்கம் 20
வெற்றி இலக்கங்கள் 13 21 55 69
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7
திகதி 2023.11.14
சீட்டிழுப்பு இலக்கம் 0124
வெற்றி இலக்கினம் துலாம்
வெற்றி இலக்கங்கள் 0 3 4 9 3 9
L7 இலக்கம் 2 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ராசி சுப பலன்
திகதி 2023.11.14
சீட்டிழுப்பு இலக்கம் 607
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,210,704.00
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 12 16 26 29
தனயோக இலக்கம் 55355
நாளுக்கான விதி எண் 21

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1328
2023.11.14
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 120,418,308.80
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 02 19 29 34
விசேட எழுத்து T
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 25704

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 30ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஜுமாதல் ஊலா பிறை 01

## குறள் தரும் சிந்தனை



பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்

*பல அரசுகளின் நிழல்களைத் தமது குடைநிழலின் கீழ் கொண்டு வரும் வலிமை பெற்றவர்கள் உழவர்கள்.*

# சீரற்ற காலநிலையினால் தீவிரமடையும் டெங்கு!

நாட்டில் கடந்த சில மாதங்களாக சீரற்ற காலநிலை நிலவி வருகிறது. இக்காலநிலையைப் பயன்படுத்தி சில நோய்கள் தீவிரமடையக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. அவ்வாறான நோய்களில் நுளம்புகள் காவிப்பரப்பும் டெங்கு வைரஸ் நோயும் ஒன்றாகும்.

அந்த வகையில் தற்போதைய மழைக்காலநிலையைப் பயன்படுத்தி டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தில் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்நிலையில் இவ்வருடம் ஜனவரி முதல் இற்றை வரையும் டெங்கு நோய்க்கு உள்ளானவர்களாக 70 ஆயிரத்து 178 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனரென சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்பு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்நோய் காரணமாக இற்றைவரையும் 43 பேர் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ள அப்பிரிவு, இம்மாதத்தின் முதல் 10 நாட்களிலும் 1685 பேர் டெங்கு நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதன்படி, தற்போதைய சீரற்ற காலநிலையைப் பயன்படுத்தி டெங்கு நோயைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கம் பெரிதும் அதிகரித்திருப்பது தெளிவாகிறது.

டெங்கு வைரஸானது சுயமாகப் பரவக்கூடிய ஒன்றல்ல. அதன் பரவுகைக்கு காவி மிகவும் அவசியமானது. காவியின்றி அவ்வவைரஸினால் பரவ முடியாது. அதேபோன்று விரும்பும் உயிரினங்கள் எல்லாம் காவியாகத் தொழிற்படவும் முடியாது.

மாறாக நுளம்பினத்தில் காணப்படும் அனோப்பிளஸ் எஜிப்டைய் என்ற நுளம்பினம் மாத்திரமே டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் தன்மையைக் கொண்டிருக்கிறது. அதற்கு தேவையான சாதக தன்மைகளை இவ்வின நுளம்புகள் கொண்டிருக்கின்றன.

இந்நுளம்புகள் தெளிந்த நீரில் முட்டையிட்டு பல்கிப் பெருகக்கூடியன. அதனால் தற்போதைய காலநிலையில் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்கிக் காணப்படுவது இவ்வின நூளம்புகளின் பெருக்கத்திற்கு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. குறிப்பாக வீட்டுச் சூழலிலும் சுற்றாடலிலும் சேருகின்ற கைவிடப்பட்ட சிரட்டைகள், டயர்கள், உடைந்த மட்பாண்டங்கள், பொலித்தீன் உறைகள், பொலித்தீன், பிளாஸ்ரிக் மற்றும் கண்ணாடிப் பொருட்கள் அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும்.

இவ்வாறான திண்மக் கழிவுப் பொருட்கள் முறையாகவும் சீராகவும் அப்புறப்படுத்தப்படாது காணப்படும் பிரதேசங்களில் மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்கிக் காணப்படுவதை அவதானிக்கலாம். அவற்றை டெங்கு வைரஸை காவிப்பரப்பும் நுளம்புகள் தங்களுக்கு சாதமாகப் பயன்படுத்தி பல்கிப் பெருகுகின்றன. இந்நுளம்புகளின் பெருக்கத்தை சீராவும் ஒழுங்குமுறையாகவும் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும்.

அதாவது மழைநீர் உள்ளிட்ட தெளிந்தநீர் தேங்க முடியாதபடி வீட்டையும் சுற்றாடலில் சேரும் நீர் தேங்கக்கூடிய திண்மக் கழிவுப் பொருட்களையும் சீராகவும் தொடராகவும் அப்புறப்படுத்த வேண்டும். சுற்றாடலை உலர் நிலையில் பேண வேண்டும். அப்போது இவ்வின நுளம்புகள் பல்கிப் பெருக வாய்ப்பிராது. அப்போது இவ்வைரஸை காவிப்பரப்புவதற்கு ஊடகம் இல்லாத நிலை ஏற்பட்டு விடும்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி மாவட்டங்கள் அடங்கலாக நாட்டிலுள்ள 43 மருத்துவ அதிகாரி அலுவலகப் பிரிவுகள் டெங்கு வைரஸ் அச்சுறுத்தல் மிக்க பிரதேசங்களாக விளங்கிக் கொண்டிருப்பதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புக்கான கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. இது ஆரோக்கியமான நிலைமை அல்ல. அதனால் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்த வேண்டிய தேவை பரவலாக எழுந்துள்ளது. அதனால் வீட்டிலும் சுற்றாடலிலும் சேருகின்ற திண்மக் கழிவுப் பொருட்களை முறையாகவும் தொடராகவும் அப்புறப்படுத்துவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இதன் நிமித்தம் வாரத்திற்கு ஒரு தடவையாவது சிரமதானப் பணிகளை முன்னெடுப்பது நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

அதேநேரம் இன்றைய நாட்களில் காய்ச்சலுடன் கூடிய அறிகுறிகளைக் கொண்டிருப்பவர்கள் கவனயீனமாகவோ, அசிரத்தையுடனோ நடந்து கொள்ளக்கூடாது. தாமதியாது தகுதியான மருத்துவரை அணுகி மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் அவ்வறிகுறியுடன் கூடிய நோய் டெங்கு வைரஸ் காய்ச்சலாகக்கூட இருக்கலாம் என்பதுதான் மருத்துவர்களின் அபிப்பிராயமாகும்.

ஆகவே சுற்றாடலை சுத்தமாகவும் உலர் நிலையிலும் வைத்துக்கொள்வதன் மூலம் டெங்கு வைரஸைக் காவிப்பரப்பும் நுளம்புகளின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். அதன் ஊடாக டெங்கு வைரஸ் தாக்கத்தை குறைத்துக் கட்டுப்படுத்தி விடலாம். அத்தோடுகாய்ச்சல் அறிகுறிக்கு உரிய நேர காலத்தில் சிகிச்சை பெற்றுக்கொள்வதன் மூலம் டெங்கு வைரஸ் தாக்கமாயின் அதனை முழுமையாகக் குணப்படுத்திக் கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# கல்முனையில் மலையகம் 200 கண்காட்சி: தமிழ், முஸ்லிம் மக்கள் பெருமளவில் வருகை

இலங்கையில் தனித்துவமாக வாழ்கின்ற மலையக மக்கள் சமூகத்தின் வரலாறு இவ்வருடத்துடன் 200 வருடங்களை பூர்த்தி செய்வதை முன்னிட்டு மலையக மக்களின் வரலாற்றை நினைவு கூருகின்ற 'மலையகம் 200 கண்காட்சி' கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம், அம்பாறை மாவட்ட உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஒன்றியம் ஆகிய அமைப்புகளின் ஏற்பாட்டில் கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் இருநாள் நிகழ்வாக அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு கண்காட்சிகூடத்தைத் திறந்து வைத்தார். மலையகம் 200 நிகழ்வு, அதன் நோக்கம், குறிக்கோள் மற்றும் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் பி. முத்துலிங்கம் இங்கு தெளிவுபடுத்தினார்.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்ரம இங்கு உரையாற்றும் போது, "மலையக மக்களின் வாழ்வியல் அம்சங்கள் ஜனநாயக நீரோட்டத்தில் பார்க்கப்பட வேண்டும். மலையக மக்களைப் பொறுத்த வரை அவர்களுடைய உரிமையை பெற்றுக் கொள்வதற்காக பல போராட்டங்களை செய்தே அதனை பெற்றுக் கொள்கிறார்கள்.

இன்றைய இந்த மலையகம் 200 கண்காட்சி என்பது வெறும் படங்களாக மாத்திரம் இருக்காமல் எமக்கு வரலாற்றுப் பதிவுகளை காண்பித்துள்ளது. இன்றைய இளைய சமூகத்திற்கு இது மிகவும் பெறுமதி வாய்ந்ததாகும். சமூக மட்டத்திலே இருக்கின்றவர்கள் இவற்றை இன்னும் ஆய்வு செய்வதற்கான ஒரு ஆவணமாக இந்தக் கண்காட்சி அமைந்திருக்கிறது. இதனை ஏற்பாடு செய்தோருக்கு நான் நன்றி தெரிவிக்க வேண்டும். இலங்கை பல்லின சமூகம் வாழ்கின்ற நாடாகும். இந்த நாடு அழகான சிறந்த நாடாகவும் பொருளாதார ரீதியில் வளமிக்க ஒரு நாடாகவும் முன்னோக்கி செல்ல வேண்டுமாக இருந்தால் இன வேறுபாடுகளை மறந்து நாம் எல்லோரும் இலங்கையர் என்ற உணர்வோடு ஒருவரை ஒருவர் மதித்து மற்றவருடைய உரிமைகளை ஏற்றுக் கொண்டு எல்லோருக்கும் சம அந்தஸ்து, சம உரிமைகளோடு வாழ வேண்டும்" என்று குறிப்பிட்டார்.



சமூக அபிவிருத்தி நிறுவகம் (ISD) மலையக மக்களின் வரலாற்றை கூறுவதன் ஊடாக மலையக மக்கள் முகம் கொடுக்கின்ற பாரபட்சங்கள், புறக்கணிப்புகள், ஒதுக்குதல்களை பொதுவெளியில் கொண்டு வந்து அதனுடாக ஆட்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுக்கு அழுத்தம் கொடுக்க முனைகிறது. இதன் மூலம் இம்மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணும் முயற்சியில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகிறது.

மலையக மக்களின் உரிமை முறைகள் தொடர்பாக சமூக அபிவிருத்தி நிறுவகம் கடந்த 30 வருட காலமாக பல முயற்சிகளை மேற்கொண்டு ஒருசில வெற்றிகளையும் கண்டுள்ளது.

இது தொடர்பாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மலையகம் 200 கண்காட்சி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

கல்முனையில் நடைபெற்ற மலையகம் 200 கண்காட்சியில் அம்பாறை மாவட்ட முன்னாள் மேலதிக அரசாங்க அதிபரும் நிந்தவூர் பிரதேச செயலாளருமான சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப், அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரி பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி, சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஜனா, பிராந்திய இணைப்பாளர் எம்.எஸ். ஜலீல், நல்லிணக்கத்திற்கான ஒன்றியத்தின் இணைப்பாளர் எம்.ஐ.றியால், எஸ்.எல்.அஸீஸ் மற்றும் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், நல்லிணக்க ஒன்றியத்தின் உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனத்தின் மாவட்ட இணைப்பாளர் ஐ.எல்.இர்பான், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச மட்டத்திலான மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி பயிலுனர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், கிராம மட்ட அமைப்புகளின் முக்கியஸ்தர்கள், தொண்டர் குழுவினர், ஊடகவியலாளர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



**ஏ.எல்.எம்.ஷினாஸ்...**
*(பெரியநீலாவணை விசேட நிருபர்)*

# காஸாவில் யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு சவுதி அரேபியா உச்சிமாநாட்டில் வலியுறுத்தல்

காஸா மீதான மனிதாபிமானமற்ற கொடூர யுத்தத்தை வன்மையாகக் கண்டித்துள்ள அரபு, இஸ்லாமிய நாடுகள், 'யுத்தம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், அங்கு மனிதாபிமான உதவிகள் தங்கு தடையின்றி அனுப்பி வைக்கப்பட வேண்டும், கைதிகளும் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளவர்களும் நிபந்தனைகளின்றி விடுவிக்கப்பட வேண்டும்' என வலியுறுத்தியுள்ளன.

அரபு, இஸ்லாமிய நாடுகளது அவசர உச்சிமாநாடு சவுதி அரேபியாவின் தலைநகர் ரியாத்தில் அந்நாட்டின் பிரதமரும் பட்டத்து இளவரசருமான முஹம்மத் பின் சல்மான் தலைமையில் கடந்த 11 ஆம் திகதி நடைபெற்றது. அம்மாநாட்டின் போதே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஈரான், துருக்கி, கட்டார், இந்தோனேசியா உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் பங்குபற்றிய இம்மாநாட்டில் 31 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி காஸா மீதான யுத்தத்தை இஸ்ரேல் வான் வழித்தாக்குதல் ஊடாக ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து தண்ணீர், எரிபொருள், மருந்துப்பொருட்கள், உணவு என்பவற்றின் விநியோகம் தடுத்து நிறுத்தப்பட்டதோடு, முழு அளவிலான யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. இதன் விளைவாக 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் ஐயாயிரம் பேர் குழந்தைகளாவர். 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

பள்ளிவாசல்கள் அடங்கலான சமய வழிபாட்டு தலங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், மக்கள் குடியிருப்புக்கள், அகதி முகாம்கள் என அனைத்தும் இந்த யுத்தத்திற்கு இலக்காகியுள்ளன. அதனால் காஸாவே சாம்பல் மேடாகக் காட்சியளிக்கிறது.

இந்நிலையில் காஸா உட்பட பலஸ்தீனின் நிலைமை குறித்து ஆராய்வதற்காக அரபு, இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் அவசரமாக சவுதியில் கூடினர். 57 முஸ்லிம் நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புக்கும், அரபு லீக் அமைப்புக்கும் தற்போது சவுதி அரேபியா தலைமை வகிப்பதால், இரு அமைப்புக்களதும் காஸா விவகாரம் தொடர்பான மாநாட்டை ஒன்றாக நடத்துவதற்கு இம்மாநாட்டின் ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் ஸஊத், காஸா மீதான யுத்தத்தையும், அப்பாவிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும், மக்களை பலவந்தமாக வெளியேற்றும் முயற்சிகளையும் கடுமையாகக் கண்டித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், 'பிராந்தியத்தின் பாதுகாப்பு, அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை அடைவதற்கான ஒரே வழி ஆக்கிரமிப்பு, முற்றுகை மற்றும் குடியேற்றத்தை முடிவுக்குக் கொண்டு வருதலாகும். அத்தோடு பலஸ்தீனிய மக்களின் நியாயமான உரிமைகளை உறுதிப்படுத்தல், கிழக்கு ஜெருசலத்தை உள்ளடக்கி 1967 எல்லைக்குள் தங்களது சுதந்திர அரசை பலஸ்தீனியர்கள் நிறுவ வழிவகுத்தல் என்பவற்றிலும் நாங்கள் உறுதியாக உள்ளோம். அதன் ஊடாகத் தான், பிராந்தியத்தினதும் ஏனைய நாடுகளினதும் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையின் நிலைத்தன்மையை உறுதி செய்ய முடியும்.

காஸா மீதான ஆக்கிரமிப்பையும் அங்கு வாழும் மக்களின் பலவந்த வெளியேற்றத்தையும் சவுதி அரேபியா திட்டவட்டமாக நிராகரிக்கின்றது. பலஸ்தீனிய மக்களின் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் குற்றங்களுக்கு இஸ்ரேலே பொறுப்பேற்க வேண்டும். இத்துரதிர்ஷ்டகரமான சூழ்நிலையை எதிர்கொள்ளவும் நடவடிக்கைகளை திறம்படக் கையாளவும் எமக்கிடையில் ஒருங்கிணைந்த கூட்டு முயற்சி மிகவும் அவசியம். காஸாவில் நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் உரிய மருத்துவ சிகிச்சைகளை முன்னெடுக்கவும் மனிதாபிமான மற்றும் நிவாரண உதவிகளைக் கொண்டு சேர்க்கவும் ஒன்றிணைந்து செயல்பட அனைத்து தரப்பினருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.






சர்வதேச சட்டங்களையும் விதிமுறைகளையும் மாத்திரமல்லாமல் மனிதாபிமான சட்டங்களையும் இஸ்ரேல் மீறுவதற்கு முற்றுப்புள்ளி வைக்க ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலும் சர்வதேச சமூகமும் தோல்வியடைந்துள்ளன. பலஸ்தீனத்தில் நிராயுதபாணிகளான பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் மற்றும் முதியோர்கள் அநியாயமான முறையில் கொல்லப்படுவதையும் வழிபாட்டுத் தலங்கள் மற்றும் உள்கட்டமைப்புகள் அழிக்கப்பட்டுவதையும் நாங்கள் கண்டித்து திட்டவட்டமாக எமது நிராகரிப்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இம்மாநாட்டில் பங்குபற்றிய நாடுகளின் தலைவர்கள் காஸாவில் உடனடி மனிதாபிமான யுத்தநிறுத்தத்தை தம் உரைகளின் ஊடாக வலியுத்தியதோடு காஸாவுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகளை உடனடியாக அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர். இம்மாநாட்டில் 31 தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அந்த தீர்மானங்களில், அல்குத்ஸ் அல்ஷரீப் உட்பட காஸா பகுதி மற்றும் மேற்குக் கரையில் பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்களும் மக்களை பலவந்தமாக வெளியேற்றும் முயற்சிகளும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் ஏகமானதாகக் கண்டிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஆக்கிரமிப்பை நிறுத்தி பலஸ்தீனிய மக்களின் உரிமைகளையும், அவர்களது சுதந்திரத்தையும் அதற்கான உரிமைகளையும் பறிக்கும் அனைத்து செயற்பாடுகளும் உடனடியாக முடிவுக்கு கொண்டு வரப்படுவதோடு அவர்களுக்கு முழுமையான இறையாண்மை கொண்ட அரசு பலஸ்தீனில் உருவாக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனிய விவகாரம், ஆக்கிரமிக்கப்பட்ட அரபு பிரதேசங்கள் தொடர்பில் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பும் முஸ்லிம் லீக்கும் ஏற்கனவே எடுத்துள்ள அனைத்து முடிவுகளும் அமுல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக 1967 ஜுன் 4 ஆம் திகதி எடுக்கப்பட்ட தீர்மானப்படி புனித ஜெருசலத்தை தலைநகராகக் கொண்டு அவர்களின் சுதந்திரமானதும், இறையாண்மை கொண்டதுமான அரசியல் உரிமை கண்டிப்பாகக் கிடைக்கப்பெற வேண்டும்.

இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை முடிவுக்குக் கொண்டு வந்து பலஸ்தீன பிரச்சினைக்கு இரு நாடுகள் என்ற அடிப்படையில் தீர்வு அளிக்கப்பட வேண்டும். கிழக்கு ஜெருசலம் உட்பட ஆக்கிரமிக்கப்பட்ட அனைத்து பலஸ்தீனிய பிரதேசங்களிலும் பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் முன்னெடுத்துவரும் போர்க்குற்றங்களையும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களையும் உடனடியாக விசாரணை செய்யத் தொடங்குமாறு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் நாயகம் இம்மாநாட்டின் ஊடாகக் கோரப்பட்டுள்ளார். இதன் நிமித்தம் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தலைமைச் செயலகம் மற்றும் முஸ்லிம் லீக் ஆகியவற்றை உள்ளடக்கி சிறப்பு சட்ட கண்காணிப்பு பிரிவை நிறுவவும் முடிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த மாநாடானது காஸா மற்றும் பலஸ்தீன விவகாரம் தொடர்பில் பரந்த கண்ணோட்டத்துடன் இத்தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கு அடுத்தபடியாக அதிக நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்புக்கள் எடுத்திருக்கும் தீர்மானங்கள் காஸா மீதான யுத்தத்திலும் சர்வதேச மட்டத்திலும் பாரிய திருப்புமுனையாக அமையும் எனலாம்.



அஷ்ஷேக்
**எம்.எச்.ஷேஹுத்தீன்**
மதனீ (பி.ஏ), பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்
கொழும்பு

# National Innovation Challenge போட்டிக்கான தனது கூட்டாளர்களை அறிவித்துள்ள Dialog

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கையின் முன்னணி இணைப்பு வழங்குனர், Dialog Innovation Challenge இற்கான தனது கூட்டாளர்களை அறிவித்தது. நாட்டை டிஜிட்டல் தொழில்நுட்பம் நோக்கி இட்டுச்செல்லும் வல்லமை படைத்த புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வலுப்படுத்துவதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம் (IESL), இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு (SLIC) மற்றும் தேசிய கண்டுபிடிப்பு முகவர் நிறுவனம் (NIA) ஆகியவை தொழில்நுட்ப சுற்றுச்சூழல் பங்குதாரர்களாக கைகோர்க்கின்றன. வர்த்தக அறிவு கூட்டாளர்களாக, இலங்கை வர்த்தக சம்மேளனம் (CCC), இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம் (SLIM), மற்றும் இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சங்கம் (DMASL) ஆகியவை இந்த முன்னெடுப்புக்கு இணையற்ற தொழிற்துறை அறிவை அளிக்கின்றன.

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் மலிக் ரணசிங்க இந்த கூட்டாண்மை குறித்து பேசுகையில், “ICTA சார்பாக, Innovation Challenge இல் Dialog உடன் பங்காளியாக கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தனியார் அல்லது பொதுத் துறையாக இருந்தாலும், நல்லபடியான வெளிப்பாடுகளுக்கான ஒத்துழைப்பு மீது நாம் நம்பிக்கை வைத்துள்ளோம்” என்றார். டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்க கருத்துத் தெரிவிக்கையில், “தேசிய Dialog Innovation Challengeக்காக எமது மதிப்பிற்குரிய பங்காளிகளுடன் இணைந்து இந்த மாற்றங்கள் மிகு பயணத்தை மேற்கொள்வதில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் பங்காளிகளுடன் இணைந்து, இலங்கை முழுவதும் டிஜிட்டல் கண்டுபிடிப்புகளை இயக்க உள்ளோம்” என்றார்.



இடமிருந்து வலமாக விரங்க செனவிரத்ன (Ideamart சிரேஷ்ட பொது முகாமையாளர்_, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி), அர்ஜுன் ஜெகர் (துணைத்தலைவர், இலங்கை டிஜிட்டல் சந்தைப்படுத்தல் சங்கம்_DMASL), பேரா. ரஞ்சித் திசாநாயக்க(தலைவர், இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகம்_ IESL), பேரா. மலிக் ரணசிங்க(தலைவர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம்_ICTA), சுபுன் வீரசிங்க, (குழும பிரதம நிறைவேற்று அதிகாரி, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி) சனத் சேனாநாயக்க (பிரதம நிறைவேற்று அதிகாரி/ நிர்வாக இயக்குனர், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம்_SLIM), வரதராஜா குமரகுரு(சிரேஷ்ட திட்ட முகாமையாளர், இலங்கை வர்த்தக சம்மேளனம்_CCC), சிரில் சுடுவெல்ல(ஆணையாளர், இலங்கை கண்டுபிடிப்பாளர்கள் ஆணைக்குழு) கலாநிதி சச்சீ பணவல (மேலதிக பிரதம புத்தாக்க அதிகாரி, தேசிய கண்டுபிடிப்பு முகவர் நிறுவனம் _NIA)

Dialog Innovation Challenge நாட்டின் டிஜிட்டல் எதிர்காலத்திற்கு பங்களிக்குமாறு அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கிறது. AI, machine learning, IoT, blockchain மற்றும் பல போன்ற தொழில்நுட்பங்களை மேம்படுத்தும் புதுமையான தீர்வுகளை சமர்ப்பிக்க தனிநபர்களும் குழுக்களும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். ரூ. 5 மில்லியன் தாராளமான பரிசுத்தொகையுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்களுக்கு ரூ. 500 மில்லியன் DIF (Dialog Innovation Foundry) முதலீட்டு நிதியின் ஒரு பகுதியைப் பெறுவதற்கான வாய்ப்பு, வழிகாட்டுதல் மற்றும் டயலொக்கின் கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்புக்கான அணுகல் ஆகியன கிடைக்கப்பெறும்.

பங்கேற்பதற்கு, www.dialog.lk/ic ஐ பார்வையிடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பியதை போன்று கிரிக்கெட் துறையையும் கட்டியெழுப்ப முடியும்

## ஊடக நிறுவன பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி வலியுறுத்தல்

**நாட்டில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் வெற்றிப்பாதைக்குக் கொண்டுவர விரும்புவதாகவும், வீழ்ச்சியடைந்துள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்ப முடியுமாக இருந்தால் கிரிக்கெட் விளையாட்டையும் மீளக்கட்டியெழுப்ப முடியும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.**



ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் இடம்பெற்ற ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் குறித்து ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இந்தக் கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆசிரியர்கள் மற்றும் செய்திப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, இவ்வருட வரவு செலவுத் திட்டம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும் வரவு செலவுத் திட்டமாகும். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பும் இலக்கை ஏற்கனவே தான் நெருங்கி விட்டதாகவும், அரசியல் நோக்கின்றி அந்த இலக்கை அடைய எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

அரசியல் கட்சிகள் தேர்தலை இலக்கு வைத்து செயற்பட்டாலும் நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்பதே தனது முதல் கடமையாகும் எனவும் அதன் பின்னர் ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோர் 2024 வரவு செலவுத் திட்டம் மற்றும் அதன் அடிப்படை குறித்து இங்கு நீண்ட விளக்கமளித்தனர்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியதாவது:

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்லும் போது அரசாங்கச் செலவுகள் மட்டுப்படுத்தப்பட வேண்டும். அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் பல தீர்மானங்களை எடுத்துள்ளோம். மேலும், மத்திய வங்கியின் சட்டத்தின்படி இப்போது எமக்கு பணத்தை அச்சிடவோ வங்கிகளிடம் கடன் பெறவோ முடியாது. மேலும், அரசாங்கத்திற்கு பெறக்கூடிய கடன்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது நாம் பெருமளவு தொகை கடன்கள் செலுத்த வேண்டியுள்ளது.

குறிப்பாக, பௌத்த பொருளாதார தத்துவத்தின்படி அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். இப்போது வருவாயை உருவாக்கி முன்னோக்கிச் செல்ல வேண்டும். இதுவரை நம் நாட்டில் இருந்த பொருளாதார முறைமை வெற்றிபெறவில்லை. 1972 இல் முழுமையான சோசலிசப் பொருளாதாரம் பின்பற்றப்பட்டதோடு, 1977 இல் பொருளாதாரத்தின் ஒரு பகுதி திறந்து விடப்பட்டது. பொருளாதாரத்தை திறந்து அரச நிறுவனங்களை உருவாக்குவதன் மூலம் இதை அரசாங்க கட்டுப்பாட்டின் கீழ் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

இன்று சிங்கப்பூர், மலேசியா போன்ற முன்னேறிய நாடுகளின் பொருளாதாரம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து முற்றிலும் அகற்றப்பட்டு விட்டது. இந்த வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் இலங்கையில் மிகப்பெரிய தனியார்மயத்தை மேற்கொண்டு வருகின்றோம். அதாவது காணி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிலம் கையகப்படுத்திய விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு முழு உரிமையை வழங்க வேண்டும். மேலும் குறிப்பாக அரச அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கும் அந்த உரிமை வழங்கப்படும்.

நாட்டின் பொருளாதாரத்திற்காக 500 பில்லியன் முதல் 1 டிரில்லியன் ரூபாய் வரை சொத்துக்களை உள்ளடக்கியுள்ளோம். ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸினை விற்றாலும் இந்தச் சேவைகள் அனைத்தையும் சேர்த்தாலும் இந்தத் தொகை கிடைக்காது. இவற்றின் உற்பத்தியை இப்போது அதிகரிக்கலாம். நாங்கள் எடுத்துள்ள ஒரு பாரிய நடவடிக்கையாக நான் பார்க்கிறேன். இது இலங்கையின் மிகப்பெரிய தனியார்மயமாக்கலாகும்.

சாதாரண மக்களுக்கு நாங்கள் ஒருபோதும் நில உரிமையை வழங்கவில்லை. ஷங்ரில்லா ஹோட்டலுக்கு நில உரிமையை வழங்கினோம். ஆனால் இது சாதாரண மக்களுக்கு வழங்கப்படவில்லை. அந்த காணிகளை மக்களுக்கு வழங்குவதற்காகவே மகாவலி ஆரம்பிக்கப்பட்டது. சீ மற்றும் எச் வலயங்களில் உள்ள நிலம் மக்களுக்கு வழங்கப்படவில்லை. இப்போது இவை அனைத்தும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நாம் தற்போது ஆரம்பித்துள்ளோம். எங்களுக்கு மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த பொருளாதாரம் மற்றும் சந்தை தேவை என்பதால், RCEP அமைப்பைப் போன்றே இந்தியா மற்றும் பங்களாதேஷ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் எங்கள் சந்தையை விரிவுபடுத்த நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். நாம் ஒரு போட்டி பொருளாதாரமாக மாற வேண்டும். போட்டியற்ற வணிகங்கள் போட்டித்தன்மையுடன் இருக்க வேண்டும். அதற்காக நாம் தனியான உதவிகளை வழங்குகிறோம். பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் குறுகிய கால திட்டங்களாக விவசாயம் மற்றும் மீன்பிடித்துறை நவீனமயமாக்கல் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். விவசாயத்தை நவீனமயமாக்கினால், நாட்டில் பாரிய விவசாயப் பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

சுற்றுலாத்துறையின் ஊடாகக் கிடைக்கும் வருமானத்தை அதிகரிக்கவும் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை 05 மில்லியன்களாக அதிகரிக்கவும் எதிர்பார்த்திருப்பதோடு, டிஜிட்டல் பொருளாதார முயற்சிகளையும் அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. செயற்கை நுண்ணறிவுடன் முன்னோக்கிச் செல்லவும் எதிர்பார்க்கிறோம். இதுவரையில் அதுபற்றி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

அதற்கான மனித வளமும் அவசியப்படுகிறது. கல்வி முறையில் மாற்றம் செய்து அந்த தேவையை பூர்த்தி செய்துகொள்ள எதிர்பார்க்கிறோம். அரச மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களை புதிதாக ஆரம்பிப்பதற்கு அவசியமான சட்டங்கள் உருவாக்கப்படும். பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறவிடப்படும் பட்சத்தில் அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு கடன் தொகையும் வழங்கப்படும். அதேபோல் தொழிற் பயிற்சித்துறையை மறுசீரமைத்து மாகாண சபைகளின் கீழ் நடத்திச் செல்ல எதிர்பார்க்கிறோம்.

மாகாண சபைகளுக்கு ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு பங்களிப்புச் செய்வதற்கு காணப்பட்ட தடை நீக்கப்பட்டுள்ளது. புதிய தொழில் வாய்ப்புக்களும் வருமான வழிமுறைகளும் உருவாக்கப்பட வேண்டும்.





## நாட்டின் பொருளாதார மற்றும் அரசியல் போக்கை மாற்றும் மறுசீரமைப்புத் திட்டத்திற்கு அனைவரின் ஆதரவும் அவசியம்

அந்த பணிகளை 2030க்குள் செய்து முடிக்க வேண்டும். 2024 ஆம் ஆண்டில் நாம் புதிய பொருளாதார வேலைத்திட்டங்களை ஆரம்பிப்போம்.

அதேபோல் 21 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் ஊடாக ஆணைக்குழுக்கள், பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பல்வேறு அறிக்கைகள் எனக்குக் கிடைத்துள்ளன. அதனால், நிறைவேற்று அதிகாரத்தின் செயற்பாடுகளுக்கு பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பும் கிடைக்கிறது.

ஊழல் ஒழிப்புக்கான சட்டத்தை நிறைவேற்றிக் கொண்டுள்ள அதேநேரம், தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து அரசியலமைப்புச் சபையினால் அதற்கான அங்கத்தவர்கள் நியமிக்கப்படும் வரையில் காத்திருக்கிறோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளுக்கு அமைவாக 'அரச நிர்வாக பகுப்பாய்வு' செயற்பாடுகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. அந்த அறிக்கை சிங்களம், தமிழ் மொழிகளில் கிடைத்தவுடன் அதனை செயற்படுத்துமாறு அறிவிப்போம்.

அதனை மேற்பார்வை செய்வதற்கான பாராளுமன்றத்தில் மேற்பார்வைக் குழுவொன்றை நிறுவ உள்ளோம். மோசடி தொடர்பில் தேடியறிந்து அதனை கட்டுப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

ஐக்கிய இராச்சியத்தில் செய்யப்பட்டதை போன்று பாராளுமன்ற தரநிலை தொடர்பான வரைபை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

அதனால், நாட்டில் காணப்படும் அரசியல் முறையை தொடர்ந்தும் முன்னெடுப்பதா அல்லது மாற்றங்கள் அவசியமா என்பதை தேடியறிவதற்கான ஆணைக்குழு ஒன்றினை நியமித்துள்ளோம்.

அரசியல் கட்சிகள் உரிய வகையில் செயற்படாவிட்டால் ஜனநாயகம் இருக்காது. எனவே அரசியல் கட்சிகளை நிர்வகிப்பது எப்படி, தேர்தல் சட்டம் மற்றும் செலவீனங்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்று தேடிப்பார்க்க வேண்டியது அவசியமாகும்.

அதேபோல், ஜனசபை முறைமையை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கிறோம். ஒரு வருடத்திற்கும் பல்வேறு துறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அந்த சூழலிலேயே தற்போதைய வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது".

பொருளாதார அலுவல்கள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எச்.சமரதுங்க குறிப்பிட்டதாவது:

இலங்கைப் பொருளாதாரத்தின் முழுமையான தரவுகள் எம்மிடம் இல்லை. 2022 இல் நாட்டின் பொருளாதார மந்தநிலை பற்றிய தரவுகளே எங்களிடம் உள்ளன. கடந்த வருடம் நாட்டின் பொருளாதாரம் 7.3 சதவீதமாக முடங்கியது. இந்த வருடத்திலும் பொருளாதாரம் 2% ஆக முடங்கியது.

ஆனால், 2024 பொருளாதாரம் வளர்ச்சி காணும் என சர்வதேச நிதி நிறுவனங்கள் அறிவித்துள்ளன. அந்த வகையில், 1.8% நேர் பெறுமதியிலான வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது. எவ்வாறாயினும் பொருளாதார மந்தநிலையில் இருந்து மீண்டு வந்துள்ளோம் என்பதை புள்ளிவிவரங்கள் உறுதிபடுத்தியுள்ளன.

2022 ஏப்ரல் மாதமளவில் நாட்டின் கையிருப்பு 24 மில்லியன் டொலர்களாக காணப்பட்டது. தற்போதைய அரசாங்கம் அதனை 3.5 பில்லியன் டொலர்களாக அதிகரிக்கச் செய்துள்ளது. அடுத்த வருடம் அடிப்படைக் கணக்கில் அதிகரிப்பைக் காண முடியும் என எதிர்பார்க்கப்படுவதோடு. கடன் மீள் செலுத்துகையின் போது அடிப்படைக் கணக்கு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

வாகன இறக்குமதி தவிர்ந்த ஏனைய கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன. வெளிநாட்டு கையிருப்பும் வரையறுக்கப்படவில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட 2023 உடன்படிக்கையின் படி உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு நிறைவு செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு, பேச்சுவார்த்தை மட்டத்தில் உள்ளது. இது வரையிலான அனைத்து பேச்சுவார்த்தைகளும் வெற்றியளித்துள்ளன.

இருதரப்பு கடன்கள் மற்றும் இறையாண்மை பத்திர கடன்கள் கடந்த இரண்டு வருடங்களாக அரசாங்கத்தால் செலுத்தப்படவில்லை. வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடம் பெற்ற கடன்கள் தொடர்ந்து திருப்பிச் செலுத்தப்பட்டன. செலுத்தப்படாத தொகை எஞ்சியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டின் பின்னர் மேற்படி கடன் தொகையை செலுத்த முடியும்.

அடுத்த வருடம் 4127 பில்லியன் வருமானம் அரசாங்கத்திற்கு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. செலவு 6978 பில்லியன் ரூபாகவும் பட்ஜெட் இடைவெளி 8% என்ற குறைந்த அளவில் உள்ளது. பணம் அச்சிடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாமல் போயுள்ளது. அரச வங்கிகளின் கடன் வழங்களுக்கும் கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் நிதி முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு பணத்தைத் தேட வேண்டிய அவசியம் ஏற்படும். சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கத்துக்கமைய கடன் பெறுதலின் போது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அரசாங்கத்தின் செலவினங்களுக்கு ஏற்றவாறு பணத்தை ஈட்டிக்கொள்ள வேண்டிய தேவை உருவாகும்.

சர்வதேச நிதியத்தின் 4 வருட வேலைத் திட்டத்திலும் வரவு செலவுத் திட்டத்திலும் அதற்கு அவசியமான யோசனைகள் முன்மொழியப்பட்டுள்ளன. வரவும் செலவும் ஒரே அளவில் காணப்படுவதால், பெருமளவான மாற்று திட்டங்களுக்கு செல்ல முடியாது. சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்கு அமைய அந்த செயற்பாடுகளை முன்னெடுக்க சர்வதேச கடன் வழங்குநர்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அந்த வேலைத் திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த வேண்டுமாயின், சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. இது சாதாரண காலத்தில் இடம்பெற்ற வேலைத்திட்டம் அல்ல. பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த பின்னரே சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கப்பாடுகளை எட்டினோம். எனவே, சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்திற்கு வெளியே அரசாங்கம் செயல்பட முடியாது. பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டம், சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன், அது அரசாங்கத்தால் முன்மொழியப்பட்ட ஒரு வேலைத்திட்டமாகும். சர்வதேச நாணய நிதிய வேலைத்திட்டத்தின் மூலம் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் பணியே இடம்பெறுகின்றது. கடந்த 16 மாதங்களில், இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, சாதகமான முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

பொருளாதாரத்தை வலுப்படுத்தும் வகையில் இந்த வரவு செலவுத் திட்டத்தில் 85 முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதன் ஊடாக பொருளாதாரத்தை துரிதப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். புதிய பொருளாதாரத்திற்கு ஏற்ற வகையில் புதிய சட்டங்களை தயாரிக்கவும் அதில் முன்மொழியப்பட்டுள்ளது. உற்பத்திச் சந்தையில் உள்ள குறைபாடுகளுக்கு, புதிய முன்மொழிவுகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், தொழிலாளர் சந்தையை வலுப்படுத்துவது குறித்தும் பட்ஜெட் மூலம் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மூலதனச் சந்தைகள் மற்றும் நிலம் தொடர்பான பல்வேறு முன்மொழிவுகள் உள்ளன.

ஜனாதிபதி குறிப்பிட்டது போன்று நீண்டகாலமாக தீர்க்கப்படாத காணிகளின் உரிமையை மக்களுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு அவர்கள் வாடகை செலுத்த வேண்டியதில்லை. அதற்கான கணக்கெடுப்புகளை நடத்தி வருகிறோம். அந்த இரண்டு திட்டங்களின் நிதி ப் பெறுமதி சுமார் இரண்டு ட்ரில்லியன் ரூபாய். அந்த சொத்துக்கள் நாட்டின் சந்தையில் இணைக்கப்படுகிறது" என்றார்.

இங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு ஜனாதிபதி பதில் வழங்கினார்.

கேள்வி: கிரிக்கெட் அபிவிருத்திக்காக இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 1.4 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போது, விதிக்கப்பட்டுள்ள கிரிக்கெட் மீதான தடையை நீக்க உங்களிடம் ஏதேனும் வேலைத்திட்டம் உள்ளதா?

பதில்: சர்வதேச கிரிக்கெட் பேரவையுடனான கலந்துரையாடலை நடத்த கிரிக்கட் தொடர்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாம் இழந்த போட்டிகளை எப்படியாவது பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம். இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் பாடசாலை மாணவர்களின் திறமைகளை வளர்க்கும் வகையில் கிரிக்கெட்டுக்காக 1.4 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. மேல் மாகாணத்தில் அவ்வாறான பிரச்சினைகள் இல்லை. ஏனைய பிரதேசங்களிலும் கிரிக்கெட்டை வளர்க்க வேண்டும். 2030ஆம் ஆண்டு வரை இவ்வாறு பணம் ஒதுக்க எதிர்பார்க்கிறோம். அப்போது நாம் உலகில் முதல் இடத்தை அடைய முடியும்.

காமினி திசாநாயக்க முன்னெடுத்த வேலைத்திட்டத்தின் காரணமாகவே 1996ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றோம். அப்போது பாடசாலை கிரிக்கெட் வீரர்களுக்காக நான் பல்வேறு செயற்பாடுகளைச் செய்தேன். கார்பீல்ட் சோபஸ் இலங்கைக்கு வருகை தந்து எங்களுக்கு உதவினார். இந்த நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப முடியுமாயின் கிரிக்கெட்டையும் கட்டியெழுப்ப முடியும்.

கேள்வி: நவம்பர், டிசம்பர் மாதத்திற்குள் சர்வதேச கடன் மறுசீரமைப்பு முடிவடையும் என்று எதிர்பார்த்தாலும், அது இன்னும் நடக்கவில்லை. அதற்கு இன்னும் எவ்வளவு காலம் செல்லும்?

பதில்: நவம்பர் மாதம் இன்னும் முடியவில்லை. நாம் கடன் வழங்கும் நாடுகளுடன் கலந்துரையாடியுள்ளோம். அந்த நாடுகள் ஒவ்வொன்றும் வெற்றிகரமான ஆலோசனைகளை சமர்ப்பித்துள்ளன. அது தொடர்பில் நாம் சர்வதேச நாணய நிதியத்துடனும் கலந்துரையாட வேண்டும். ஆனால் அவர்களை மீண்டும் டிசம்பர் 6ஆம் திகதி தான் நாம் சந்திப்போம். எனவே டிசம்பர் மாதம் இறுதி வரை பார்ப்போம். இந்தக் கட்டத்தை வெற்றிகரமாகக் கடந்து அடுத்த கட்டத்திற்குச் செல்ல முடியும். ஏற்கனவே வெஸ்டன் மிலன், அதானி போன்ற முதலீட்டாளர்கள் வந்து முதலீடு செய்ய ஆரம்பித்துள்ளனர். தோல்வியடைந்த நாடு என்றால், இவ்வாறு முதலீட்டாளர்கள் வரமாட்டார்கள்.

கேள்வி: நீங்கள் முன்வைத்த வரவு செலவுத் திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் பதிலளித்துள்ளதா? சில தரப்பினர் கூறுவது போன்று வரவு செலவுத் திட்டத்தில் முழுமையாக சர்வதேச நாணய நிதியத்தின் முன்மொழிவுகள் தான் உள்ளதா?

பதில்: இல்லை. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து எனக்கு பதில் வரவில்லை. இலங்கை அரசாங்கத்திற்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் நாங்கள் செயற்பட்டுள்ளோம்.

வெகுசன ஊடக மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**இந்த ஆண்டுக்கான பட்ஜட் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியலை மாற்றியமைக்கும்; அரசியலை விடுத்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான வேலைத்திட்டத்தை வெற்றிகொள்வதே எனது நோக்கமாகும்**

(ஜனாதிபதி ஊடகப் பிரிவு)

# இன்றைய பலன்கள்

**( 16. 11. 2023 )**



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலயம் கொழும்பு)

**மேஷம்:**
போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் ஏற்படும். புனித பயணங்கள் அதிகரிக்கும்.



**ரிஷபம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும்.



**மிதுனம்:**
மனச்சோர்வு அதிகரிக்கும். எளிதில் முடிக்கக்கூடிய காரியங்கள் கூட மலைப்பாக தோன்றும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.



**கடகம்:**
தொழில் முன்னேற்றம் உண்டு. வியாபார போட்டிகள் அதிகரிக்கும் அதை சமாளிப்பீர்கள். குடும்பத்திற்காக அதிகம் செலவிட நேரிடும்.



**சிம்மம்:**
எதிர்பார்ப்புகள் எளிதில் நிறைவேறும். இல்லம் தேடி நல்ல தகவல் வந்து சேரும்.



**கன்னி:**
தைரியத்தோடும் தன்னம்பிக்கையோடும் செயற்படுவீர்கள். தர வரவு திருப்திகரமாக இருந்தாலும் விரயங்கள் அதிகரிக்கும்.



**துலாம்:**
நினைத்தது நிறைவேறும். நிகழ்கால தேவைகள் பூர்த்தியாகும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும்.



**விருச்சிகம்:**
தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும்.



**தனுசு:**
ஆரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை தேவை. அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் குறைவாகவே கிடைக்கும்.



**மகரம்:**
உடல்நலம் சீராகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். கடன் சுமை குறையும். கவலைகள் அகலும்.



**கும்பம்:**
லாபமும் விரையமும் சம அளவில் இருக்கும். செலவிற்கு முன்னதாகவே வரவு வந்து சேரும்.



**மீனம்:**
அதிக விரயங்கள் ஏற்படலாம். திடீர் திடீரென மாற்றங்களும் எதையும் அரைகுறையாக செய்து அவதிப்படும் சூழ்நிலையும் உண்டு.



# லண்டனில் மலையகம் – 200 சிறப்பு மாநாடும், ஓவியக் கண்காட்சியும் சனியன்று வெம்பிளியில்

தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் பெருந்தோட்டத்துறை பயிர் செய்கைக்காக மலைநாட்டு பகுதிகளுக்கு அழைத்து வரப்பட்ட மக்களின் 1823-2023 இருநூறு வருடங்கள் பூர்த்தியினை நினைவுகூரும் முகமாக லண்டனிலும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

அந்த வகையில் பிரித்தானியாவில் இயங்கும் Solidarity for Malayagam அமைப்பின் ஏற்பாட்டில் வரும் சனிக்கிழமை பகல் 02 மணி தொடக்கம் இரவு 08 மணிவரை லண்டன் வெம்பிளி, SUDBURY METHODIST CHURCH HALL மண்டபத்தில் சிறப்பு மாநாடும் ஓவியக் கண்காட்சி மற்றும் கலைநிகழ்ச்சிகளும், சமூக இராபோஷன ஒன்றுகூடலும் இடம்பெறுகின்றன. இலங்கையிலிருந்து இலக்கிய ஊடகம், சிவில் சமூக செயற்பாட்டாளர் என்ற ரீதியில் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் , லண்டன் குரொய்டன் நகர துணை மேயர் அ. தாமோதரன் மற்றும் பாரிஸ்டர் பத்ரிநாத் பாலவெங்கடேசன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.



இலங்கைக்கு பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தன் பின்னர் இலட்சக்கணக்கான இந்திய வம்சாவளி தமிழர்களின் குடியுரிமை ஒரே நாளில் பறிக்கப்பட்ட அநீதி இடம்பெற்று கடந்த நவம்பர் 15 ஆம் திகதியுடன் 75 ஆண்டுகள் நிறைவடைகிறன.

எனவே அந்த வரலாற்று ரீதியான அநீதியையும் நினைவுகூரும் வகையில் 'கறுப்பு வாரம்' என்ற அடையாளமும் இந்த மாநாட்டில் முக்கிய தொனிபொருளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டின் மூலமாக ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் இளைய சந்ததியினர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மூன்று ஆய்வரங்கங்களும் இடம்பெற உள்ளன.

(1) மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்ட வரலாறும் இன்றளவுமுள்ள அதன் தாக்கங்களும் (2) மலையக மக்களின் சமகால சவால்கள் (3) மலையக மக்களின் இனத்துவ அடையாளம் ஆகிய தலைப்புகளில் எஸ் இராமலிங்கம், பீ. ஏ காதர், கலை சேகர், பெ சிவஞானம், ஹேமா ராஜ், பாலசபேசன், சட்டத்தரணி ஜெயரட்ணராஜா, சார்ள்ஸ் அந்தோணிராஜா, புஸ்பா வினோத், ருக்ஷான் செல்வரத்தினம் உள்ளிட்டோர் கருத்துரையாற்ற உள்ளனர்.

The life of Upcountry Tamils of Plantation in Sri Lanka 200 years என்ற ஓவியக் கண்காட்சியுடன் கலை நிகழ்ச்சிகள் அனைத்தும் உணர்வுபூர்வமான ஒருமைப்பாடான பண்பாட்டு விடயங்களை பிரதிபலிப்பதாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

### சங்கவி பிலிம்ஸ் நிறுவன உரிமையாளர்

# துரைராசா சுரேஸினால் தமிழ் மொழிக்கு உரிய இடம்



கொழும்பு பிரதேச கலாசார அதிகாரசபை குழுவின் பொதுக் கூட்டம் நேற்று முன்தினம் கொழும்பு பிரதேச செயகத்தில் நடைபெற்றது. தமிழ், முஸ்லிம் கலைஞர்கள் அங்கத்துவம் பெற்றுள்ள இக் கூட்டத்தின் நடவடிக்கைகள் அனைத்தும் அன்றைய தினம் தனி சிங்கள மொழி மூலம் மட்டும் தான் நடத்தப்பட்டு வந்தது. சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் துரைராசா சுரேஸின் நடவடிக்கையால் உடனடியாக தமிழ் மொழி மூலமும் கூட்ட நடவடிக்கைகள் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் அனைத்து நடவடிக்கைகளும் முடிந்தளவு தமிழ் மொழி மூலம் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அன்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில், சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் துரைராசா சுரேஸ் தமிழ் மொழியில் பேசுவதற்கு ஒலிவாங்கியை எடுத்தபோது சபையில் சலசலப்பு ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்தே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதேச கலாசார அதிகாரசபை குழுவின் சாஹித்திய விழா அண்மையில் தான் நடத்தப்பட்டது.

அவ்விழாவிலும் தமிழ் மொழிக்கு என்ன நிலைமை ஏற்பட்டு இருந்திருக்குமோ என இவர் சுட்டிக்காட்ட எத்தனித்தது மட்டுமல்ல, அந்த சாஹித்திய விழாவுக்கு அனைவருக்கும் அழைப்பு விடுக்காமல் நடத்தப்பட்டதாகவும் இவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த கூட்டத்தில் துரைராசா சுரேஸினால் தான் தமிழ் மொழிக்கு உரிய இடம் கிடைத்தது.

எனவே அவர் பாராட்டப்பட வேண்டியவர் என்றும் அங்கு கூடியிருந்த பலரும் தெரிவித்தனர்.

## தரக்குறைவான மருந்து இறக்குமதி...

குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

அரசாங்கத்தின் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, சட்ட மாஅதிபர் சார்பில் நீதிமன்றில் நீண்ட விளக்கமளிக்கையில், 900 தடுப்பூசி குப்பிகளுக்கு முறையான நடைமுறையைப் பின்பற்றாமல் 44 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக செலுத்தியுள்ளதாகத் தெரிவித்தார். பணம் செலுத்துவதில். இத் தடுப்பூசியின் 3,985 குப்பிகள் டெண்டரின் ஊடாக கோரப்பட்டு கடுமையான நரம்பியல் கோளாறுகளுள்ள நோயாளிகளுக்கு வழங்கப்பட்டதாகவும் நான்கு நோயாளர்கள் பாதிப்புக்குள்ளாகியிருப்பது விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

“இதில் 1,000 தடுப்பூசிகள் தடை செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபரின் கணக்கில் 900 குப்பிகளுக்கு பணம் வரவு வைக்கப்பட்டதையடுத்து, சந்தேகநபர் 67,000 ரூபாவை மாத்திரம் கணக்கில் வைத்துவிட்டு சகல பணத்தையும் பெற்றுக்கொண்டதாக அவர் நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 04 ஆம் திகதி சந்தேக நபர் 7,500 தடுப்பூசி குப்பிகளை இறக்குமதி செய்யுமாறு கோரியதாகவும், ஆனால் 22,500 தடுப்பூசிகளை வழங்கவே அவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதாகவும் கிரிஹாகம தெரிவித்துள்ளார்.

44 மில்லியன் ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும், இது பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் குற்றமாகும் என்றும் அவர் கூறினார். “இந்தியாவிலிருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதாக சந்தேக நபர் கூறியிருந்த போதிலும், கொள்வனவு செய்யப்படவில்லை.

தேசிய இரத்த வங்கியால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்ட நடைமுறைகளை மீறி இரத்த பிளாஸ்மாவும் வாங்கப்பட்டுள்ளது. டெண்டருக்குப் பிறகு, முதன்முறையாக, 18 சந்தர்ப்பங்களில் புரோட்டீன் பரிசோதனைக்காக தேசிய இரத்த வங்கியிலிருந்து இரத்தத் தட்டுக்களை வாங்கியுள்ளதாகவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

“மருந்துகளை வாங்கும் போது முறையான தரநிலைகளை சரிபார்க்க வேண்டும்.இதற்கென மற்றொரு அதிகாரிகள் குழுவொன்று செயல்பட்டு வருகிறது. இவர்கள் கலந்துரையாடாமல் இதைச் செய்ய முடியாது. சந்தேகத்திற்குரிய நபருக்குப் பின்னால் ஒரு குழு உள்ளது.

## தங்கத்தின் விலை...

22 கரட் பவுண் தங்கத்தின் விலை 01 இலட்சத்து 64 ஆயிரத்து 900 ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் 22 கரட் பவுண் தங்கம் 01 இலட்சத்து 64 ஆயிரத்து 600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புலமைப்பரிசில் பரீட்சை...

உள்ளன. பெறுபேறு பட்டியலிடும் பணிகள் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இம்முறை தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சைக்காக 3,37,591 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களுக்கென சுமார் 2,888 பரீட்சை நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன .

அடுத்த வாரமளவில் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு திட்டமிட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## மதிற்சுவர் இடிந்து விழுந்து...

காயமடைந்த அவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவத்தில் ஆறு வயதுடைய சிறுமி ஒருவரே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த மேலும் 05 மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலை மற்றும் பொரளை சீமாட்டி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை ஆகியனவற்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகின்றனர். நீர்த்தாங்கிக்கு நீரை ஏந்திச் செல்லும் நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டிருந்த மதில் ஒன்றே இடிந்து வீழ்ந்ததில் இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது. இதனையறிந்த பிரதேச வாசிகள் பாடசாலைக்குள் சென்று, அங்கிருந்த அதிபர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மலையக மக்களுக்கும்...

தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பெருந்தோட்டத்துறை மக்கள் இந்நாட்டின் இரண்டாம் தர பிரஜைகள் அல்ல என சபையில் சுட்டிக்காட்டிய அவர்,

மலையகத்தில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு தனி செயலணி அமைத்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற வரவு செலவு திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அதிகரிக்கப்பட்டுள்ள வரி சுமைகளை வருமானம் குறைந்த பெருந்தோட்ட மக்கள் எவ்வாறு சமாளிக்கப்போகிறார்கள் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

பெருந்தோட்ட மக்களின் நாளாந்த வருமானம் ஆயிரம் ரூபாவாகும். அந்த வகையில் ஒரு தொழிலாளி ஒரு மாதத்தில் 20ஆயிரம் ரூபாவையே பெற்றுக் கொள்ள முடிகிறது. பெருந்தோட்டத்துறையில் நாலு பேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு மாதாந்தம் 83, 333ரூபா தேவை என்பதை கணிப்பீட்டாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த மூன்று வருடங்களாக தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படவில்லை. இந்நிலையில்,இவர்களின் வாழ்க்கைச்செலவு மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அத்துடன் தோட்டத்தொழிலாளர்களில் 70 வீதமானவர்கள் வறுமைக்கோட்டுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எனவே, வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் 10ஆயிரம் ரூபா வாழ்க்கைச்செலவு தோட்டத்தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

## விசாரணை அறிக்கை...

வைக்கப்படவுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை சபாநாயகர் அறிவிப்பின்போதே அவர், இதனைத் தெரிவித்தார்.

2023 ஒக்டோபர் 20இல்,பாராளுமன்றக் கட்டிடத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான டயனா கமகே, ரோஹன பண்டார, சுஜித் பெரேரா ஆகியோருக்கிடையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் இரு தரப்பிலிருந்தும் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் விரைவாக விசாரணைகளை நடத்தி அதனைப்பாராளுமன்றத்தில் அறிக்கையிட, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸ தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் நியமித்திருந்தார்.

இதற்கமைய இக்குழுவின் உறுப்பினர்களாக பாராளுமன்ற உறுப்பினர்களான சமல் ராஜபக்ஷ, ரமேஷ் பத்திரன, கயந்த கருணாதிலக, இம்தியாஸ் பாக்கீர் மாக்கர், தலதா அத்துகோரள மற்றும் இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். மேற்படி குழு, நான்கு தடவைகள் கூடியிருந்தது. சம்பவத்துடன் தொடர்புடைய மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மேலதிகமாக இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்தவும் சாட்சியங்களைப் பதிவு செய்வதற்காக குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு சபாநாயகரினால் நியமிக்கப்பட்ட பாராளுமன்றக் குழுவின் அறிக்கை, அதன் தலைவர் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஸவினால் செவ்வாய்க்கிழமை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளிக்கப்பட்டது.

## சிறந்த ரயில் சேவையை...

ஏற்படுத்தும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஈ, டிக்கெட் முறைமை, ஜிபிஎஸ் முறைமை ஆகியவற்றை ஆரம்பித்து டிஜிட்டல் மயப்படுத்தினால் ரயில் சேவையை சிறந்த சேவையாக முன்னெடுக்க முடியும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், நிரோஷன் பெரேரா எம்பி எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரயில்வே திணைக்களத்தை அதிகாரியாக மாற்றுவதற்காக விசேட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்து, அதன் அறிக்கையைப் பெற்றுக் கொள்வது அவசியமென அமைச்சரவை அறிவித்துள்ளது. இந்நிலையில், அமைச்சரவையின் செயலாளர் விசேட குழு ஒன்றை இதற்காக நியமித்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அந்த வகையில் ரயில்வே முன்னாள் பொது முகாமையாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்களை கொண்டதாக இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் தீர்மானம் மிக விரைவில் கிடைக்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மின்சாரத்தில் இயங்கும் பஸ் சேவை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வருட இறுதியில் அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## பொருளாதார நெருக்கடியை...

வேலைத்திட்டத்தை செயற்படுத்திய பின்னர் பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளலாம். இதன்போதே, வலுவான பொருளாதாரமொன்றை கட்டியெழுப்ப முடியும்.

மாற்றம் காணும் சூழலுக்கு ஏற்ப மாறுபடுவதனூடாகவே சாத்தியமான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும். இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்துக்கு அந்த முறைமை மிகவும் அவசியமானது. புதிய சமூகமொன்றை கட்டியெழுப்பும் நோக்கிலேயே அஸ்வெசும நலன்புரித் திட்ட கொடுப்பனவுகள் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது. நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான சூழலை உருவாக்கும் வகையில், இம்முறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது காஸா எல்லை பகுதியில் நடைபெற்று வரும் மோதல்கள் இலங்கை உள்ளிட்ட உலக நாடுகளை பாதிக்கக் கூடும். இதனால் வரவு செலவு திட்டத்தின் சாதக தன்மைகள் மாறக்கூடும். அதனாலேயே உலக பலவான்களுடன் இணைந்து காஸா எல்லை பகுதியில் நடைபெறும் மோதல்களை தடுக்க முற்படுகிறோம்.

மத்திய கிழக்கின் செயற்பாடுகள் இலங்கையில் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தலாம்.

கடந்த வருடத்தில் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிக்கு தீர்வாக பொருளாதாரத்தை மீண்டும் நிலைப்படுத்த வேண்டியது அவசியம். அதன் பின்னரே பொருளாதாரத்தை மறுசீரமைக்க வேண்டும்.

ான் முன்வைத்த முதலாவது வரவு செலவு திட்டத்தில் பொருளாதார நிலைப்படுத்தலுக்கான யோசனைகளை முன்வைத்திருந்தேன்.

தற்போதைய வரவு செலவு திட்டத்தில் பொருளாதார மறுசீரமைப்புக்கான யோசனைகளை முன்வைத்துள்ளேன். ஒரேயொரு வரவு செலவு திட்டத்தைக் கொண்டு நாட்டின் அனைத்துப் பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டுவிட முடியாது. தேர்தலை இலக்கு வைத்தே இம்முறை வரவு செலவுத் திட்டம் முன்வைக்கப்பட்டிருப்பதாக பலரும் கூறுகின்றனர். து உண்மையல்ல. ம்முறை வரவு செலவுத் திட்டம் புதிய பொருளாதாரத்திற்கான பிரவேசத்தை ஏற்படுத்தல்,

அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு, ஸ்வெசும கொடுப்பனவுகளை அதிகரித்தல், சிறிய மற்றும் மத்திய தர தொழில்முயற்சிகளை வலுவூட்டல் உட்பட அனைத்துத் துறைகளையும் உள்வாங்கியதாக அமைந்துள்ளதென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## யாழ். நகரில் இளையோரை...

களியாட்ட நிகழ்வு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ் வெளியிட்டுள்ள "X" தள பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது,

யாழ். நகரில் இளையோரைக் குறிவைத்து நடத்தப்பட்ட போதை விருந்து களியாட்டத்தை ஒருபோதும் ஏற்கமுடியாது. குறித்த தனியார் விடுதியும் சமூகப் பொறுப்பற்றுச் செயற்படும் ஏனைய ஒருசில விடுதிகளும், தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டுக் கோலங்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான போதை வெறியாட்டங்கள் தமிழர் தாயகத்தில் தொடர்ந்தால், மக்களைத் திரட்டி போதை மையங்களை முற்றுகையிட வேண்டி ஏற்படலாமெனவும் அவரது பதிவில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

## பட்ஜட்டின் சில யோசனைகள்...

ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிப்பு, ஓய்வூதியர்கள், விசேட தேவையுடையோர், சிரேஷ்ட பிரஜைகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறோம். எனினும், இவ்வாறான முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்துவதற்கு யதார்த்தமானதா? என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், ஜனாதிபதியொருவர் நிதியமைச்சராக பதவி வகிப்பதை, 2010 ஆம் ஆண்டு முதலே நான்,எதிர்த்து வந்துள்ளேன். அரசாங்கத்தின் பொது நிதியானது முற்று முழுதாக பாராளுமன்றத்திடமே இருக்க வேண்டும். அந்த வகையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரே நிதியமைச்சராக பதவி வகிக்க வேண்டுமென்றே அரசியலமைப்பு தெரிவிக்கின்றது.

ஜனாதிபதியானவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அல்ல என்பதை நான் மீண்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேவேளை, காணாமல் போனோருக்கான நட்ட ஈடு வழங்குவதை துரிதப்படுத்தும் நடவடிக்கை, அவர்களுக்கான நட்ட ஈட்டுக்கு மேலும் நிதி ஒதுக்கீடு செய்வது, விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்குவது,உள்நாட்டில் இடம்பெயர்ந்தோருக்கு வீடுகள், யாழ் மாவட்டத்துக்கான குடிநீர்த் திட்டம். மீனவர்களுக்கான முன் மொழிவு ஆகியவற்றையும் நாம் வரவேற்கிறோம்.

பாதுகாப்புக்கு தொடர்ந்தும் பெரும் தொகை செலவிடப்படுகின்றது. பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடுகளில் இலங்கை இராணுவம் உலகில் 14 ஆவது இடத்தில் உள்ளது.இந்தளவு பாரிய இராணுவமும் செலவுகளும் ஒரு காலத்தில் தேவைப்பட்டாலும் யுத்தம் நிறைவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள நிலையில், இராணுவக்குறைப்பு செய்யப்படவில்லை. பாதுகாப்புக்கு பெரும் தொகைப்பணத்தை வீணாக செலவிட நேர்ந்துள்ளது.

எதிர்பார்க்கப்படும் வருமான இலக்கை அடையவே வற்வரி வீதத்தை அதிகரிப்பதாக காரணம் சொல்லப்படுகின்றது. ஆனால், வருமான முன் மொழிவுகள் யதார்த்தமற்றவையாகவே காணப்படுகின்றன. உண்மையாகவே வரி செலுத்த வேண்டியவர்களிடமிருந்து இறைவரித் திணைக்களம் ஒழுங்காக வரிகளை அறவிட்டிருந்தால் அரசாங்கத்தின் வருமானத்தில் பாதிப்பு ஏற்பட்டிருக்காது. துறைமுகம், விமான நிலையம் போன்ற பெருமளவு வரி வருமானங்களை தரக்கூடிய நிறுவனங்களில் ஊழல்வாதிகள் இருப்பதும் அவர்களை அரசியல்வாதிகள் பாதுகாப்பதும் நாட்டின் வங்குரோத்துக்கு காரணமாகவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தடைசெய்யப்பட்ட பொருட்களை....

திணைக்களத்தின் ஊடக அறிக்கைகளின்படி, 100 கிராமுக்கு மேல் தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகள் உட்பட கணிசமான அளவு தடைசெய்யப்பட்ட பொருட்களை கடத்துபவர்களுக்கு அதிகபட்ச அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்து வரும் வருவாய் இழப்பை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் சுங்கத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றக் குழுவின் அறிக்கையின்படி, அண்மைக் காலத்தில் 1.4 பில்லியன் ரூபா நஷ்டத்தை எடுத்துக் காட்டியது, இதற்கு, தடைசெய்யப்பட்ட பொருட்களை நாட்டுக்குள் கடத்துவதற்கு அபராதம் விதிக்கும் வகையில் சுங்க அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களே காரணமாகும்.

இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து கடந்த மூன்று ஆண்டுகளில் தங்கம், மொபைல் போன்கள் மற்றும் பிற மதிப்புமிக்க பொருட்களின் கடத்தல்கள் அதிகரித்ததாக இக்குழு வெளிப்படுத்தியுள்ளது.

ஜூன் 2023 முதல் தடைசெய்யப்பட்ட பெறுமதிமிக்க பொருட்களைக் கொண்டுவரும் நபர்கள் பிடிபட்டால், பொருட்களின் மதிப்பை விட மூன்று மடங்கு அபராதம் அல்லது 1,00,000 ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.அக்டோபர் 31 வரை சுங்கம் வசூலித்த தகவல்கள் வெளியாகின.

760 பில்லியன் வருவாய் ஈட்டப்பட்டுள்ளதுடன், வருடத்துக்கான மொத்த சுங்க வருவாய் ரூ. 925 பில்லியன் எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பிரத்தியேக வகுப்புக்கு மாணவர் செல்வதால் திறன்விருத்திக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லை

## ஐ.நா. சிறுவர் நிதிய பிரதிநிதிகளிடம் வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

சிறுவர்களின் திறன் மேம்பாடு மற்றும் பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு ஐக்கிய நாடுகள் சபையினுடைய சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளிடம் வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான மேலதிக வகுப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்த வடமாகாண ஆளுநர், மாணவர்கள் பிரத்தியேக வகுப்பில் அதிகளவில் நேரம் செலவிடுவதால், அவர்களின் திறன் விருத்திச் செயற்பாடுகளுக்கு நேரம் ஒதுக்கப்படுவதில்லையெனவும் தெரிவித்தார்.



ஐ.நா. சிறுவர் நிதியத்தின் இலங்கை பிரதிநிதி Christian Skoog, உதவிப் பிரதிநிதி Begona Arellano ஆகியோர், வடமாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) சந்தித்துக் கலந்துரையாடிய போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக ஆளுநர் மேலும் தெரிவித்த போது,

"சாதாரண மற்றும் உயர்தரப் பரீட்சைகளின் பின்னர் மாணவர்களின் நிலைப்பாடு கவலைக்கிடமாக உள்ளதுடன், இந்நிலையை மாற்றுவதற்கு தேவையான ஆலோசனைகள், வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன், பாடசாலை மாணவர்களின் இடைவிலகலும் அதிகரித்துள்ள நிலையில் இதைத் தடுப்பதற்குரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டுமென்பதுடன், சிறுவர்கள் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகமல் இருப்பதற்கு விழிப்புணர்வு நடவடிக்கைகள் அவசியமாகின்றன" எனத் தெரிவித்தார்.

சிறுவர்களின் எதிர்காலம் தொடர்பாக பெற்றோருக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் விழிப்புணர்வும் வழங்கப்பட வேண்டுமெனவும், ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

# வடக்கின் உதயம்

## மன்னாரில் சுனாமி அனர்த்த விழிப்புணர்வு நடவடிக்கை



**தலைமன்னார் விசேட நிருபர்**

திடீரென சுனாமி அனர்த்தம் ஏற்படும் போது, அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்புப் பெறுவதென்பது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை மன்னாரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்றது.

மன்னார் பிரதேச செயலகம், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் மற்றும் பல்வேறு திணைக்களங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த இந்த நடவடிக்கை ஆரம்பக்கட்டமாக தாழ்வுப்பாடு சென். ஜோசப் பாடசாலையில் நடைபெற்றது.

மாணவர்களை மையமாக வைத்தே சுனாமி விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# சபா. புஷ்பநாதனுக்கு ஞானஏந்தல் –2023 விருது



உடுவில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் ஏற்பாட்டில் ஞானஏந்தல் – 2023 விருது விழா இன்று வியாழக்கிழமை (16) காலை 9.30 மணிக்கு உடுவில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுவதுடன், இவ்விழாவில் தமிழ் இலக்கிய எழுத்தாற்றல் திறமைக்கான ஞானஏந்தல் விருது வழங்கி சுன்னாகம் சபா. புஷ்பநாதன் கௌரவிக்கப்படவுள்ளார்.

இதன்போது இசைத்துறை விருதை மனோகரி சற்குணநாதனும், நாடகத்துறை விருதை மகேந்திரன் ரவிசங்கரும், ஊடகத்துறை விருதை செல்வநாயகம் ரவிசாந்தும் பெற்றுக்கொள்ளவுள்ளனர்.

பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு, ஞானஏந்தல் விருதை வழங்கி வைப்பதுடன், சிறப்பு சொற்பொழிவும் ஆற்றுவார்.

விசேட விருந்தினர்களாக கலாசார பேரவை உறுப்பினர் லிதினி நிருபராஜா, யாழ். பல்கலைக்கழக நடனத்துறை தலைவர் மைதிலி அருள்ளய்யா ஆகியோர் கலந்துகொள்வர்.

# நெடுந்தீவு குதிரைகளை பராமரிக்க தனியான அலுவலகம் தேவை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

யாழ். நெடுந்தீவிலுள்ள குதிரைகளுக்கான உணவு, நீர் உட்பட பராமரிப்புத் தேவைக்காக தனியான அலுவலகமொன்று அமைக்கப்பட வேண்டுமென, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

இலங்கையில் நெடுந்தீவில் மட்டுமே பெருமளவான குதிரைகள் இயற்கையாக காணப்படுவதுடன், இவற்றை பராமரிப்பதற்கு ஒரு திணைக்களமோ, அலுவலகமோ அல்லது அதிகாரிகளோ இல்லாமை கவலையளிக்கின்றது. இந்தக் குதிரைகளை கவனிக்க எவரும் இல்லையென்பதுடன், கோடை காலத்தில் இவற்றுக்கு நீர் வழங்குவதற்கான வசதியும் இல்லையெனவும், அவர் தெரிவித்தார்.



இந்த விடயம் தொடர்பாக தான் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பி ஒன்றரை வருடமாவதுடன், தற்போதே இந்தக் கேள்விக்கு பதிலளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும், உரிய அமைச்சர் சபையில் இல்லாமையால், இது தொடர்பாக மேலதிக கேள்விகளைக் கேட்க முடியாமலுள்ளது. இதுவொரு துரதிஷ்ட நிலையெனவும், அவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், வனஜீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சரிடம் சிறிதரன் எம்.பி. இந்தக் கேள்வியை முன்வைத்த போது, இந்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் சபையில் இல்லாமையால், ஆளும் கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க பதிலளித்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, "நெடுந்தீவில் 600க்கும் மேற்பட்ட குதிரைகள் உள்ளதுடன், ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் அவை இங்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம். எனினும், இதை உறுதி செய்வதற்கு போதிய தகவல் இல்லை. இந்தக் குதிரைகளுக்கு வெளியிடங்களிலிருந்து உணவு வழங்கப்படுவதில்லையென்பதுடன், அவையே இயற்கையாக உணவைத் தேடி உட்கொள்கின்றன. இவை நெடுந்தீவு வனப்பாதுகாப்பு அதிகாரிகளினுடைய நிர்வாகத்தின் கீழ் உள்ளன" என்றார்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நூற்றாண்டு சிறப்புரை நிறைவு நிகழ்வு

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இந்த வருடத்தின் ஜனவரி முதல் பிரதி புதன்கிழமை தோறும் தொடர்ந்து நடைபெற்று வந்த நூற்றாண்டு சிறப்புரை நிகழ்வின் நிறைவு நிகழ்வு நேற்று புதன் கிழமை (15) கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி அதிதியாகக் கலந்துகொண்டதுடன், 'ஆசிரியரும் நேர்மனப்பாங்கும்' எனும் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அத்துடன், அதிதி அறிமுக உரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் வி.எஸ்.குணசீலன் ஆற்றினார்.



இந்நிகழ்வை ஆவணப்படுத்துவதில் பங்களிப்பு வழங்கிய கலாசாலையின் கற்பித்தல்சாரா உத்தியோகத்தர் செல்வநாயகம் கஜந்தன் மற்றும் ஆசிரிய மாணவர்களான தங்கன் இன்பதாசன், செலஸ்தீன் கனிஸ்ரன் ஆகியோர் கலாசாலை ஊடக மன்றத்தால் கௌரவிக்கப்பட்டனர். ஊடக மன்றக் காப்பாளர், விரிவுரையாளர் தர்சினி முத்துராஜாவின் நெறிப்படுத்தலின் கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில் மருத்துவர் சத்தியமூர்த்தி, கௌரவிக்கப்பட்ட மூவருக்கும் நினைவுச்சின்னங்களை வழங்கி வைத்தார்.

### அடை மழையால்

# யாழ்ப்பாணத்தில் 94 குடும்பங்கள் பாதிப்பு; வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்கின்றன

**யாழ்.விசேட, கோப்பாய் குறூப், வவுனியா விசேட நிருபர்கள்**

யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களில் கடந்த சில தினங்களாக அடை மழை பெய்து வருவதைத் தொடர்ந்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் 94 குடும்பங்களைச் சேர்ந்த 317 பேர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதாக, அம்மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவுக்கான பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.

கோப்பாயில் 55 குடும்பங்களைச் சேர்ந்த 181 பேரும் பருத்தித்துறையில் 9 குடும்பங்களைச் சேர்ந்த 36 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், சங்கானை ஜே/167 கிராம அலுவலர் பிரிவிலுள்ள ஆலயமொன்றுக்கு அருகிலிருந்த அரச மரம் முறிந்து ஆலயத்தின் மீது விழுந்ததில் ஆலயம் சேதமடைந்துள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.



இதேவேளை, வவுனியாவில் 93 குளங்கள் வான் பாய்வதுடன், 15 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாகவும், கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது. மேலும் பல குளங்கள் வான் பாயும் கட்டத்தை அடைந்துள்ளதாகவும், கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்தது.

### கடும் மழை, மண்சரிவால் தடைப்பட்ட

# மலையக ரயில் சேவைகள் மீண்டும் வழமை நிலைக்கு

**ஊவா சுழற்சி நிருபர்**

மலையக ரயில் மார்க்கத்தின் ஹாலிஎல மற்றும் உடுவர ரயில் நிலையங்களுக்கு இடையில் பாரிய மண்மேடு சரிந்து விழுந்ததால் தடைப்பட்ட பதுளை – கொழும்பு ரயில் சேவைகள் நேற்று புதன்கிழமை (15) காலை முதல் மீண்டும் வழமைக்கு திரும்பியதாக, ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (14) மாலை தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக மலையக ரயில் மார்க்கத்தின் ஹாலிஎல – உடுநுவர நிலையங்களுக்கு இடையிலான ரயில் பாதையில் பாரிய மண்மேடு சரிந்து விழுந்தது. இதனால், பதுளை – கொழும்பு ரயில் சேவை தடைப்பட்டது.

ரயில்வே திணைக்கள ஊழியர்கள், மழை மற்றும் குளிரைப் பொருட்படுத்தாமல், ரயில் பாதையில் விழுந்து கிடந்த மண்மேட்டை பெரும் பிரயத்தனத்துக்கு மத்தியில் அகற்றினர்.



இதனைத் தொடர்ந்து பதுளை – கொழும்புக்கு இடையிலான ரயில் சேவையை மீள ஆரம்பிக்க முடிந்ததாகவும், ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்தது.

# மலைச்சாரல்

## வலப்பனையில் விபத்து; பாரவூர்தி சாரதி காயம்

வலப்பனை நில்தண்டாஹீன நகரில் நேற்று புதன்கிழமை (15) காலை பாரவூர்தியொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அப்பாரவூர்தியின் சாரதி படுகாயமடைந்து, வலப்பனை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வலப்பனை ரூப்பஹா பிரதேசத்திலிருந்து மரக்குற்றிகளை ஏற்றிக்கொண்டு பயணித்த பாரவூர்தியே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தால், கடையொன்றுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த விபத்துத் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

**(ஆ.ரமேஸ்)**

# கிழக்கின் குரல்



## அமெரிக்க தூதுவர் மட்டக்களப்பு விஜயம்





(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் நேற்று (15) மட்டக்களப்புக்கு விஜயம் செய்திருந்தார். அவருடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் வருகை தந்திருந்தார். மட்டக்களப்பு சரவணா வீதியில் அமெரிக்க அரசினால் நிறுவப்பட்டுள்ள அமெரிக்கன் ஹப் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தையும் இதன்போது திறந்து வைத்தார்.

கிழக்கு பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் உதவி மாவட்ட அரசாங்க அதிபர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### இலங்கையின் கரையோர பிரதேசங்களில்

# நிலநடுக்கம், சுனாமியை ஏற்படுத்தக்கூடிய புவிச்சரிதவியல் நிலைமைகளில் மாற்றம்

## முன்னாயத்த நடவடிக்கைகள் மூலம் இழப்புகளை தவிர்க்கலாம்

(ரொட்டவெவ குறூப், திருகோணமலை தினகரன் நிருபர்கள்)

இலங்கையில் நிலநடுக்கங்களும் அதனோடு இணைந்ததான சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களும் உருவாகுவதற்கு அடிப்படையான புவிச்சரிதவியல் நிலைமைகள் கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குப் ஆகிய பிராந்தியங்களில் விருத்தி பெற்றுள்ளதாக கிழக்கு பல்கலைக்கழக புவியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் ஆர்.கிருபைராஜா தெரிவித்துள்ளார்.

எனவே இயற்கை சமிக்ஞைகளை கருத்திற் கொண்டு முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பெருமளவான இழப்புக்களை தவிர்த்துக் கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் சில வருடகாலமாக தொடர்ச்சியான நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றன. இயற்கை சமிக்ஞைகளை கவனத்திற் கொண்டு நாம் சில முன்னாயத்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் பெருமளவான பாதிப்புகளிலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.



குறிப்பாக கரையோரத்தை அண்டியுள்ள பகுதிகளில் விசேட கவனம் செலுத்துவதோடு மாணவர்கள் மத்தியில் அனர்த்தக் கல்வி தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. 2004ஆம் ஆண்டு சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியது.

விஞ்ஞான பூர்வமாக சான்றாதாரங்களின் அடிப்படையில் நோக்குமிடத்து, இந்தியத் தகட்டில் புதிய உப தகடொன்றின் தோற்றமும், இலங்கையிலும், அதனை அண்டிய கடல் பிராந்தியங்களிலும் உள்ளகத் தகடுகள் மற்றும் குறைகளின் விருத்தி இன்று தோன்றியுள்ள நிலநடுக்க நிலைமைகளுக்கு பிரதான காரணங்களாகும். குறிப்பாக இலங்கையின் கிழக்கே விருத்தியடைந்துள்ள குறைகள் உதைப்புக் குறை (Thrust fault) சார்ந்தவையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

நிலநடுக்கங்களையும் அதனோடு இணைந்ததான சுனாமி போன்றவற்றை உருவாக்குவதற்கு வேண்டிய அடிப்படையான புவிச்சரிதவியல்நிலைமைகள்என்னவோ அவை இலங்கையின் கிழக்கு, தென்கிழக்கு, தென்மேற்குப் ஆகிய பிராந்தியங்களிலும் விருத்தி பெற்றுள்ளன. இத்தகைய பின்னணியிலேயே திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, கொழும்பு பிரதேசங்களை அண்மித்து நிலநடுக்கங்கள் அடிக்கடி தோன்றுகின்றன.

கடந்த 2007.07.18 ஆம் திகதி இலங்கையில் தென்மேல் கரையிலிருந்து 300 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் வங்காள விரிகுடாவில் 5.2 ரிச்டர் அளவுத்திட்டத்தில், கடல் அடித்தளத்திலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்ட நில அதிர்வினை ஹம்பாந்தோட்டையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான கரையோரத்தில் மக்கள் உணர்ந்ததுடன், திஸ்ஸமகாராம என்னும் இடத்தில் பல வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

சமீபத்தில் 2023.11.12 ஆம் திகதி மொரவெவ பகுதியில் 3.5 ரிச்டரில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. அதனைத் தொடர்ந்து 2023.11.14 கொழும்புக்கு தென்கிழக்கே அமைந்த கடல் பிராந்தியத்தில் 6.1 ரிச்டரில் பாரிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

## சைக்கிள் திருட்டு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பொதுச்சந்தையில் நிறுத்தப்படும் சைக்கிள்கள் அண்மைக் காலமாக திருடப்பட்டு வருவதாக உரிமையாளர்கள் பெரும் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த ஒரு வார காலத்திற்குள் இரு சைக்கிள்கள் திருடப்பட்டுள்ளதாக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும் இத்திருட்டு சம்பவங்கள் குறித்து சந்தைகளுக்கு செல்லும் பொதுமக்கள் பெரும் அவதானம் செலுத்தி வருவதையும் காண முடிகின்றது.



இலங்கை அதிபர் சேவையின் தரம் 3ற்கு தெரிவு செய்யப்பட்ட பேரின்பராசா ரேகாசலுக்குக்கான அதிபர் நியமனக் கடிதத்தை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.



பாலமுனை மின்ஹாஜ் மகா வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களினால் பாடசாலை வீதியோரத்தை அழகுபடுத்தும் நோக்கில் பூ மரக்கன்றுகள் நடப்படுவதை படத்தில் காணலாம். (படம்: பாலமுனை தினகரன் நிருபர்)

## ஊடகவியலாளர் காதர் குணமடைய விசேட பிரார்த்தனை



மருதமுனையை தேசிய ரீதியாக மாத்திரமல்லாமல் சர்வதேச ரீதியாகவும் அறிமுகம் செய்வதில் கடந்த நான்கு தசாப்தங்களாக ஊடகப் பணி புரிந்து வரும் தினகரனின் மருதமுனை பிரதேச செய்தியாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கலாபூசணம் பி.எம்.எம்.ஏ. காதர் உடல் நலக்குறைவு காரணமாக சிகிச்சை பெற்று வருகிறார்.

அவரது ஆரோக்கிய நலன்களுக்காக பிரார்த்தனை செய்யுமாறு மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபையின் தலைவரும் மருதமுனை பழீல் மௌலானா பவுண்டேஷன் தவிசாளருமான அஷ்செய்க் எப்.எம். அஹமது அன்ஸார் மௌலானா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தற்போது அவரது புதல்வியின் வீட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

## சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நீரிழிவு விழிப்புணர்வு கருத்தரங்கு

(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

'நீரிழிவு சிகிச்சைக்கான அணுகல் இப்போது இல்லாவிட்டால் எப்போது ?' எனும் தொனிப்பொருளில் சாய்ந்தமருது பிரதேசவைத்தியசாலை ஏற்பாடு செய்யப்பட்ட உணவுக் கண்காட்சியும், விழிப்புணர்வு கருத்தரங்கும் வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.



சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலை பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நீரிழிவு நோயிலிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கான உணவு பழக்கவழக்கங்கள் தொடர்பான கண்காட்சியும் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம்பெற்றன.

## வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்த நடவடிக்கை

(ஒலுவில் விசேட நிருபர்)

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட வேலைத்திட்டத்தின் கீழ் வருமானம் குறைந்த குடும்பங்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதில் பிரதானமாக வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ. பிர்னாஸ் தெரிவித்தார்.

விவசாய அமைச்சினால் உப உணவு பயிர்ச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் கோமாரி பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையாளர்களுக்கான இலவச பாசிப்பயறு விதை வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது, இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாசிப்பயறு பயிரிடுவதற்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை விவசாயப் போதனாசிரியர்கள் வழங்கவுள்ளதாகவும், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் விவசாயத் திணைக்களம் ஆகியவற்றினால் விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு, மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு நாற்று விதைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பயனாளிகள் இங்கு வழங்கப்பட்டுள்ள விதைகளை வீண் விரயம் செய்யாமல் பயிர்ச் செய்கையை முன்னெடுக்க வேண்டும், பாசிப் பயறு பயிரிடுவதால் மண் வளம் அதிகரிப்பதோடு வேளாண்மைக்கு ஏற்படக் கூடிய நோய் தாக்கம் குறைவடைவதோடு போசாக்கும் அதிகரிக்கும்.

தொடர்ந்தும் வறுமையில் வாழாமல் இவ்வாறான வீட்டுத் தோட்ட உற்பத்திகளை செய்வதன் மூலம் வறுமையிலிருந்து மீள்வதோடு நாட்டின் பொருளாதாரத்திற்கும் பெரும் பங்களிப்பினை வழங்க முடியுமென்றார்.

### பாடசாலைகளில்

## தொழில் முயற்சியாண்மை வட்டம் தேசிய வேலைத்திட்டம் அங்குரார்ப்பணம்

(காரைதீவு குறூப் நிருபர்)



ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய கல்வி அமைச்சும் கைத்தொழில் அமைச்சும் இணைந்து கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊடாக பாடசாலைகளில் தொழில் முயற்சியாண்மை வட்டம் என்ற தேசிய வேலைத்திட்டத்தை அமுல்படுத்திவருகின்றது.

இலங்கை கைத்தொழில் அதிகார சபை இவ்வேலைத்திட்டத்தை மாவட்டந்தோறும் முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் முதன் முதலாக திருக்கோவில் வலயத்துக்குட்பட்ட அக்கரைப்பற்று இராமகிருஷ்ணா தேசிய பாடசாலையில் இவ்வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம்(14) செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வு பாடசாலை பிரதி அதிபர் சி. மதியழகன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறை சிரேஷ்ட பேராசிரியர் செல்வரெத்தினம் குணபாலன், Morrich (Pvt) Ltd நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் எம்.பி.எம். நளீம், இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அம்பாறை மாவட்ட பிரதி பணிப்பாளர் கே.எல்.ஏ. ஆரியகீர்த்தி ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கான கைத்தொழில், முயற்சியாண்மை, தேசிய மற்றும் சர்வதேச சந்தைவாய்ப்புக்கள், தொழிற் சந்தை மற்றும் மாணவர்களின் எதிர்காலம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை விரிவாக உரையாற்றியதோடு பாடசாலை கைத்தொழில் முயற்சியாண்மை வட்டங்களையும் தெரிவு செய்து வழிப்படுத்தினர்.

## தென்கிழக்கு பல்கலைக்கழக ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் தெரிவு

(பெரியநீலாவணை விசேட, கல்முனை குறூப் நிருபர்கள்)



தென்கிழக்கு பல்கலைக்கழக ஊடக பிரிவுக்கு புதிய நிர்வாகிகள் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரினால் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

பல்கலைக்கழக ஊடக பிரிவின் இணைப்பாளராக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப். எச்.ஏ.ஷிப்லி, செயலாளராக தென்கிழக்கு பல்கலைக்கழக கணக்காய்வு உதவியாளர் எஸ்.எம். கலீல் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஊடக பிரிவுக்கு உறுப்பினர்களாக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம்.எம். சிராஜ், விரிவுரையாளர் எம். அப்துல் ரஸாக், விரிவுரையாளர் சதீக்கா பர்வீன், விடுதி பொறுப்பாளர் ஆர். ரிஸானா, சிரேஷ்ட நூலக உதவியாளர் சீ.எம்.ஏ. முனாஸ், ஆய்வுக் கூட உதவியாளர் எம்.வை அமீர், உட்பட பல்கலைக்கழக மாணவர் சார்பில் எம்.ஏ. ஸீம் பிஸ்தி (கலை, கலாசார பீடம்), டி.எம்.வை. லசித் (பொறியியல் பீடம்), இஸட்.எஸ்.எஸ். குணரத்ன (தொழிநுட்ப பீடம்) ஆகியோரும் ஊடக பிரிவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக ஊடக பிரிவினை பலப்படுத்தி மாணவர்களை ஒன்றிணைத்து எதிர்காலத்தில் சிறப்பாக பெறுபேறுகளை மக்கள் முன்கொண்டு செல்ல ஆக்கபூர்வமான திட்டங்கள் குறித்து விசேட கலந்துரையாடலும் உபவேந்தர் தலைமையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி மாணவர்களின் விடுகை விழா



(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தினால் மாவட்டத்திலுள்ள தமிழ்பேசும் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான ஒருமாத கால ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி அக்கரைப்பற்று தொழில் நுட்பக் கல்லூரியில் நடைபெற்றது.

கற்கை நெறியினை பூர்த்தி செய்த மாணவர்களின் விடுகை விழா அக்கரைப்பற்று தொழில் நுட்பகல்லூரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக தொழில் நுட்பக் கல்லூரியின் பதிவாளர் எம்.ஏ.சீ. முஹம்மது றகீப் கலந்து சிறப்பித்தார்.

அத்தோடு, கல்லூரியின் விரிவுரையாளர்கள், பிரிவுத் தலைவர்கள் மற்றும் பாடநெறியை கற்ற மாணவர்களும் இதில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# 'அன்பு மழையில் நனைந்து வளரும் குறிஞ்சி மலர்கள்'



நல்ளோர் பிள்ளைகளாக வளர்ப்பதற்கு தோட்டப்புறத்தில் பிள்ளை மடுவம் மிக முக்கியத்துவம் பெற்றவை. அம்மா கொழுந்து பறிக்கச் செல்வதால் பிள்ளையைப் பார்க்க ஆளில்லை. பிள்ளை மடுவத்திலுள்ள தாயிடத்தில் தான் எதிர்காலம் விரிந்து பரந்து கிடந்தது. ஆனாலும் தற்போது மலையகத்தில் பிள்ளை மடுவம் அரிதாகிச் செல்கிறது. ஒவ்வொரு குழந்தையும் தத்தம் வீடுகளிலே வளர்கின்றன. எமது மலையகக் குழந்தைகளின் நிலை, எமது நிலை, குழந்தைகளின் எதிர்காலம் இவை பற்றி **மலையக கலை கலாசார சங்கத்தின் உப தலைவியும் திருமண சோதிட நிபுணர் தேசாபிமானி சந்திரவதனா ரட்ண ராஜ குருக்கள் தினகரன் பத்திரிகைக்கு கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**

பள்ளிக் கூடம் செல்ல முடியாத பால் குடிக்குழந்தைகள், இரண்டு, மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள்



தோட்ட நிர்வாகத்திற்கு உட்பட்ட பகுதியில் குழந்தைப்பராமரிப்பு நிலையத்தில் (கிரெச் எட்டென்டன்) பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு தாய்மார்கள் தேயிலை கொழுந்து பறிப்பதற்காகச் செல்வார்கள். அங்கு குழந்தையைக் கவனிப்பதற்காக ஓர் 'ஆயா' இருப்பார்.



அவர் குழந்தைகளுக்கு 'மலசலம்' வந்தால் கழுவி துடைப்பதற்கும் சுத்தங்கள் பேணுவதற்கும் உதவியாக இருப்பார். அங்கு பிள்ளையினைப் பராமரிப்பதற்காக படித்த பெண் ஒருவரும் கூட இருப்பார். தாய்மார்கள் வேலை விட்டு வரும் வரையும் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வார்கள்.

அக்கால கட்டத்தில் சீலையால் கட்டப்பட்ட ஊஞ்சல், சின்னக் குழந்தைகள் விளையாடுவதற்கான விளையாட்டுப் பொருட்கள் இருந்தன. இப்பொழுது அவை நவீன வசதிகளுடன் காணப்படுகின்றன. பொதுவாக சிறுவர் பூங்காவில் பிள்ளைகள் ஓடி, ஆடி ஏறிப் பாய்ந்து, சுற்றி விளையாடும் அத்தனை விளையாட்டுக்குரிய காட்சி உபகரணங்களும் உள்ளன. தோட்ட அரச யாக்கத்திற்குரிய கம்பனிகள் நவீன வசதிகளுடன் இந்தப்பிள்ளை பராமரிப்பு நிலையத்தை செய்து கொடுத்துள்ளார்கள்.

ஆரம்ப காலத்தில் துணியில் தான் பிள்ளைகளைத் தூங்க வைப்பார்கள். அந்தக் காலத்தில் எமது அம்மாமார்கள் துணியில் கட்டித் தொங்கும் தொட்டிலில் போட்டு குழந்தைகளை ஆட்டுவார்கள். அது ரொம்ப சுகமாக இருக்கும். பிள்ளைகள் நன்றாகத் தூங்குவார்கள்.



இப்போது அந்த தொட்டில் கிடையாது. பலகையில் செய்த ஊஞ்சல்கள் பல வகைகள் உள்ளன. எனினும் பிள்ளைகளைத் தொட்டிலில் போட்டு தூங்கச் செய்யும் சீலைத் தொட்டில் சில தோட்டங்களில் இன்னும் இருக்கின்றன. அவற்றைப் பிள்ளை மடுவம் என்று மலையக மக்கள் அழைப்பார்கள்.

பிள்ளைகளைக் கழுவி துடைப்பதற்கு 'ஆயா' இருப்பார். குழந்தை அழுதால் அப்பிள்ளையை தேற்றி விடுவார். தாலாட்டுப் பாடுவார். உணவுகளை ஊட்டி விடுவார். அவைகளைச் சொல்லிக் கொடுப்பதற்கான படித்த பெண் ஊழியர் ஒருவர் இருப்பார். அவர் பாட்டுக்களைப் பாடி நடனமாடி குழந்தைகளை மிகவும் பக்குவமாகப் பராமரித்து வருவார்,



அதிலும் தோட்டப்புறங்களில் பிள்ளை மடுவத்தில் இரண்டு வயதுக் குழந்தைகளே அதிகளவு உள்ளன. மூன்று வயதானால் பிள்ளைகளை முன்பள்ளிப் பாடசாலைகளுக்கே அனுப்பிவிடுவார்கள். தாய்மார்கள் வேலைக்குப் போகும் போது பால், பிஸ்கட் போன்ற உணவுப் பண்டங்களைக் கொடுத்து விட்டுச் செல்வார்கள். ஆனாலும் முறையாகவும் கவனமாகவும் கவனிப்பது குறைவு.

குழந்தைப் பராமரிப்பு நிலையம் உலகிலுள்ள நாடுகளில் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. தாய்மார்கள் பிள்ளைகளுடன் பால், உணவு வகைகள், பிஸ்கட் வகைகள் எல்லாவற்றையும் குழந்தை பராமரிப்பு நிலையத்திற்கு கொடுத்து விட்டுச் செல்வார்கள். அது பெரிய இடங்களில் மிகவும் தரம் வாய்ந்தவையாக இருக்கும். ஒரு குழந்தைக்கு சுகயீனம் என்றால் உடனே வைத்தியரை வர வழைப்பார்கள். அல்லது அதற்கென்றதொரு வைத்தியரை நியமனம் செய்து வைத்திருப்பார்கள். இது இலங்கையில் ஏனைய இடங்களிலும் தோட்டப்புறங்களிலும் அப்படி இல்லை.

தோட்டப்புறங்களில் எட்டு மணித்தியாலம் வேலை முடிந்து செல்லும் வரையிலும் பிள்ளைகளை வைத்துக் கொள்வார்கள். வைத்தியர் மருத்துவ உதவிகள் எவையும் இங்கு இருக்காது. பிள்ளைகளைப் பார்த்துக் கொண்டு இருப்பார்கள். தூங்கும் போது தூங்க வைப்பார்கள், சாப்பிடும் போது சாப்பிட வைப்பார்கள். அதுதான் அவர்களுடைய வேலையாகும்.

இப்பொழுது அதிகமான இடங்களில் குழந்தைகளை குழந்தைப் பராமரிப்பு நிலையத்தில் விட்டுச் செல்வது மிகவும் குறைவு. ஏனென்றால் சம்பள உத்தியோகத்தர்கள் ஒழுங்கான முறையில் கவனிக்கமாட்டார்கள் என்ற மனோ நிலை தாய்மார்களுக்கு இருக்கிறது. ஆதலால் கொஞ்சம் கொஞ்சமாக இந்தப் பிள்ளைப் பராமரிப்பு மடுவம் குறைந்து வருகிறது. பிள்ளைகளுக்கு அடிப்பார்கள். பாசத்தோடு பார்க்க மாட்டார்கள். குழந்தைகளை மனமுவந்து பராமரிக்கக் கூடிய பாசம் இல்லை. ஆகவே தாய்மார்கள் தம் குழந்தைகளை உறவுகளிடத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கிறார்கள். தம் பிள்ளைகளைப் பராமரிக்க யாருமே இல்லை என்ற சந்தர்ப்பத்தில்தான் தாய்மார்கள் பிள்ளைகளை மடுவத்தில் கொடுத்துச் விட்டுச் செல்கின்றனர். அதுவும் பெரியளவிலில்லை. அது அரிதாகி விட்டது. இந்தக் குழந்தைகளின் பராமரிப்புக்கு தோட்ட வைத்தியசாலையின் மூலம் திரிபோசா, சம போசா போன்ற உணவுகள் வழங்குவார்கள். அதே போன்று அரசாங்கமும் வழங்கி வந்தது. இப்பொழுது அவை கிடைக்கிறதா இல்லையா என்பது தெரியாது.

எனினும், பொதுவாக மலையகத்தில் போசாக்கற்ற தன்மை உண்டு. காரணம் பொருளாதார ரீதியாக அவர்கள் இன்னும் வளர்ச்சி பெறவில்லை. கர்ப்பிணித் தாய் என்பவள் கூட போசாக்கு அற்ற தன்மையில்தான் காணப்படுகின்றாள், பெருந்தோட்டப்புறங்களைப் பொறுத்தவரையில் கணிசமானளவு போசாக்கற்ற தன்மையே காணப்படுகிறது. தாய்க்கு சிறந்த போசாக்கு உணவு இருந்தால் மட்டும் தான் குழந்தைகளுக்கு சிறந்த தாய்ப்பாலைக் கொடுக்க முடியும். தாய்க்கு ஒழுங்காக சீராக உணவுகள் வழங்கப்பட வேண்டும். ஒரு நாள் ரூபா 1000 சம்பளத்தினால் பால் கொடுக்க முடியாது. குழந்தைக்கு எஸ். எம். ஏ. பால் டின் அல்லது லக்டோசன் பால் வாங்கி கொடுக்க முடியுமா? முடியாது ? இந்தச் சம்பளத்தைக் கொண்டு என்னவென்று வாங்கிக் கொடுப்பது.? தோட்ட மக்களிடத்தில் அப்படியான வசதிகள் இல்லை. மலையக மக்களிடத்தில் நூற்றுக்கு நூறு விகிதம் காணப்படும் மிகப்பெரிய பிரச்சினை இதுதான். இதற்குக் காரணம் சம்பளப் பிரச்சினையே. எந்தவொரு குடும்பத்திற்கும் பொருளாதாரம் முக்கியம். பிள்ளைகள் வளர்ப்பது என்றால் வருமானம் இருக்க வேண்டும். வருமானம் இல்லை என்றால் எப்படி குழந்தைகளுக்கு போசாக்கான உணவுகளை வாங்கிக் கொடுப்பது. இதற்குக் காரணம் மலைநாட்டிலுள்ள அரசியல் கலாசாரம் தான்.



இந்த மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் ஆகின்றன. இந்தப் பெருந்தோட்ட மக்களை இன்னும் இந்த நாட்டு மக்களாக ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு வாக்குரிமை மட்டும் தான் இருக்கிறது.

இந்த மக்களுக்கென தனியான சொந்தக் காணி நிலம் இருந்தால் ஆடு, மாடு, கோழி போன்றவற்றை வளர்த்து தங்களுடைய குடும்ப பொருளாதாரத்தையும் குழந்தைகளையும் வளர்க்கக் கூடிய வளம் அமைந்திருக்கும். இந்த மக்களுக்கு நிலங்கள் வழங்கினால் சுயமாக தொழில்களைச் செய்து அதிக வருமானத்தை ஈட்டுவார்கள். சிங்கள தாயார் ஒருவருக்கு காணி வழங்கப்படுமாயின் அவர் அக்காணியில் 'வெரலுக்காய்' மரத்தை நட்டு 50 அடி உயரத்திற்கு வளர்த்து விடுவார். அது மட்டுமல்ல அந்த தாய் வெரலுக்காய் மரத்தில் ஏறி காய்களைப் பறித்து அதற்கு உப்பு மிளகாய் தூள்களைப் போட்டு அருகிலுள்ள பாடசாலைக்கு முன்னால் இருந்து விற்பனை செய்வார். அவர் வீட்டுக்குப் போகும் போது பால் ப கைட்டும் கருவாடும் வாங்கிச் செல்வார். வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு பாலும் குடிக்கக் கொடுப்பார். மாலையில் காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந் து பயிர் பச்சைகளைப் பாதுகாப்பார்கள். இப்படி கடின சவால்களை எதிர் கொண்டு சிங்கள தோட்ட மக்கள் போசாக்கு உணவை தினமும் பெற்று வருகின்றனர்.



ஆனாலும் தமிழ் தோட்டப்புற மக்களுக்கு காணி இல்லை. அவர்கள் தங்களுடைய தோட்டச் சம்பளத்தை விட மேலதிகமான சம்பளத்தைப் பெற்றுக் கொள்ள வழி இல்லை. குறித்த சம்பளத்தைக் கொண்டு குழந்தைகளுக்குப் போசாக்கான உணவுகளை வழங்கவோ, பிள்ளை மடுவத்தில் பிள்ளைகளுக்குத் தேவையான போசாக்கு உணவுகளை வழங்கி விட்டுச் செல்லவோ தாய்மார்களிடத்தில் பொருளாதார வசதிகள் இல்லை.

ஹந்தானை மத்திய பிரிவு ஜனதா பெருந்தோட்ட யாக்கத்திற்கு உட்பட்ட தோட்டப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிள்ளை பராமரிப்பு நிலையம் ஒன்று அமைந்துள்ளது.



இத்தோட்டத்தில் 860 குடும்பங்கள் வாழ்கின்றன. வெளிப் பிரதேசத்தில் உள்ளவர்களும் இங்கு வந்து குடி இருக்கிறார்கள். மத்திய பிரிவில் மக்கள் கண்டி நகருக்கு வேலைக்குச் செல்கிறார்கள். அதில் 40 குடும்பங்கள் தோட்டத்தில் வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். நான்கு பிள்ளைகள்தான் இங்குள்ள பிள்ளை மடுவத்தில் தோட்டத்தில் வேலை செய்யும் தாய்மார்களுடைய பிள்ளைகளாக இருக்கின்றன. ஏனையவர்கள் கண்டிக்கு வேலைக்குச் செல்லும் தாய்மார்களின் பிள்ளைகள்.



இங்கு கடமையாற்றுகின்ற 'ஆயா' மற்றும் படித்த பெண்மணிக்கு தாய்மார்கள் எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்குவதில்லை. அதற்கான ஊதியத்தை தோட்ட நிர்வாகம் வழங்குகின்றது. உண்மையிலே திறமைமிக்க துடிப்புள்ள பிள்ளைகள் இங்கு பராமரிக்கப்படுகின்றார்கள்.

பிள்ளை மடுவத்தில் காலையில் 7.30 மணி முதல் மாலை 2.00 மணி வரை பிள்ளைகள் வைத்து பராமரிக்கப்படுவார்கள்.

இரண்டு வயது பிள்ளைகள் முதல் ஐந்து வயதுப் பிள்ளைகள் வரையிலும் இந்த நிலையத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். தாய்மார்கள் வேலைக்குச் செல்லும் போது பிள்ளைகளுக்குரிய உணவுகளைக் கொடுத்து விட்டுச் செல்வார்கள். மாதம் ஒரு தடவை போசாக்கு உணவுகள் வழங்கப்படும். ஆரம்பத்தில் பிள்ளைகளை சேர்த்து விட்டுச் செல்லும் போது பிள்ளைகள் அழுவார்கள். அது காலம் செல்லச் செல்ல அங்குள்ள ஆயாவுக்கு ஆசிரியைக்கும் நன்கு பழக்கப்பட்டு விடுவார்கள். பின்பு குழந்தைகள் அழ மாட்டார்கள்.



தாய்மார்கள் காலையில் பிள்ளைகளை மடுவத்துக்கு 'மலசலம்' கழிக்கச் செய்து நன்கு குளிப்பாட்டி சுத்தமாகத்தான் கொடுத்து விட்டுச் செல்வார்கள். தற்போது பிள்ளை மடுவங்களில் முன்பள்ளிப் பாடசாலையும் நடைபெறுகின்றது. இந்த இடத்தில் தமிழ் உயிர் எழுத்துக்களின் பெயரை மட்டும் சொல்லிக் கொடுக்கும்படியும் வர்ணம் தீட்டுகின்ற பயிற்சிகளை மட்டும் கொடுக்க வேண்டும் என்றும் கூறியிருக்கின்றனர். ஆனால் தாய்மார்களிடத்தில் தமிழ் எழுத்துப் பயிற்சிகளை வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது.

ஏதாவது பிள்ளைகளுக்கு சுகயீனம் என்றால் தொலைபேசியின் மூலம் அறிவித்தல் விடுக்கப்படும். அவர்கள் உடன் வந்து மருந்து எடுத்துக் கொடுத்து விட்டு மீளவும் பிள்ளைகளை ஒப்படைத்து விட்டுச் செல்வார்கள். ஒவ்வொரு பிள்ளைகளின் தாய்மார்களுடைய தொலைபேசி இலக்கங்கள் உள்ளன. அவர்களுக்கு ஏதாவது ஒன்றாயின் உடன் அறிவிப்பார்கள். இது வழக்கமாக நடந்து வரும் விடயமாகும்.

பிள்ளை மடுவத்தில் சாப்பாட்டுக்கான நேர சூசி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. திங்கட்கிழமை எனில் சோறு, பருப்பு என்று குறிப்பிட்டு வழங்கப்படும். ஆனால் அவ்வாறு செய்ய முடியாத நிலையில் பெற்றோர்கள் உள்ளனர். இன்றைய பொருளாதார நெருக்கடியில் குறித்த சாப்பாட்டை குழந்தைகளுக்கு வழங்க முடியாத நிலையில் உள்ளனர்.

சம்பல் ரொட்டி போன்ற உணவுகளையே தினசரி பிள்ளைகள் கொண்டு வருகின்றனர். குழந்தைகளுக்குக் கொண்டு வரும் உணவுகளை வைத்து தோட்டப்புற லயன்களில் வாழும் மக்களின் நிலைமை என்னவென்று அறிந்து கொள்ள முடியும். அந்த வகையில் போசாக்கு உணவுகளை மாதத்திற்கு இரு முறை வழங்குவதற்கான நடவடிக்கைகள் தாய்மார்கள் சேர்ந்து மேற்கொண்டு வருகின்றனர். பிரதேச செயலகத்தின் ஊடாகவும் இந்தப் பிள்ளைகளுக்கு போசாக்கு உணவுகள் வழங்கப்பட்டன. அது இடையில் நிறுத்தப்பட்டுள்ளது. அவ்வுணவுகளை மீளவும் வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகள் சற்று தவறி விழுந்து விட்டால் இங்கு பிள்ளைகளைப் பராமரிக்கும் ஆயா மற்றும் ஆசிரியை எதிர் நோக்கும் சவால்களும் உள்ளன. இருப்பினும் அவை பெரியளவிலில்லை.

லயன் காமராக்களில் வாழ்வதால் ஆரோக்கியமான வாழ்விடங்களை சிறிய பிள்ளைகள் அனுபவிப்பதில்லை.

குறுகிய வட்டத்திற்குள் வாழ்வதால் குழந்தைகளுக்கு விளையாடுவதற்கான இடவசதிகள் இல்லை. இரு அறைகள்தான் உள்ளன. இதனால் குழந்தைகள் தங்களுடைய தூக்கத்தை சீரான முறையில் தூங்க முடியாத நிலையில் உள்ளனர். சிலவேளை தந்தை மது அருந்திக் கொண்டு வந்தால் அதன் மூலம் குழந்தைகள் அடையும் பாதிப்பு அளப்பரியது.

எனவே, 'மலையகம் 200' ஆண்டு நிறைவு தின நிகழ்வில் மலையகத்தில் பிள்ளை மடுவம் அரிதாகி வருவதையும் அவர்களுடைய நிலைமை குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துப் பார்ப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**✍ எஸ். சோமசுந்தரம்**

தினகரன்
THINAKARAN


# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

### சுகாதார அமைச்சு – சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்

(HSEP)

### விலைமனுக்கூறுகளுக்கான தேவைப்பாட்டு – வேலைகள்

| திகதி | 2023 நவம்பர் 16 |
|---|---|
| கடன்/மானியம் இல. மற்றும் தலைப்பு | சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் (AF) JFPR Grant |
| ஒப்பந்த தலைப்பு | Procurement of Works – Construction of Suwaseriya Paramedical Staff based and Ambulance Stations – W14(AF) |
| லொட்டுக்கள் | கீழே பட்டியலிடப்பட்டவாறு 20 எண்ணிக்கையுள்ள தனிநபர் ஒப்பந்தங்கள் |
| விலைமனுக்களை சமர்ப்பித்தலுக்கான இறுதி திகதி | 2023 நவம்பர் 30 |

1. சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் - மேலதிக நிதிசாருக்கான ஆகுசெலவிற்காக ஏழ்மை குறைப்பிற்கான ஜப்பான நிதியத்திடமிருந்து மானியமொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இந்த நிதியிடல் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்தங்களுக்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது. ஆஅவ இன் தகுதியுள்ள வளநாடுகளின் விலைமனுதாரர்கள் இந்த விலைமனுக்கோரலில் பங்கு பற்றலாம்.
2. சுகாதார அமைச்சின் செயலாளரின் அலுவலகத்தின் கீழ் (''தொழில் வழங்குநர்'') கொழும்பு-08, கின்ஸி வீதி, சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்ட செயற்றிட்டப் பணிப்பாளரானவர் பின்வருமாறு 20 எண்ணிக்கையான புதிய அம்புலன்ஸ் நிலையங்களை நிர்மாணிப்பதில் அடங்கலாக பூர்த்தி செய்யும் வேலைகளுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கூறுகளை அழைக்கின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | மாவட்டம் | அமைவிடம் (பொலிஸ் நிலையம்) |
|---|---|---|
| HSEP(AF)/PMU/PRO/W14.1/236/2023 | புத்தளம் | புத்தளம் |
| HSEP(AF)/PMU/PRO/W14.2/237/2023 | குருநாகல் | நாரம்மல |
| HSEP(AF)/PMU/PRO/W14.3/238/2023 | மாத்தளை | தம்புள்ள |
| HSEP(AF)/PMU/PRO/W14.4/239/2023 | கண்டி | பல்லேகல |
| HSEP(AF)/PMU/PRO/W14.5/240/2023 | நுவரெலியா | கொத்மலை |
| HSEP(AF)/PMU/PRO/W14.6/241/2023 | கிளிநொச்சி | முழங்காவில் |
| HSEP(AF)/PMU/PRO/W14.7/242/2023 | வவுனியா | மாங்குளம் |
| HSEP(AF)/PMU/PRO/W14.8/243/2023 | அனுராதபுரம் | அனுராதபுரம் |
| HSEP(AF)/PMU/PRO/W14.9/244/2023 | பொலன்னறுவ | கதுருவெல |
| HSEP(AF)/PMU/PRO/W14.10/245/2023 | திருகோணமலை | பழைய பொலிஸ் நிலையம், திருகோணமலை |
| HSEP(AF)/PMU/PRO/W14.11/246/2023 | அம்பாறை | அம்பாறை |
| HSEP(AF)/PMU/PRO/W14.12/247/2023 | கேகாலை | பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகம், கேகாலை |
| HSEP(AF)/PMU/PRO/W14.13/248/2023 | இரத்தினபுரி | உடவளவ்வே |
| HSEP(AF)/PMU/PRO/W14.14/249/2023 | பதுளை | ஊவா பரணகம |
| HSEP(AF)/PMU/PRO/W14.15/250/2023 | மொனராகல | மொனராகல |
| HSEP(AF)/PMU/PRO/W14.16/251/2023 | கம்பஹா | கட்டான |
| HSEP(AF)/PMU/PRO/W14.17/252/2023 | களுத்துறை | மத்துகம |
| HSEP(AF)/PMU/PRO/W14.18/253/2023 | காலி | ஹிக்கடுவ |
| HSEP(AF)/PMU/PRO/W14.19/254/2023 | மாத்தறை | கம்புறுப்பிட்டிய |
| HSEP(AF)/PMU/PRO/W14.20/255/2023 | ஹம்பந்தொட்ட | அம்பலந்தொட்ட |

3. விலைமனுக்கூறுகளுக்கான விண்ணப்பம் (வேலைகள்): விலைமனுக்கோரலானது ஆஅவ இன் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டிகளுக்கமைவாக நடத்தப்படும்.
4. தகைமையை பெறுவதற்கான உங்களின் தகைமைகள்:
   - அ. சேவை நாடுநரின் பூர்த்தி செய்யப்பட்ட சான்றுபகரும் இந்த விலைமனுக்கூற்றினால் அடக்கப்படும் வேலைகளுக்கு நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மையில் கடந்த 3 வருடங்களில் ஆகக் குறைந்தது ஒரு வேலையின் நிர்மாணத்தில் முதன்மை ஒப்பந்தக்காரராக பணியாற்றிய அனுபவம்; அத்துடன்
   - ஆ. 10,000 இலங்கை ரூபா தொகையில் வேலைகளை சித்திகரமாக பூர்த்தி செய்வதற்காக இருப்பிலுள்ள நிதியிடலுக்கான ஆதாரத்தை வழங்கல். ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் தனித்தனியாக புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட கடன் வரிசையொன்றை நீங்கள் வழங்கல் வேண்டும். இல்லையெனின் உங்கள் விண்ணப்பமானது இதற்கு மேல் கவனிக்கப்பட மாட்டாது.

RFQW ஆவணத்தில் தகைமை தகவுத்திறனானது மேலதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது.

5. மேலதிக தகவலைப் பெறுவதற்கும் RFQW ஆவணங்களை இலவசமாக பரீட்சிப்பதற்கும் விலைமனுதாரர்கள் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளவும்.

   செயற்றிட்டப் பணிப்பாளர்,
   சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
   இல.: 3/19, கின்ஸி வீதி,
   கொழும்பு-08, இலங்கை.

   மின்னஞ்சல்: pmu@hsep.lk
   தொலைபேசி: 011-2 697 173 மற்றும் தொலைநகல்: 011-2 697 163
6. ஆங்கிலத்திலுள்ள RFQW ஆவணங்கள் www.hsep.lk என்ற செயற்றிட்ட இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்படலாம் அல்லது pmu@hep.lk என்பதற்கு விண்ணப்பமொன்றின் அடிப்படையில் இலவசமாக மின்னஞ்சலில் அனுப்பப்படும்.
7. உங்கள் விலைமனுக்கூறுகளை பின்வரும் முகவரியில் 2023.11.30 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக ஒப்படைக்கவும்.

   செயற்றிட்டப் பணிப்பாளர்,
   சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,
   இல.: 3/19, கின்ஸி வீதி,
   கொழும்பு-08, இலங்கை.

   தாமதமான விலைமனுக்கூறுகள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கூறுகள் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நேரத்தின் பின்னர் உடனடியாகவே விலைமனுதாரர்கள் அல்லது சமுகமளித்திருக்கும் அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைமனுக்கூறுகள் விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. சுகாதார அமைச்சின் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம் அல்லது அலுவலகமானது விலைமனுக்களின் தயாரித்தல் அல்லது ஒப்படைத்தல் தொடர்பாக விலைமனுதாரர்களுக்கேற்படும் எந்தவொரு ஆகுசெலவிற்கும் அல்லது செலவினத்திற்கும் பொறுப்பேற்க மாட்டாது.
10. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னராக உள்ளூர் விலைமனுதாரர்கள் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**தலைவர் / செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்றிட்டம்,**
**இல.: 3/19, கின்ஸி வீதி,**
**கொழும்பு-08, இலங்கை.**
**திகதி: 16.11.2023**

## இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

2009ம் ஆண்டு 20ம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12 (1) (அ) பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்.

### அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான உத்தேசம்

2009ம் ஆண்டு 20ம் (திருத்தப்பட்ட) இலக்க இலங்கை மின்சாரச் சட்டத்தின் 12(1) (அ) பிரிவிற்கமைய, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ("ஆணைக்குழு") நுகர்வோருக்கு தொடர்ச்சியாக மின்சார விநியோகத்தைக் கிடைக்கச் செய்வதை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பின்வரும் நபர்களுக்கு மின்சாரத்தினை பிறப்பாக்கம் செய்யும் நோக்கத்திற்கான அனுமதிப்பத்திரத்தினை மேம்படுத்த உத்தேசிக்கின்றது என்பதை இத்தால் அறியத்தருகின்றது.

| விண்ணப்ப குறிப்பு இல. | விண்ணப்பதாரர் | மின் நிலையம்/ வசதியின் பெயர் | இடம் | திறன் (MW) | தொழினுட்பம் |
|---|---|---|---|---|---|
| E/AL/N/23/19 | நோரா என்ட் நோரா ஹைட்ரோபவர் (பிரைவேட்) லிமிடெட் | ப்பொரஸ்ட்ஹில் மினி நீர்மின் நிலையம் | ப்பொரஸ்டஹில், மொலொகொட, கேகாலை | 0.3 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/24 | ரெசஸ் எனர்ஜி பிஎல்சி | கித்தாவா மினி நீர்மின் நிலையம் | கித்தாவா,தெல்தெனிய | 2.2 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/25 | மாகல் கங்கா பவர் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் | மாகல் கங்கா மினி நீர்மின் நிலையம் | மாலிபொட தோட்டம், நெக்கவிட்ட, தெரணியகல | 9.928 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/26 | ஆல்டர்நேட் பவர் சிஸ்டம்ஸ் (பிரைவேட்) லிமிடெட் | அடவிகந்த மினி நீர்மின் நிலையம் | லஸ்ஸகந்த, எரத்னா, குருவிட்ட | 6.5 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/34 | லோட்டஸ் ஹைட்ரோ பவர் பிஎல்சி | சங்குஹார் மினி நீர்மின் நிலையம் | சங்குஹார் ஸ்டேட், அட்டபாகே, கம்பளை | 1.6 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/35 | செரண்டிப் எனர்ஜி (பிரைவேட்) லிமிடெட் | ரிதிகஹாஓயா II மினி நீர்மின் நிலையம் | பவர் ஹவுஸ் வீதி, நெலுவாக்கனை, தெதுகல | 0.8 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/36 | விதுல்லங்கா பி.எல்.சி | படதொட்ட மினி நீர்மின் நிலையம் | பண்ணம, சுதாகல, குருவிட | 2.6 | மினி ஹைட்ரோ |
| E/AL/N/23/37 | மானேல்வல ஹைட்ரோபவர் பிரைவேட் லிமிடெட் | மானேல்வல மினி நீர்மின் நிலையம் | படகொல்லாகம, வலப்பனை, நுவரெலியா | 2.4 | மினி ஹைட்ரோ |

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகள் தொடர்பான, ஆட்சேபனைகள் (ஏதுமிருப்பின்) அறிவித்தல் வெளியிடப்பட்டு இருபத்து எட்டு (28) நாட்களுக்குள் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம். அத்துடன் ஆட்சேபனைகளை முன்வைக்கும்போது விண்ணப்பக் குறிப்பு இலக்கத்தினைக் குறிப்பிட்டு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தலைவர்
இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
06-வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,
இலக்கம் 28, புனித மைக்கல் வீதி, கொழும்பு 03

திகதி: 2023.11.16

தொலைபேசி: (011) 2392607/8
தொலைநகல்: (011) 2392641
டெக்ஸ்: licensing@pucsl.gov.lk
இணையதளம்: www.pucsl.gov.lk

## ஸ்ரீ லங்கா இன்ஸ்டிடியுட் ஒப் பயோடெக்னொலொஜி (பிரைவட்) லிமிட்டட்

## (Sri Lanka Institute of Biotechnology Pvt Ltd)

SLIBTEC

**SLIBTEC 1ஆம் படிநிலை கட்டிடம், மெஹென்வத்த, தலகல வீதி, பிட்டிபன, ஹோமாகம**

**+94 11 343 1844**

**https://slibtec.gov.lk/**

# வழங்குநர்களைப் பதிவு செய்தல் — 2024

2024ஆம் வருடத்தில் வ/ப இலங்கை உயிரியல்தொழில்நுட்ப தனியார் நிறுவனத்திற்கு (SLIBTEC) பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் சேவை புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச உற்பத்தியாளர்கள், ஏக முகவர்கள், விநியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர்கள், மொத்த விற்பனை நிறுவனங்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்களை அழைக்கின்றது.

**பொருட்கள்**

1. ஆய்வுகூட உபகரணங்கள்
2. ஆய்வுகூட பாவனைப் பொருட்கள் (சிரிஞ்சுகள், மையநீக்கிக் குழாய்கள், குழாய் குறிப்புகள், இரத்த சேகரிப்பு குழாய் போன்றவை)
3. ஆய்வுகூட கண்ணாடிப் பொருட்கள்
4. ஆய்வுகூட இரசாயனப் பொருட்கள்
5. வாயுக்கள் மற்றும் உறைநிலை பனிகள் (திரவ N2, உலர் பனி போன்றவை)
6. ஆய்வுகூட துணைப்பாகங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் (முகக் கவசம், முகமூடிகள், அறுவை சிகிச்சை கையுறைகள், ஆய்வுகூட கோட்டுகள், காலணி உறைகள், காலணிகள், PPE கிட்கள் போன்றவை)
7. IT வன்பொருள், மென்பொருள் மற்றும் வலையமைப்புகள் (கணனிகள், மடிக்கணனிகள், அச்சுப்பொறிகள், ஸ்கேனர்கள், மல்டிமீடியா புரஜெக்டர்கள், புகைப்படப்பிரதி இயந்திரங்கள் மற்றும் பிற இறுதிப் பயனர் புற சாதனங்கள் / துணைப்பாகங்கள் போன்றவை)
8. கணனி மென்பொருள் மற்றும் செயலிகள்
9. வலையமைப்பிடல் மற்றும் தொடர்புடைய துணைப்பாகங்கள்
10. அச்சிடல் பாவனைப் பொருட்கள் (டோனர், கார்ட்ரிட்ஜ், ரிப்பன், இமேஜிங் டிரம் போன்றவை)
11. தொலைபேசி/IP தொலைபேசி உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
12. ஆய்வுகூட தளபாடங்கள்
13. அலுவலக தளபாடங்கள்
14. அலுவலகம்/மின்சார உபகரணங்கள் (மைக்ரோவேவ், Shredder, குளிர்சாதனப்பெட்டி போன்றவை)
15. வளிச்சீராக்கிகள் மற்றும் ஈரப்பதமாக்கிகள்
16. அலுவலக காகிதாதி வழங்குநர்கள்
17. உட்புற/வெளிப்புற பிராண்டிங், விளம்பரம் மற்றும் Signage
18. இலவச வழங்கல்கள் (Complementary), விளம்பரப் பொருட்கள் மற்றும் கோர்ப்பரேட் பரிசுப் பொருட்கள் (டீ-ஷேர்ட்கள், தொப்பிகள், பயணப் பைகள், குடைகள், குவளைகள், டையரிகள் போன்றவை)
19. இரசாயனங்களை சுத்தம் செய்தல்
20. IT மற்றும் இலத்திரனியல் தொடர்பான பராமரிப்புக் கருவிகள்
21. திகதி முத்திரைகள், இறப்பர் முத்திரைகள் மற்றும் பெயர்ப் பலகைகள் (அலுமினியம்/பிளாஸ்டிக்/பித்தளை போன்றவை)
22. மின்சார வயரிங் பாகங்கள் மற்றும் கருவிகள்
23. குழாய்வேலை பொருட்கள் மற்றும் கருவிகள்
24. நிர்மாணப் பொருட்கள் (சீமெந்து, மணல், செங்கல், சீமெந்து புளக்குகள், மரம், நிறப்பூச்சி மற்றும் தொடர்புடைய கனரகப் பொருட்கள்)
25. பிளாஸ்டிக் பொருட்கள்
26. தோட்டக்கலை துணைப்பாகங்கள்
27. ஆய்வுகூட ரீஜெண்ட் (மூலக்கூறு உயிரியல்)
28. கழிவு முகாமைத்துவப் பொருட்கள் (அனைத்து வகையான குப்பை பைகள் மற்றும் தொட்டிகள், கூர்மையான கொள்கலன்கள், பருத்தி துணி, Spill Kit)
29. ஆராய்ச்சி மற்றும் மருத்துவ ஆய்வுகூட வழங்குநர்கள்

**சேவைகள்**

1. ஆய்வுகூட பரிசோதனை
2. பொறியியல் சேவைகள் மற்றும் நிர்மாண சேவைகள்
3. சட்ட சேவைகள்
4. மென்பொருள்/இணையதள அபிவிருத்தி சேவைகள்
5. தொலைத்தொடர்பு சேவைகள்
6. அச்சிடும் சேவைகள்
7. பாதுகாப்பு சேவைகள்
8. சுத்திகரிப்புச் சேவைகள்
9. தேநீர் சேவைகள்
10. நிகழ்வுகளுக்கான கேட்டரிங் சேவைகள்
11. நிகழ்வுகளுக்கான தளபாட வாடகை சேவைகள்
12. குடிநீர் சேவைகள்
13. சந்தைப்படுத்தல்/விளம்பர முகவர்கள்
14. பானை தாவரங்கள் / நிலச்சீராக்க சேவைகள்
15. காப்புறுதிச் சேவைகள்
16. புகைப்படப்பிடிப்பாளர்கள் மற்றும் வீடியோகிராபர்கள்
17. டிசைனிங் மற்றும் வரைதல் வேலைகள்
18. கூரியர் சேவைகள்
19. வாகன திருத்தவேலை சேவைகள்
20. வாகனங்களுக்கு டயர் மாற்றும் மற்றும் சீரமைப்பு சேவை
21. உள்ளக வடிவமைப்பாளர்கள் மற்றும் வழங்குநர்கள்
22. பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்துக்கான வாகனங்களை வாடகைக்கமர்த்துதல்
23. கழிவு முகாமைத்துவ சேவை (மருத்துவ, இரசாயன, கதிரியக்க, தொற்று, முதலியன)
24. சலவை சேவைகள்
25. விற்பனை சேவைகள்
26. வளிச்சீராக்கி பராமரிப்பு சேவைகள்
27. குழாய்வேலை மற்றும் மின்சார சேவைகள்
28. வாயு குழாய் வழிகளை நிறுவுதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
29. மனிதவலு வழங்கும் சேவைகள்
30. வெல்டிங் மற்றும் இரும்பு வேலைகள்
31. மேசன், தச்சு, நிறப்பூச்சு வேலைகள்
32. வரி ஆலோசகர் சேவை
33. கணக்காய்வு நிறுவனங்கள்
34. சுற்றுச்சூழல் பகுப்பாய்வு சேவைகள் (காற்று, சத்தம், நீர்/ கழிவு நீர் மற்றும் அதிர்வு)
35. செயல்நிலை தீயணைப்பு சேவைகள் வழங்குநர்கள்
36. நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி மற்றும் பொருத்தமான இரசாயனங்களை வழங்குவதில் நிபுணத்துவம் பெற்ற பொறியியல் நிறுவனங்கள் (கழிவு நீர் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிறுவனங்கள்)
37. ஆய்வுகூட உபகரணங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள்
38. அபாயகரமான மற்றும் அபாயமற்ற கழிவு முகாமைத்துவ நிறுவனங்கள்
39. அலுமினிய கட்டுருவாக்கங்கள்

2024ஆம் வருடத்திற்கு பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை **www.slibtec.gov.lk.** என்ற எமது இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். விண்ணப்பங்கள் பதிவுக் கட்டணம் மற்றும் வழங்குநர்களுக்கான வித ிகள் மற்றும் நிபந்தனைகள் என்பவற்றை உள்ளடக்கியிருக்கும்.

சகல விண்ணப்பங்களும் 2023 டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பிரதான செயற்பாட்டு அதிகாரிக்கு முகவரியிடப்பட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மின்னஞ்சல் ஊடாக விடயத் தலைப்பில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டு பிரதான செயற்பாட்டு அதிகாரிக்கு முகவரியிடப்பட்டு **slibtec@gmail.com** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want
Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON Lake House Branch
Acc. No. 000000377

நீர்ப்பாசன அமைச்சு
பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான
மத்திய ஆலோசனை பணியகம்

cecb

## கொள்முதல் அறிவித்தல்

### கட்டிடங்கள் மற்றும் வீடுகளை வாடகைக்கு /குத்தகைக்கு பெற்றுக்கொள்ளுதல்

பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் பின்வரும் திட்டங்களுக்காக கல்கமுவ மற்றும் தம்புத்தேகமவில் உள்ள அலுவலக கட்டிடங்கள் மற்றும் வீடுகளை வாடகைக்கு/குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்காக முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன. ஆரம்பத்தில் முறையே 9 மற்றும் 6 மாதங்களுக்கு வாடகைக்கு விடப்பட்டது மற்றும் தேவைக்கேற்ப 12 / 09 மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டது.

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | சதுர அளவு |
|---|---|---|
| CB/PO/NCB/2023/03 | கல்கமுவ செயற்திட்ட அலுவலகத்திற்கான கட்டிடமொன்றை வாடகை / குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 150 m² |
| CB/PO/NCB/2023/04 | தம்புத்தேகம செயற்திட்ட அலுவலகத்திற்கான கட்டிடமொன்றை வாடகை / குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 100 m² |
| CB/PO/NCB/2023/05 | கல்கமுவ செயற்திட்ட அலுவலகத்தில் தங்குவதற்காக 2 வீடுகள் வாடகை / குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 150 m² / 120 m² |
| CB/PO/NCB/2023/06 | தம்புதேகம செயற்திட்ட அலுவலகத்தில் தங்குவதற்காக வீடொன்றினை வாடகை / குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் | 150 m² |

- கல்கமுவ மற்றும் தம்புத்தேகம நகரங்களில் அல்லது அதற்கு அருகில் அமைந்திருக்க வேண்டும் மற்றும் குழாய் நீர், மின்சாரம், உயர்தர சுகாதார வசதிகள் மற்றும் கழிவுநீர் அமைப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்.
- வீடுகளில் குறைந்தபட்சம் 03/04 அறைகள் மற்றும் 2 குளியலறைகள், வரவேற்பறையொன்று மற்றும் பென்ரி அலுமாரியுடன் கூடிய சமையலறை, குறைந்தபட்சம் 3 வாகனங்களுக்கான தரிப்பிட வசதியினை கொண்டிருத்தல் வேண்டும்.
- தேசிய போட்டி ஏல முறை மூலம் ஏலம் நடத்தப்படும்.
- குறித்த மாதாந்த வாடகை அனைத்து அரசாங்க வரிகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் அல்லது இல்லாமலேயே விலைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- அதே கட்டிடத்தில் அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகளுக்காகவும் மனுக்கள் சமர்ப்பிக்கப்படலாம்.

மேற்கூறிய தேவைகளைப் பூர்த்தி செய்யும் அலுவலக கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்கு சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுவதற்கான பொறியியல் பணிகளுக்கான மத்திய ஆலோசனைப் பணியகத்தின் தலைமை அலுவலகத்தில், கொள்முதல் அதிகாரியிடமிருந்து **2023.11.16 ஆம் திகதி முதல் 2023.11.29** ஆம் திகதி வரை, **8.30 மணி முதல் 16.15 மணி வரை** பெற்றுக்கொள்ளலாம் மேலும் 011-2668821 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் தேவையான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு மனுதாரர் வீடுகள் மற்றும் கட்டிடங்களுக்கு தனித்தனி மனுக்களை சமர்ப்பிக்கலாம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட மனு ஆவணத்தை **2023.11.30** ஆம் திகதி அன்று **14.00 மணிக்கு** முன் பெறப்பட்ட முகவரிக்கு அனுப்பலாம் அல்லது இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள மனுப் பெட்டியில் இடலாம். அந்தந்த மனுக்கள் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், மேலே கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்த இலக்கங்களுடன், **“அலுவலக கட்டிடங்கள் வாடகைக்கு / குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல் மற்றும் வீடுகளை வாடகை / குத்தகைக்கு பெற்றுக்கொள்வதற்கான விலைமனுக்கோரல்”** எனக் குறிப்பிட வேண்டும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
**பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம்,**
இல.415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.
தொலைபேசி இல : 011-2668800

## பெறுகை அறிவித்தல்

வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சு
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்**

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதான அலுவலகத்திற்கு சுத்திகரிப்புச் சேவையை பெற்றுக்கொள்ளல் - 2023/2024

### விலைமனுக் கோரல்

**WL/02/11/Cleaning Service/HO/2024**

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமையகத்தில் 2023/2024ம் ஆண்டிற்காக சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் தகைமை மற்றும் தகுதியுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

1. சுத்திகரிப்புச் சேவையை வழங்க வேண்டிய தகவல்கள் கேள்வி ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் தேவைப்படின் அலுவலகத்தைப் பரீட்சித்துப் பார்த்து விலைமனுக்களை சமர்ப்பிக்கலாம்.
2. சுத்திகரிப்பு விடயங்களை நிறைவேற்றுவதற்கு குறித்த ஒப்பந்தக் கம்பனிக்கு சுத்திகரிப்பு நிறுவனமொன்றை நடத்திச் செல்வதுடன் சம்பந்தப்பட்ட வியாபார பதிவு இருப்பதுடன் 2023.10.31ம் திகதிக்கு 10 வருடத்திற்கு மேற்பட்ட அனுபவம் இருப்பதுடன், விலைமனுக்களை சமர்ப்பிக்கும் தினம் ஆகும் போது குறைந்தபட்சம் ஐந்து (05) இதற்குச் சமமான சேவைகளை வழங்கியிருத்தல் வேண்டும்.
3. கடந்த 03 ஆண்டுகளில் ஒரு மாதத்திற்கு ரூ. 300,000.00 இற்கு குறையாத வருடாந்த ரூ. 3,600,000.00 குறையாத சேவைகளை வழங்கியதாக ஆவணச் சான்றுகள் மூலம் உறுதி செய்ய வேண்டியதுடன், நிதி நிலைமைப்பாட்டுடனான அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாக உறுதி செய்வதற்கு கடந்த கிட்டிய 03 வருடங்களில் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்ட நிதி அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. நிறுவனத்தின் பொறுப்பில் தற்போது கேள்வியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ள ஊழியர்களில் குறைந்தப்பட்சம் 25 பேர் இருத்தல் வேண்டும், இது ஊழியர் சேமலாப நிதியில் ஆவணங்களின் மூலம் உறுதி செய்யப்படல் வேண்டும்.
5. தயாரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.12.05 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துமூல வேண்டுதலுடன் காசாக ரூ. 1500.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்திய பின்னர் கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணங்களுடன் ரூ.61,000.00 பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதனை அரச அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் காசாளருக்கு 2023.12.05 பி.ப. 3.00 இற்கு முன் காசு செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். கேள்வி ஆவணங்களுடன் கேள்விப் பிணையை சமர்ப்பிக்க முடியாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.
7. கேள்விப் பிணை கேள்வி திறக்கப்படும் தினம் முதல் குறைந்த பட்சம் 90 நாள் காலத்திற்கு செல்லுபடியாதல் வேண்டும்.
8. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.12.06 பி.ப. 2.30 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிட முடியும். அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்வி திறத்தல் அதே தினம் பி.ப. 2.30 இற்கு நடைபெறுவதுடன், அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
9. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112-871537 தொலைபேசி மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி) அழைத்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய் தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக்குழுவிற்கு உரித்தாவதுடன், இந்த அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்படும் அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
10. கேள்விப் பத்திரங்கள் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படும் எந்தச் செலவுகளுக்கும் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி, பத்தரமுல்ல.**

## அறிவித்தல்

## குருநாகல் மாநகர சபை

### 2024 ஆம் ஆண்டிற்கான இறைவரி புத்தகம்

குருணாகல் மாநகர சபையின் 2024 ஆம் ஆண்டிற்கான இறைவரி புத்தகத்தை, அலுவலக நேரத்தில் பரிசோதித்துக் கொள்வதற்கு இவ் அலுவலகம் தயார் நிலையில் இருப்பதை, மாநகர சபை கட்டளைச் சட்ட விதிகளின் கீழ் இதனை அறிவிக்கின்றேன்.

(மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (252 அதிகாரம்) 286 (அ) பிரிவின் கீழ் மாநகர ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு இணங்க)

**எம்.ஏ.பி.சி. ஆலோக பண்டார,**
**மாநகர சபை ஆணையாளர், குருணாகல்,**
**2023.11.10 ஆம் திகதி**
**குருணாகல் மாநகர சபை அலுவலகத்திலிருந்து,**

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

### இறுதி தீர்மான பொது அறிவித்தல்

**உத்தேசிக்கப்பட்ட மேல் எலஹர கால்வாய் திட்டத்தின் ICB -2A ஒப்பந்தத்தொகுப்பின் தென்முனையத்தில் உத்தேச மேலதிக நிலப்பரப்பின் (1.46 ஹெக்டெயர்) ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப) அறிக்கை.**

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது 22 நவம்பர் 2000 ம் திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) ஒழுங்குவிதி 9(i) இற்கமைவாக இல. 500 டீ. பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரியிலமைந்துள்ள, இலங்கை மகாவலி அதிகாரசபையிற்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தினை

குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைவாக வழங்க தீர்மானித்துள்ளது என்பதனை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகிறேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமாக மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் உள்ளது.

**பணிப்பாளர் நாயகம் மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**“பரிசரபியச”,**
**இல. 104,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

**1) கடன் தொடர்பு இல. 87893964**

12/25, இரத்தினபுரி வீதி, முல்லேரியாவ எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தினையுடைய இலக்கம் 552/C சின்னமன் காடன், குடா அருக்கொட, பாணந்துறை எனும் முகவரியில் அமைந்துள்ள வரையறுக்கப்பட்ட M/S டொப் கியர் ஒன் தனியார் நிறுவனத்தார் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.09.08ஆம் திகதி 2349ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.09.06ஆம் திகதி “தினமின”, “தினகரன்”, மற்றும் “டெய்லி நியூஸ்” ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவினையும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த எம்/எஸ் T&H ஒக்ஷன், ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.12.07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட முதலாவது அட்டவணை**

இலக்கம் 36B, வெவ வீதி எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தையும் தற்போது இலக்கம் 12/25, இரத்தினபுரி வீதி எனும் வரி மதிப்பீட்டு இலக்கத்தையும் கொண்ட கொரகாகஹவத்த, பக்மீகாஹாஓவிட்ட மற்றும் தொரலங்கலியத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் ஆர்.டீ. அபேசிங்ஹ தயாரித்த 2010.03.15ஆந் திகதியிட்ட 1751ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு D1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டானது மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை அதிகாரி பற்று, கொடிகாவத்த முல்லேரியாவ பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட, கொலன்னாவ பிரதேச செயலக எல்லைகளுள், 502-உடுமுல்ல வடக்கு கிராம அலுவலர் பிரிவில், முல்லேரியாவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு D1 **வடக்கில்** 1585ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு Cஐயும் **கிழக்கில்** வீதியையும், **தெற்கில்** பீ. சிறிசேன, ஜெ.ஏ. ஹரிச்சந்திர, ரொபட் பெரேரா மற்றும் ஏனையோரினதும் எச்.ஜி. கருணாரத்ன என்பவரின் காணிகளையும் **மேற்கில்** சைமன் பெரேரா மற்றும் ஏனையோரினது காணிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது மூன்று ரூட்ஸ் மற்றும் பதின்மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (AO.R3-P13.50) அல்லது பூச்சியம் மூன்று மூன்று ஏழு ஆறு ஆறு ஹெக்டேயர் (0.33766 ஹெக்டேயர்) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது.

குறித்த காணித்துண்டு D1 ஆனது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.

கொரகாகஹவத்த, பக்மீகாஹாஓவிட்ட மற்றும் தொரலங்கலியத்த என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் அனில் நவகமுவ தயாரித்த 2003.07.22ஆந் திகதியிட்ட 1585ஆம் இலக்க வரைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு D என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணித்துண்டு மேற்குறிப்பிட்டபடி முல்லேரியாவில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டு D **வடக்கில்** காணித்துண்டு Cஐயும் **கிழக்கில்** வீதியையும் **தெற்கில்** பீ. சிறிசேன, ஜெ.ஏ. ஹரிச்சந்திர, ரொபட் பெரேரா மற்றும் ஏனையோரினதும் எச்.ஜி. கருணாரத்ன என்பவரினதும் காணிகளையும் **மேற்கில்** சைமன் பெரேரா மற்றும் ஏனையோரினது காணிகளையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. இக்காணித்துண்டானது 1585ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ளதன்படி மூன்று ரூட்ஸ் மற்றும் பதின்மூன்று தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (AO.R3-P13.50) அல்லது பூச்சியம் தசம் மூன்று மூன்று ஏழு ஆறு ஆறு ஹெக்டேயர் (0.33766) பரப்பளவுடன் அக்காணியிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கி F316/36 எனும் இலக்கத்தின் கீழ் கொழும்பு காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கவனிக்கவும்**

இலங்கை வங்கியின் 21ஆம் பிரிவிற்கமைய 2023.09.06 மற்றும் 2023.09.08ஆம் திகதிகளில் முறையே நாளிதழ்களிலும் அரச வர்த்தமானியிலும் வெளியிடப்பட்ட தீர்மானத்தின் அறிவித்தலின் பின்னர் M/S டொப் கியர் ஒன் தனியார் நிறுவனத்தார் 2023.09.20ஆம் திகதி 1,600,000.00 ரூபாயை வைப்புச் செய்துள்ளனர். 2023.10.25ஆம் திகதி அத்தொகையில் கம்பனியிடமிருந்து நிலுவையாகவுள்ள முதலும் வட்டியும் அறவிடப்பட்டது.

ஏலவிலை கூறுவோர் 0112452059/0112434478 என்ற தொலைபேசி எண்களூடாக புறக்கோட்டை கிளையின் மூப்புநிலை முகாமையாளரைத் தொடர்புகொண்டு உரிமைப் பத்திரங்கள் மற்றும் மேற்கூறிய சொத்துக்கள் தொடர்பான பிற ஆவணங்களை பரிசோதிக்கலாம்.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

**ஆர்.எம்.டி.ரத்னாயக்க**
**மூப்பு நிலை முகாமையாளர்(அறவீடு)**

**இலங்கை வங்கி**
**புறக்கோட்டை கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இல. 80942111.

தொலபிஹில்ல, தொலபிஹில்ல, இல. 159/2 ஐச் சேர்ந்த திரு காலிங்க விஜயசுந்தர ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 ஒக்டோபர் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை 2354ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 ஒக்டோபர் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன அவர்கள் 2023 டிசெம்பர் 04 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் பூஜாபிட்டிய பிரதேச செயலகப் பிரிவில் தொலபிஹில்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில், தொலபிஹில்லயில் அமைந்த குருகுதெவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவுபெற்ற நில அளவையாளர் பிரியந்த புஞ்சிஹேவா தயாரித்த 2004.10.15 திகதியிட்ட வரைபடம் இல.2534இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, வடகிழக்கில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.B. திசாநாயக்க தயாரித்த வரைபடம் இல. 2234இல் காணித்துண்டு இல. 2 மற்றும் 3உம் தென்கிழக்கில் பிரதான வீதியிலிருந்து கிராமம் வரை மாகாண சபை பாதையும் தென்மேற்கில் போதிபாலயும் ஏனையோரும் உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும் மிகவும் சரியானது வரைபடம் இல. 2534 இல் காணித்துண்டு 2உம், வடமேற்கில் மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 2534இல் காணித்துண்டு 2 மிகவும் சரியானது D.R. ஹேவாதிய உரிமை கோரும் ரண்கொத் கெதர வத்தயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் இருபது பேர்ச்சுகள் (ஏ.0, றூ.1,பே.20) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் பக்கம் U51/129 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பூஜாபிட்டிய பிரதேச சபை எல்லைகளுள் பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் தொலபிஹில்ல கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொலபிஹில்லயில் அமைந்த குருகுதெவத்த என அழைக்கும் காணியிலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளர் பிரியந்த புஞ்சிஹேவா தயாரித்த 2004.10.15 திகதியிட்ட வரைபடம் இல. 2534 இல் காணித்துண்டு 02 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வட கிழக்கில் உத்தரவு பெற்ற நில அளவையாளர் பி. புஞ்சிஹேவா தயாரித்த வரைபடம் இல. 2534இல் காணித்துண்டு 1உம் தென் கிழக்கில் பிரதான பாதையிலிருந்து கிராமங்களுக்கு மாகாண சபை பாதையும், தென்மேற்கில் டீ. ஆர். போதிபாலயும் ஏனையோரும் உரிமை கோரும் ரண் கொத் கெதர வத்தயும் வட மேற்கில் டீ.ஆர். ஹேவாதிய உரிமை கோரும் ரண்கொத்கெதரவத்தயும் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் பதின்மூன்று தசம் ஆறு ஏழு பேர்ச்சுகள் (ஏ.0 றூ.1 பே.13.67) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள் ,பயிர்கள், மற்றும் சகலதும் ஆகும். இக்காணி கண்டி காணிப்பதிவகத்தில் U69 /121இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

“மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏல விலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு பூஜாபிட்டிய கிளையில் வைக்கப்பட்டுள்ளது.”

**திருமதி யூ. அலுத்கே**
**கிளை முகாமையாளர்**

**தொ.பே.இல. 081-2301718**
**இலங்கை வங்கி,**
**பூஜாபிட்டிய.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## இலங்கை வங்கி

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் 2000ஆம் ஆண்டின் 54ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் அறிவித்தல்.**

2023.10.02 அன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இவ்வங்கியின் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. பிரசித்த நொத்தாரிசு சாகா லாவண்யா யாப்பா அத்தாட்சிப்படுத்திய 2015.03.19ஆம் திகதிய 314ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை வங்கி வீட்டுக் கடன் மீது 2023.08.02 வரையான வட்டியும் முதலுமாக 14,046,509.80 ரூபாயும் (பதினான்கு மில்லியன் நாற்பத்தாறாயிரத்து ஐந்நூற்று ஒன்பது ரூபாய் எண்பது சதம்) அத்துடன் 2023.08.03ஆம் திகதியிலிருந்து கொடுப்பனவுத் திகதி வரை ஆண்டுக்கு பன்னிரண்டு தசம் ஐந்து வீதப்படி (12.5%) 8,922,270.59 ரூபாய் (எட்டு மில்லியன் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றிரண்டாயிரத்து இருநூற்றெழுபது ரூபாய் ஐம்பத்தொன்பது சதம்) மீதான மேலதிக வட்டியும் இல. 38/19/B, ஸ்ரீ பிம்பராம வீதி, கோலமுன்ன, பிலியந்தல என்ற முகவரியைச் சேர்ந்த திரு. தமித்த அபேகுணரத்ன சமரதுங்கே ரந்துனு மற்றும் திருமதி. ரம்யா குமாரி மகதர ஆகியோரிடமிருந்து வங்கிக்கு வருமதியாகவுள்ளது.
2. மேற்குறித்த 2015.03.19ஆம் திகதிய 314ஆம் இலக்க ஈட்டுமுறியின் பேரில் பெற்றுக்கொள்ளப்பட்ட இலங்கை வங்கி வீட்டுக் கடன் மீதான மேற்குறித்த 14,046,509.80 ரூபாயையும் (பதினான்கு மில்லியன் நாற்பத்தாறாயிரத்து ஐந்நூற்று ஒன்பது ரூபாய் எண்பது சதம்) அத்துடன் 2023.08.03ஆம் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையான மேற்குறித்த வட்டியையும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 26ஆம் பிரிவின்கீழ் அறவிடத்தக்க செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணைகளில் விபரிக்கப்பட்டுள்ள இலங்கை வங்கிக்கு ஈடுவைத்த ஆதனத்தை இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவு (397ஆம் அத்தியாயம்) மற்றும் அதன் திருத்தங்களுக்கமைய பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்ற முகவரியைச் சேர்ந்த M/S T&H ஒக்ஷன்ஸ் நிறுவனத்தின் ஏலதாரர் திரு. முதுகமுவே ஹேவாவசம் துசித் கருணாரத்ன அவர்களுக்கும் இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 21ஆம் பிரிவுக்கமைய இத்தீர்மானத்தின் அறிவித்தலை வெளியிடுவதற்கு இலங்கை வங்கி பிலியந்தல மேற்தரக் கிளையின் சிரேஷ்ட முகாமையாளருக்கும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட முதலாவது அட்டவணை**

“நாகஹவத்த” என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். சமரநாயக்க தயாரித்த 2012.09.29ஆம் திகதிய 11872ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 19B என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி 038/C/6A, ஸ்ரீ பிம்பராம வீதி, என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்துடனும் அதன்கன் காணப்படும் கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் என அனைத்துடனும் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை பள்ளே பற்று கெஸ்பாவ நகர சபை மற்றும் பிரதேச செயலகர் பிரிவு எல்லைக்குட்பட்ட 573 - கோலமுன்ன கிராம சேவகர் பிரிவிலுள்ள கோலமுன்ன கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் 10420A என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 18ஐயும் கிழக்கில் 10420A என்ற வரைபடத்தில் காணித்துண்டு 22 என விபரிக்கப்பட்டுள்ள 15 அடிப் பாதையையும் தெற்கில் காணித்துண்டு 19Aஐயும் மேற்கில் 10420A என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 24ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 11872ஆம் இலக்க வரைபடத்தின்படி ஏழு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே7.50) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த நுகேகொட காணிப் பதிவகத்தில் C 827/68 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மேற்குறிப்பிடப்பட்ட இரண்டாவது அட்டவணை**

1. “நாகஹவத்த” என அழைக்கப்படும் காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் எம். சமரநாயக்க தயாரித்த 2007.12.21ஆம் திகதிய 10420A என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 22 (15 அடிப் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு கோலமுன்ன கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டு 18ஐயும் கிழக்கில் காணித்துண்டுகள் 17, 16, 15, 14, 13 (20 அடிப் பாதைக்கான ஒதுக்கம்) என்பவற்றையும் தெற்கில் காணித்துண்டு 12ஐயும் மேற்கில் காணித்துண்டுகள் 19, 20, 23 (12 அடிப் பாதைக்கான ஒதுக்கம்) என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 10420A என்ற வரைபடத்தின்படி பத்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே10) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த - நுகேகொட காணிப் பதிவகத்தில் C 841/56 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.
2. “நாகஹவத்த” என அழைக்கப்படும் காணியின் 10420A என்ற வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு 13 (20 அடிப் பாதைக்கான ஒதுக்கம்) என அடையாளப்படுத்தப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான காணி மேலே குறிப்பிடப்பட்டவாறு கோலமுன்ன கிராமத்தில் அமைந்துள்ளது. வடக்கில் காணித்துண்டுகள் 6 மற்றும் 16 என்பவற்றையும் கிழக்கில் காணித்துண்டு 25ஐயும் (பாதைக்கான ஒதுக்கம்) தெற்கில் காணித்துண்டுகள் 7 மற்றும் 15 என்பவற்றையும் மேற்கில் காணித்துண்டு 22ஐயும் (15 அடிப் பாதைக்கான ஒதுக்கம்) என்பவற்றையும் எல்லைகளாகக் கொண்டுள்ள இக்காணி குறித்த 10420A என்ற வரைபடத்தின்படி பத்து பேர்ச்சுகள் (ஏ0-ரூ0-பே10) பரப்பளவைக் கொண்டுள்ளதோடு தெல்கந்த - நுகேகொட காணிப் பதிவகத்தில் C 827/67 என்ற இலக்கத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

   மேலும் இக்காணியானது குறித்த 11872ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள பாதை ஒதுக்கங்கள் மற்றும் வடிகாலமைப்பு ஒதுக்கங்கள் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கான உரிமையையும் கொண்டுள்ளது.

இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி

**செல்வி. ஆர். ஏ. எம். டி. சி. தசநாயக்க**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**பிலியந்தல மேற்தரக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)7(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது குறிப்பு இலக்கம் :- KDS / AKU/4/ 2/1/101**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் :- 4 3 /18 /2020/WS/585**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்படும் காணியை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மேலதிக விபரங்களுக்கு 2023.10.25 ஆந் திகதிய இலக்கம் 2355/36 ஐக் கொண்ட இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் (111) ஆம் பகுதியைப் பார்க்கவும்.

**உப அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மத்திய மாகாணம் |
| மாவட்டம் | : கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | : அக்குரணை |
| கிராம அலுவலர் பிரிவு | : விலான உடகம (இல.589) |
| கிராமத்தின் பெயர் | : விலான உடகம |
| காணியின் பெயர் | : ஹபுகொல்ல தோட்டம் |
| அடிப்படை வரை பட இலக்கம் | : கா.சி. 320676 |
| காணித்துண்டு இலக்கம் | : 1 |
| விஸ்தீரணம் | : 0.1015 ஹெக்டேயார் (பர்ச்சஸ் 0.1) |

**ஏ.எச்.எம். இந்திகா குமாரி அபேசிங்ஹ**
**பிரதேச செயலாளர் அக்குரணை**

**2023.11.08 ஆந் திகதி**
**அக்குரணை பிரதேச செயலகத்தில்.**

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460)7(1)ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

**எனது குறிப்பு இலக்கம் :- KDS / AKU/4/ 2/1/53**
**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பு இலக்கம் :- 43 /12 /2018/WS/238**

| SE 02. | அனைத்து வகையான மின்சார உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள், தொலைக்காட்சி உபகரணங்கள் உட்பட) |
| SE 03 | Exhaust Fan (வெளியேற்றும் மின்விசிறி) முறைமையை பராமரித்தல், சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரிப்புகள் |
| SE 04 | வளிச்சீராக்கிகள் மற்றும் குளிர்சாதனங்களைப் பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 05 | உள்ளக மின்சார நிறுவல்கள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் (ICTAD பதிவு EM-04 அல்லது அதற்கு மேல்) |
| SE 06 | மரத் தளபாடங்கள் உட்பட வீட்டுபயோகப் பொருள் திருத்தவேலைகள் மற்றும் பொலிஷ் செய்தல் கதிரைகள் பின்னும் வேலைகள், குஷன் வேலைகள் |
| SE 07 | வைத்தியசாலையின் சகல சத்திரசிகிச்கை உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| SE 08 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம் / நகல் பிரதி இயந்திரம் / தொலைநகல் இயந்திரம் / அச்சுப்பொறிகள்) |
| SE 09 | வெள்ளியிரும்பு மற்றும் துருப்பிடிக்காத உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| SE 10 | அம்பியூலன்ஸ் மற்றும் வாகனங்களை சேர்விஸ் செய்தல் / திருத்தவேலைகள் |
| SE 11 | அப்புறப்படுத்தப்பட்ட பொருட்களின் விற்பனை (கண்ணாடி/பிளாஸ்டிக் போத்தல்/சேலைன் போத்தல்/அலுமினிய தட்டுகள்/எக்ஸ் கதிர் அட்டைகள்/ எக்ஸ்ரே படம் கழுவி அப்புறப்படுத்திய திரவம்/சிரட்டை/டயர்/டியூப்/சமையலறையிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அனைத்துப் பொருட்களும்) |
| SE 12 | கணனி இயந்திரங்களின் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 13 | CCTV முறைமைகளை வழங்கி பொருத்துதல் மற்றும் சேர்விஸ் செய்தல் மற்றும் பராமரித்தல் |
| SE 14 | கணனி வலையமைப்பு முறைமையை பராமரித்தல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 15 | மருத்துவ வாயு முறைமையை சேவை செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் |
| SE 16 | PABX தொலைபேசி முறைமையை சேர்விஸ் செய்தல் / பராமரிப்பு செய்தல் மற்றும் கம்பியிணைப்பு /திருத்தவேலைகள் மற்றும் புதிய தொலைபேசிகளை பொருத்துதல் |
| SE 17 | சலவையகத்தில் பயன்படுத்தப்படும் சகல உபகரணங்களின் திருத்தவேலைகள், பராமரிப்பு மற்றும் சேர்விஸ் செய்தல் |
| SE 18 | நீரை வெளியேற்றுவதற்காக பாவிக்கப்படும் நீர்ப் பம்பிகள் மற்றும் நீர் மோட்டர்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| SE 19 | உரிமை கோரப்படாத சடலங்கள் / உடற் பாகங்களை புதைத்தல் |

1. நிர்மாண வேலைகளுக்கு அரசாங்கப் பத்திரிகைகளில் வேறாக விளம்பரம் பிரசுரிக்கப்படும். அதற்கமைய விண்ணப்பித்தல் வேண்டும்.
2. ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவையின் பொருட்டு பின்வரும் மாதிரிக்கு அமைய வெவ்வேறாக விண்ணப்பித்தல் வேண்டும்.
3. வழங்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை தொடர்பான விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### மாதிரி விண்ணப்பப் படிவம்
### வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பப் படிவம் — 2024/2025
### ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை — கொழும்பு 08

01) வியாபாரத்தின் பெயர் மற்றும் முகவரி :..........................................................
02) விண்ணப்பதாரரின் பெயர் மற்றும் முகவரி :..........................................................
03) வியாபாரப் பதிவு இலக்கம் மற்றும் திகதி.:..........................................................
(இதற்கு இயைபுடைய ஆவணம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
04) வெட் பதிவு இலக்கம் : ..........................................................
(இதற்கு இயைபுடைய ஆவணம் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)
05) பதிவு செய்து கொள்வதற்கு தேவையான பொருள் அல்லது சேவையின் விடய இலக்கம்:..........................................................
06) அந்த விடயத்தின் கீழ் உங்களால் வழங்கும் பொருள் மற்றும் சேவை தொடர்பான விபரங்கள்:..........................................................
(05ஆம் இலக்கத்திற்கு இயைபாக வெவ்வேறாகச் சமர்ப்பித்தல் வேண்டும்)
07) பொருள் வழங்கல் மற்றும் சேவை வழங்கல் வியாபாரத்தின் தன்மை: ..........................................................
(விற்பனை முகவர்கள் / விநியோகஸ்தர்கள் /உற்பத்தியாளர்கள் / மொத்த வியாபார முகவர்கள் முதலியவற்றைக் குறிப்பிடவும். அதற்குரித்தான ஆவணங்களை இணைக்கவும்) : ..........................................................
08) வியாபார தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்: Tel…………………….. Fax ..........................................................
09) மின்னஞ்சல் முகவரி : ..........................................................
10) பிரத்தியேக தொலைபேசி இலக்கம்: ..........................................................
11) முன்னைய வருடத்தில் இவ்வாறான சேவை வழங்கியிருந்தால் அது பற்றய விபரங்கள்:..........................................................
(இயைபுடைய விபரங்களை இணைக்கவும்)
12) இந்நிறுவனத்திற்கு கடன் வசதி அடிப்படையில் பொருட்கள் மற்றும் வழங்கக்கூடிய காலம் மற்றும் பெறுமதி:..........................................................
13) போக்குவரத்து வசதிகள் தொடர்பான விபரங்கள்: ..........................................................
14) பதிவுக் கட்டணத்தைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு இலக்கம்:..........................................................

.................................................... ....................................................
திகதி பணிப்பாளர் / முகாமையாளர்

**நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்கள்**

01. ஒன்றுக்கு மேற்பட்ட எண்ணிக்கைக்கான வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளலாம்.
02. மாதிரி விண்ணப்பப் படிவத்தின் பிரகாரம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை மட்டும் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. வழங்கல்கள் மற்றும் சேவைக்கு அமைய வெவ்வேறான விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. ஒவ்வொரு விடயம் பொருட்டும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பதிவுக் கட்டணத்தை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரையும் மற்றும் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவிற்கு பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் (பொது 172) விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம் என்பதுடன் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு சகிதம் விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''2024/2025ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்'' எனக் குறிப்பிடப்பட்டு, ''பிரதான கணக்காளர், ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு-08'' எனும் முகவரிக்கு 2023-12-15ஆம் திகதிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பதிவில் உள்ளடக்கப்படமாட்டாது.
06. வழங்கல் மற்றும் சேவைகளை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் நிலையான வியாபாரமாக நடாத்திச் செல்லுதல் வேண்டும் என்பதுடன் சகல நடவடிக்கைகளும் விண்ணப்பத்தில் நீங்கள் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் மட்டுமே மேற்கொள்ளப்படும். முகவரியில் மாற்றம் செய்யப்பட்டால் உடனடியாக புதிய முகவரி அறிவிக்கப்படல் வேண்டும். அவ்வாறல்லாத வழங்குநர்களின் பதிவு இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
07. உரிய தரம் மற்றும் மாதிரிக்கு அமைய பொருள் மற்றும் சேவைகளை தேவைப்படும் அளவிற்கு குறித்த தினத்தில் வழங்குதல் வேண்டும்.
08. அனைத்து பொருட்களையும் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும்.
09. விலைகள் கோரப்பட்டவுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத மற்றும் முறையாக பொருள் வழங்கலை மேற்கொள்ளாத நிறுவனங்களிடமிருந்து விலைகள் கோருவதைத் தீர்மானிக்கும் அதிகாரத்தை ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.
10. சகல வழங்குநர்களிடமிருந்து அல்லது தெரிவு செய்யப்பட்ட 05 வழங்குநர்களிடமிருந்து மட்டும் ஒரு தடவை விலைமனுக்களைக் கோரும் அதிகாரம் பணிப்பாளருக்கு உண்டு. போதுமான வழங்குநர்கள் இல்லாத வேளையில் தேவைப்பாட்டின் பிரகாரம் வெளி வழங்குநர்களிடமிருந்து விலைகளைக் கோரி கொள்வனவு செய்தல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.
11. வழங்கல் மற்றும் சேவை வழங்குநர்களைப் பதிவு செய்கையில் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழங்குவதற்கு உத்தேசிக்கும் அனைத்துப் பொருட்களையும் வியாபார நிலையத்தில் நேரடியாக விற்பனை செய்யும் மற்றும் தேவையான அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே வழங்குநர் மற்றும் சேவை வழங்குநர்களாகப் பதிவு செய்து கொள்ளப்படுவார்கள்.
12. விண்ணப்பங்களைப் பரீட்சித்துப் பார்க்கையில் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மாத்திரமே பதிவு செய்துகொள்ளப்படும்.
13. வழங்கல் மற்றும் சேவைகளின் பொருட்டு விலைகளைக் கோருகையில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும் என்பதுடன் பதிவு செய்யப்படாத ஏனைய அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடம் விலைமனுக்களைக் கோரும் உரிமையை வைத்தியசாலைப் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் இறுதித் தீர்மானத்தை வைத்தியசாலையின் பணிப்பாளர் தன்னகத்தே கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்கள் தேவைப்படின் ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம்: 0112693711

**வைத்தியர் ஜீ. விஜேசூரிய,**
**பணிப்பாளர் (தலைவர்),**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு-08.**

## இலங்கை வங்கி
### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் (397ஆம் அத்தியாயம்) வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

இரம்புக்கன, மடவல, வத்தாவ, உளுகெதர, இல. 26/1 என்னும் முகவரியில் அமைந்த M/s கொகோ அக்ரோ இன்வெஸ்ட்மென்ட் பிரைவேற் லிமிடெற் ஈடுவைத்த ஆதனம்

கடன் வசதி தொடர்பு இல.81290580

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 2023 ஒக்டோபர் 20 ஆம் திகதி 2531 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி தினமின, தினகரன், திங்கட்கிழமை மற்றும் டெய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு அறவிடவேண்டிய செலவு மற்றும் கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் நிலமனையையும் இல. 182/3 இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த எம்/எஸ் T&H ஒக்ஷன் ஏல நிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H. துசித்த கருணாரத்ன அவர்கள் **2023 டிசெம்பர் 04ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00** மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

வடமேல் மாகாணம் குருணாகலை மாவட்டத்தில் உடுகஹ கோரளை தேவமெதி ஹத்பற்றுவில் பொல்கஹவெல பிரதேச சபை எல்லைகளுள் வீரம்புகெதர பிரதேச செயலகப் பிரிவு கோனாவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் கினிபெந்த மற்றும் ஹன்வெல்லயில் அமைந்த "மகுருவலபிட்டிய எஸ்டேற் (உறுதியின் படி மதுருவலபிட்டிய எஸ்டேற்)" என அழைக்கும் காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.A.பிரேமரத்ன தயாரித்த 2017.03.04 திகதியிட்ட வரைபடம் இல. 166/17 இல் காணித்துண்டு 01 என அடையாளமிட்டு விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு, அதாவது மேற்கூறிய காணித்துண்டு 01 இன் எல்லைகளாவன: வடக்கில் பிரதான பாதையிலிருந்து வீரம்புகெதர வரை பிரதேச சபைப் பாதையும், கிழக்கில் மானெல் ஜயகொடி உரிமை கோரும் காணியும், திரு. குசல் வைத்திருக்கும் குத்தகைக்காணி (உறுதியின் பிரகாரம் மானெல் ஜயகொடியின் காணி) மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான அதே காணியின் மீதிப்பாகத்தை பிரிக்கும் உயிர் மற்றும் கம்பி வேலியும், தெற்கில் கிரிமுதியான்சே மற்றும் உடபொல யசபால உரிமை கோரும் காணியை பிரிக்கும் உயிர் மற்றும் கம்பி வேலியும் மேற்கில் மொஹான் ஜயகொடி உரிமை கோரும் காணியை பிரிக்கும் வேலியும் எல்லைகளாகக் கொண்டு மேற்கூறிய வரைபடம் இல. 166/17 இன் பிரகாரம் மூன்று ஏக்கர்கள் ஒரு றூட் (ஏ.3, றூ.1, பே.0) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு காணப்படும் மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இக்காணி குருணாகலை காணிப்பதிவகத்தில் ஏ 80/94 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திருமதி G.R.B.J.R.R. அபயபண்டார**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**இரம்புக்கணைக் கிளை**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www. observerjobs. lk

## இலங்கை வங்கி
### மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகளில் அடகு வைக்கப்பட்டு அதற்கடுத்த கூட்டிலுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதியில் அதே கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.)

| இலங்கை வங்கி | நகைகளை அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்பதற்கான இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும். |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் அதிமேற்தரக் கிளை<br>யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கிளை<br>அடம்பன்<br>அச்சுவேலி<br>சங்கானை<br>சாவகச்சேரி<br>செட்டிக்குளம்<br>சுன்னாகம்<br>யாழ்ப்பாணம் 2ம் மேற்தரக் கிளை<br>யாழ்ப்பாணம் பேரூந்து நிலையம்<br>யாழ்ப்பாணம் பிரதான வீதி<br>கைதடி<br>கல்வியங்காடு<br>கிளிநொச்சி<br>காரைநகர்<br>கொக்குவில்<br>கோப்பாய்<br>மடு<br>மல்லாவி<br>மல்லாகம்<br>மானிப்பாய்<br>மாங்குளம்<br>மன்னார்<br>மந்திகை<br>மருதங்கேணி | 01.09.2022 வரை 12 மாதங்களுக்கும் 31.08.2022 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 01.12.2023 | 02.12.2023 மற்றும் 03.12.2023 வட மாகாணக் காரியாலயம் வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் |
| முழங்காவில்<br>முல்லைத்தீவு<br>முல்லைத்தீவு மாவட்ட செயலகக் கிளை<br>முள்ளியவளை<br>முருங்கன்<br>நயினாதீவு<br>நல்லூர்<br>நானாட்டான்<br>நெடுங்கேணி<br>நெல்லியடி<br>ஓமந்தை<br>பண்டத்தரிப்பு<br>பரந்தன்<br>பளை<br>பேசாலை<br>பருத்தித்துறை<br>பூநகரி<br>பூவரசன்குளம்<br>புன்னாலைக்கட்டுவன்<br>புதுக்குடியிருப்பு<br>புதுக்குளம்<br>சிறுப்பிட்டி<br>தலைமன்னார்<br>திருமுறிகண்டி<br>திருநெல்வேலி<br>உரும்பிராய்<br>வட்டுக்கோட்டை<br>வல்வெட்டித்துறை<br>வவுனியா மேற்தரக் கிளை<br>வவுனியா மாவட்ட செயலகக் கிளை<br>வவுனியா நகரக் கிளை<br>விசுவமடு | 01.09.2022 வரை 12 மாதங்களுக்கும் 31.08.2022 வரை 06 மாதங்களுக்கும் அடகு வைக்கப்பட்ட நகைகள் | 01.12.2023 | 02.12.2023 மற்றும் 03.12.2023 வட மாகாணக் காரியாலயம் வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம் |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**இலங்கை வங்கி**
**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும்**
**கிளை கடன் செயற்பாடுகள் பிரிவு–II**
**தலைமை அலுவலகம், கொழும்பு 01.**
**தொலைபேசி** - 011 2399568 / 0112204545

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

it's what you want
www.adz.lk

# 'அரையிறுதி' துரதிருஷ்டங்களைப் போக்க தென்னாபிரிக்கா இன்று ஆஸியுடன் மோதல்





உலகக் கிண்ணத்தின் இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கொல்கத்தா, ஈடன் கார்டன் மைதானத்தில் அவுஸ்திரேலியா மற்றும் தென்னாபிரிக்க அணிகள் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

பகலிரவு ஆட்டமாக இன்று பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டியில் சாதனை எண்ணிக்கையாக ஆறாவது முறை உலகக் கிண்ணத்தை வெல்லும் எதிர்பார்ப்புடன் அவுஸ்ரேலிய அணி களமிறங்கவிருப்பதோடு முதல் முறை உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அதிர்ஷ்டத்தை தேடி தென்னாபிரிக்கா களமிறங்குகிறது. தென்னாபிரிக்க அணி இதற்கு முன் நான்கு தடவைகள் அரையிறுதியில் ஆடியபோதும் ஒரு முறை கூட வெற்றியீட்டியவில்லை.

கடும் சவால் மிக்க அணிகளாக இருக்கும் இந்த இரு அணிகளும் இதற்கு முன்னர் இரு முறை அரையிறுதியில் சந்தித்துள்ளன. அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் தோல்வி அடைந்த தென்னாபிரிக்கா பதிலடி கொடுக்க இன்று முழு முயற்சியில் ஈடுபடும்.

மிக அண்மித்த போட்டியாக கடந்த 2007 அரையிறுதியில் ஆஸியை சந்தித்த தென்னாபிரிக்கா 150க்கும் குறைவான ஓட்டங்களுக்கு சுருண்டு தோல்வியை சந்தித்தபோதும் 1999 அரையிறுதியில் அலன் டொனால்ட்ரன் அவுட் ஆனதால் ஆட்டம் சம நிலையானது. என்றாலும் இறுதிப் போட்டிக்கு முன்னேற தென்னாபிரிக்காவுக்கு அதிர்ஷ்டம் இருக்கவில்லை.

இந்நிலையில் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் அளவு பலம்மிக்க அணியுடனேயே தென்னாபிரிக்கா இம்முறை தொடரில் களமிறங்கியுள்ளது. அந்த அணி லீக் போட்டி முடிவில் புள்ளிப் பட்டியில் இந்தியாவுக்கு அடுத்து இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

குழுநிலையில் அந்த அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிராக 134 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியதோடு கடந்த செப்டெம்பரில் இரு அணிகளுக்கும் இடையில் நடைபெற்ற ஒருநாள் தொடரிலும் தென்னாபிரிக்க அணி 3–2 என தொடரை கைப்பற்றி இருந்தது.

மறுபுறம் இம்முறை உலகக் கிண்ணத்தை தோல்விகளுடன் ஆரம்பித்த அவுஸ்திரேலியா அதில் இருந்து மீண்டு வந்து இலகுவாக அரையிறுதி வாய்ப்பை உறுதி செய்துகொண்டது.

அதேபோன்று உலகக் கிண்ணங்களில் வழக்கமாக சோபித்து வரும் ஆஸி. அணி நொக் அவுட் சுற்றுகளில் மற்ற அணிகளை விடவும் வெற்றிகளைக் குவிப்பதில் முன்னணியில் உள்ளது.

எனினும் கொல்கத்தாவில் நிலவும் மழையுடனான காலநிலை போட்டியில் பாதிப்பை செலுத்திம் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

அரையிறுதிப் போட்டிக்கு மேலதிக நாளாக வரும் வெள்ளிக்கிழமையை (17) ஐ.சி.சி ஒதுக்கியுள்ளது. போட்டி முழுமையாக கைவிடப்பட்டால் குழு நிலையில் அதிக நிகர ஓட்டங்களை பெற்ற தென்னாபிரிக்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

கொல்கத்தாவில் இன்று மழை பெய்ய 50 வீத வாய்ப்பு இருப்பதாக காலநிலை முன்னறிப்புகள் தெரிவித்துள்ளன.

ஈடன் கார்டன் மைதானம் அதிக ஓட்டங்கள் குவிக்கப்படும் ஆடுகளமாக இருக்கும் நிலையில் துடுப்பாட்ட வீரர்களுக்கே சாதகமாக உள்ளது. குறிப்பாக சுழற்பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்த வாய்ப்பு உள்ளது.

இந்த மைதானத்தில் இதற்கு முன்னர் தென்னாபிரிக்க அணி ஐந்து போட்டிகளில் ஆடி இருப்பதோடு அதில் நான்கில் வெற்றியீட்டியுள்ளது.

மறுபுறம் அவுஸ்திரேலியா மூன்று ஆட்டங்களில் ஆடி இரண்டில் வென்றுள்ளது. எனினும் இந்த இரு அணிகளும் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் இதற்கு முன்னர் இங்கு சந்தித்ததில்லை.

## இந்தியாவின் அரையிறுதிக்கான ஆடுகள மாற்றத்தால் சர்ச்சை



இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகள் நேற்று (15) மோதிய அரையிறுதிப் போட்டிக்கான ஆடுகளம் கடைசி நேரத்தில் மாற்றப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்தியது.

மும்பை, வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டிக்கு 7ஆம் இலக்க ஆடுகளமே தேர்வு செய்யப்பட்டிருந்தது. ஆனால் கடைசி நேரத்தில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட 6ஆம் இலக்க ஆடுகளம் தேர்வு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டது. 6ஆம் இலக்கம் கொண்ட ஆடுகளத்தில் இதற்கு முன் தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து, இந்தியா மற்றும் இலங்கை ஆட்டங்கள் நடைபெற்றுள்ளன. தென்னாபிரிக்கா 229 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் இந்தியா 302 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் அந்த ஆட்டங்களில் வெற்றி பெற்றன.

ஐ.சி.சி விதிமுறைகளின்படி, மைதான நிர்வாகமே, ஆடுகளத்துக்குப் பொறுப்பேற்க வேண்டும். ஆடுகள ஆலோசகராக ஐ.சி.சி சார்பில் அண்டி அட்கின்சன் உள்ளார்.

கடைசி நேரத்தில் ஆடுகளம் மாறறப்பட்டது குறித்து அட்கின்சன் அதிப்ருதி அடைந்ததாகவும் இதையடுத்து அவர் அனுப்பிய மின்னஞ்சல் ஒன்று கசிந்ததாகவும் 'டெய்லி மெயில்' செய்தி வெளியிட்டுள்ளது.

அணி நிர்வாகத்துக்கு ஏற்றவாறு உலகக் கிண்ண இறுதிச்சுற்றுக்கு ஆடுகளம் தயாராவது இதுவே முதல் முறையாகவும் இருக்கலாம் எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இந்த சர்ச்சைக்கு ஐ.சி.சி பதிலளித்துள்ளது,

"இதுபோன்ற நீண்ட காலம் நடக்கும் போட்டியில் கடைசி நேரத்தில் ஆடுகளங்கள் மாற்றப்படுவது இயல்பானது. ஏற்கனவே சிலமுறை இது போன்று நடந்துள்ளது. போட்டியை நடத்தும் நாட்டுடன் இணைந்து மைதான ஆடுகள வடிவமைப்பாளரின் பரிந்துரையின் பேரில் இந்த மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இந்த மாற்றம் குறித்து ஐ.சி.சியின் ஆடுகள ஆலோசகருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆடுகளம் நன்றாக விளையாடுவதற்கு ஏற்றதாக இருக்காது என நினைப்பதற்குக் காரணம் இல்லை" என்று கூறப்பட்டுள்ளது.

வரும் ஞாயிறன்று அஹமதாபாத்தில் நடைபெறவுள்ளது இறுதிப் போட்டியிலும் இதுபோன்று 5ஆம் இலக்க ஆடுகளத்துக்குப் பதிலாக 6ஆம் இலக்க ஆடுகளம் பயன்படுத்தப்படுவதாகத் தெரிகிறது. 6ஆம் இலக்க ஆடுகளத்தில் இரு ஆட்டங்களும் 5ஆம் இலக்க ஆடுகளத்தில் ஓர் ஆட்டமும் நடைபெற்றுள்ளன.

## சர்வதேச செய்திகள்



# காசா பிரதான மருத்துவமனைக்குள் நுழைந்தது இஸ்ரேலிய இராணுவம்

காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபா மருத்துமனைக்குள் நுழைந்த இஸ்ரேலிய படை, நோயாளிகளுடன் ஆயிரக்கணக்கான பொது மக்களும் அடைக்கலம் பெற்றிருக்கும் அந்த மருத்துமனையை சுற்றிவளைத்து தீவிர தேடுதலில் ஈடுபட்டுள்ளது.

காசா நகரில் இருக்கும் இந்த மருத்துமனையை முற்றுகையிட்டிருந்த இஸ்ரேலிய துருப்புகள் மற்றும் டாங்கிகள் கடந்த செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் பிரதான வாயில் ஊடாக மருத்துமனைக்குள் நுழைந்துள்ளன.

இந்த மருத்துவ வளாகத்தின் மேற்குப் பக்கமாக இஸ்ரேலிய படைகள் சுற்றிவளைப்புத் தேடுதலில் ஈடுபட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் முனீர் அல் புர்ஷ், அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு முன்னதாக குறிப்பிட்டிருந்தார்.

"பெரும் வெடிப்புகள் இடம்பெற்று வருவதோடு நாம் இருக்கும் இந்த இடத்திலும் தூசி பரவியுள்ளது. மருத்துவமனைக்குள்ளேயே வெடிப்புகள் இடம்பெறுவதாக நாம் நாம்புகிறோம்" என்று புர்ஷ் தெரிவித்தார்.

தொடர்ந்து சில மணி நேரத்தின் பின் காசா சுகாதார அமைச்சின் பேச்சாளர் அஷ்ரப் அல் கித்ரா, அல் ஜசீரா தொலைக்காட்சிக்கு பேசி இருந்தார்: "ஆக்கிமிப்புப் படை தற்போது நிலவறயில் இருப்பதோடு நிலவறையில் தேடுதலில் ஈடுபட்டு வருகிறது. இந்த வளாகத்திற்குள் அந்தப் படை துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டு தாக்குதல்களை நடத்தி வருகிறது" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலியப் படை ஆரம்பத்தில் மருத்துவமனையின் அவசரப் பிரிவிலேயே தேடுதலை நடத்தியதாக காசா சுகாதார அமைச்சின் மருத்துவமனைகளுக்கான பணிப்பாளர் முஹமது சகூத் குறிப்பிட்டுள்ளார்.

துருப்புகள் மருத்துவமனைக்குள் ஒவ்வொரு அறை மற்றும் வாட்டுகளாக சோதனை நடத்தி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கடும் துப்பாக்கிச் சூட்டுக்கு மத்தியில் மருத்துவமனையில் இருக்கும் நோயாளர்கள், மருத்துவர்கள் மற்றும் அடைக்கலம் பெற்றிருப்பவர்களை வெளியெறும்படி இஸ்ரேலிய படை உத்தரவிட்டுள்ளது. எனினும் காயமடைந்தவர்களுடன் தொடர்ந்து இருப்பதாகவும் அவர்களை தனியே விட்டால் உயிரிழப்பார்கள் என்றும் பல மருத்துவர்களும் தெரிவித்துள்ளனர். இந்த வளாகத்தில் பல வாயில்களிலும் சோதனைச் சாவடிகளை அமைத்திருக்கும் இஸ்ரேலியப் படை உள்ளே வருபவர்கள் மற்றும் வெளியே செல்பவர்களை சோதித்து வருவதாக கூறப்படுகிறது.

**"கையை உயர்த்துங்கள்"**

புதன்கிழமை அதிகாலையில் இருளுக்கு மத்தியில் சிலர் முகக் கவசம் அணிந்திருக்க இஸ்ரேலிய படைகள் வானின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியபடியே அல் ஷிபா மருத்துவமனைக்குள் ஊடுருவியுள்ளனர்.

"16 வயதுக்கு மேற்பட்ட அனைத்து ஆண்களும் தமது கைகளை உயர்ந்துங்கள்" என்று ஒரு வீரர் அரபு மொழியில் ஒலிபெருக்கியின் ஊடாக கூச்சலிட்டார். கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக நீடிக்கும் காசா மீதான இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதலின் பிரதான இலக்காக அல் ஷிபா மருத்துவமனை மாறிய நிலையிலேயே இஸ்ரேல் இந்த சுற்றிவளைப்பை நடத்தியுள்ளது. இந்த மருத்துவமனைக்குக் கீழ் ஹமாஸ் கட்டளை மையம் ஒன்று இருப்பதாக இஸ்ரேல் குற்றம்சாட்டுகின்றபோதும் ஹமாஸ் மற்றும் மருத்துவ பணியாளர்கள் மறுத்து வருகின்றனர். "முற்றவெளி ஊடாக கட்டடத்தை விட்டு வெளியேறி சரணையுங்கள்" என்று இஸ்ரேலிய வீரர் ஒலிபெருக்கியில் எச்சரித்ததாக அந்த மருத்துமனையில் பல நாட்களாக அடைக்கலம் பெற்றிருக்கும் ஊடகவியலாளர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். இந்த சுற்றிவளைப்பை ஹமாஸுக்கு எதிரான துல்லியமான மற்றும் இலக்குவைக்கப்பட்ட நடவடிக்கை என்று இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

ஏற்கனவே காசாவில் நீடித்த உக்கிர தாக்குதல் மற்றும் மோதல்கள் காரணமாக அல் ஷிபா மருத்துமனையில் மிக மோசமான சூழல் காணப்பட்டது. இங்கு மயக்கமருந்து இன்றி சத்திரசிகிச்சைகள் செய்யப்படுவது, போதிய உணவு மற்றும் நீர் இன்றி மக்கள் நடைபாதைகளில் அடைக்கலம் பெற்றிருப்பது மற்றும் அழுகிய சடலங்களில் இருந்து வெளியாகும் துர்நாற்றம் என பயங்கர சூழல் நீடித்து வந்தது.

இஸ்ரேலிய துருப்புகளுடன் இந்த மருத்துவமனை வளாகத்திற்குள் இஸ்ரேலிய டாங்கிகளும் நுழைந்துள்ளன.

**போர் குற்றம்**

காசாவின் அல் ஷிபா மருத்துவமனை மீதான இஸ்ரேலின் ஊடுருவல் போர் குற்றம், தார்மீகக் குற்றம் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றச்செயல் என்று ஹமாஸ் அரசியன் ஊடக அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இரவில் மறைந்துகொண்டு மருத்துவமனை மீது சுற்றிவளைப்பு நடவடிக்கையை ஆரம்பிக்கும் போது அங்கு 9,000 நோயாளர்கள், மருத்துவ பணியாளர்கள் மற்றும் இடம்பெயர்ந்த பொது மக்கள் இருந்தனர் என்று அது மேலும் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் இராணுவம் சிவில் வசதி ஒன்றின் மீதே தாக்குதல் நடத்தியதாகவும் அது இராணுவ நிலை ஒன்றல்ல என்றும் ஹமாஸ் தலைவர்களில் ஒருவரான இசத் அல் ரிஷ்க் எக்ஸ் சமூகதளத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கைக்கு அமெரிக்க அரசு மற்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பொறுப்பாகும் என்று ஹமாஸ் அமைப்பு முன்னதாக தெரிவித்திருந்தார்.

இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட விரைவில் வெள்ளை மாளிகை பொதுமக்களின் பாதுகாப்புப் பற்றி கவலை வெளியிட்டிருந்தது. "வானில் இருந்து மருத்துவமனை ஒன்றின் மீது தாக்குதல் நடத்துவதை நாம் ஆதரிப்பதில்லை என்பதோடு மருத்துவமனை ஒன்றில் துப்பாக்கிச் சூடு இடம்பெறுவதையும் நாம் விரும்பவில்லை" என்று அமெரிக்க தேசிய பாதுகாப்புச் சபை பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை கண்டித்திருக்கும் ஜோர்தான் வெளியுறவு அமைச்சு, அது சர்வதேச சட்டத்தை மீறுவது என்றும் குறிப்பாக போரின் போது பொதுமக்களை பாதுகாப்பதற்கான ஜெனீவா ஒப்பந்தத்தை மீறுகிறது என்றும் அது தெரிவித்துள்ளது.

**செயலிழக்கும் மருத்துவமனைகள்**

காசாவில் ஏனைய மருத்துவமனைகளின் நிலைமையும் மோசமாக இருப்பதாக ஐ.நா தெரிவித்துள்ளது. எரிபொருள் இன்மை, இஸ்ரேலிய தாக்குதலால் எற்பட்ட சேதங்கள் மற்றும் மோதல்கள் காரணமாக அங்குள்ள 36 மருத்துவமனைகளில் 22 செயலிழந்துள்ளன.

"திறந்திருக்கும் 14 மருத்துவமனைகளில் முக்கியமான மற்றும் உயிர்காக்கும் அறுவை சிகிச்சைகள் மற்றும் தீவிர சிகிச்சை உட்பட உள்நோயாளிகளுக்கான சிகிச்சையை வழங்குவதற்கு போதுமான பொருட்கள் இல்லை" என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. வடக்கில் உள்ள மருத்துவமனைகளை வெளியேற்றும் இஸ்ரேல் இராணுவத்தின் உத்தரவு சில நோயாளர்களுக்கு மரண தண்டனையாக அமையக் கூடும் என்று எச்சரித்திருக்கும் உலக சுகாதார அமைப்பு, தெற்கு காசாவில் இருக்கும் மருத்துவமனைகளால் அதிக நோயாளர்களை உள்வாங்க முடியாது என அது சுட்டிக்காட்டியுள்ளது. குறிப்பாக காசா நகர் மற்றும் வடக்கு காசாவில் இயங்கும் ஒரே மருத்துவமனையே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்தும் இயங்கி வருவதாக மனிதாபிமான விவகாரங்களின் ஒருங்கிணைப்புக்கான ஐ.நா நிறுவனம் தெரிவித்துள்ளது.



"மின்சாரம், மருத்துவ நுகர்பொருட்கள், ஒட்சிசன், உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறை, குண்டுவீச்சுகள் மற்றும் அவற்றின் சுற்றுப்புறங்களில் நீடிக்கும் சண்டை போன்றவற்றால் மற்ற அனைத்தும் செயல்பாடுகளை நிறுத்தியுள்ளன" என்று ஐ.நா நிறுவனம் குறிப்பிட்டது.

இந்நிலையில் 500க்கும் அதிகமான நோயாளர்களுடன் அல் அஹ்லி மருத்துவமனை மாத்திரம் காசா நகரில் தொடர்ந்து இயங்கி வருகிறது. எனினும் அந்த மருத்துமனையும் பற்றாக்குறைகள் மற்றும் சவால்களை எதிர்கொண்டு வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

காசாவின் பாதி நிலப்பகுதியான வடக்கில் இருந்து மக்களை வெளியேறும்படி இஸ்ரேல் கூறிய நிலையில் சுமார் 1.5 மில்லியன் மக்கள் தெற்கில் இடம்பெயர்ந்திருப்பது அங்கு மற்றொரு மனிதாபிமான நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

அல் ஷிபா மருத்துவமனை அமைந்திருக்கும் காசா நகரின் மையப் பகுதியை நோக்கி முன்னேறும் இஸ்ரேலியப் படை ஹமாஸ் மற்றும் பலஸ்தீன போராளிகளின் கடும் எதிர்ப்பை சந்தித்து வருகிறது.

கடந்த 10 நாட்களுக்கு மேலாக வீதிக்கு வீதி மோதல்கள் நீடித்து வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. காசாவில் 11,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டபோதும் நேற்றுடன் கடந்த நான்கு நாட்களுக்கு மேலாக பலஸ்தீன சுகாதார அமைச்சு ஊயிரிழப்புகள் தொடர்பான புதிய தகவல்களை வெளியிடவில்லை.

வடக்கு மருத்துவமனைகளின் சேவை மற்றும் தொடர்பாடல்கள் செயலிழந்திருப்பதே இதற்குக் காரணமாகும். காசாவில் கொல்லப்பட்டவர்களில் 4 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் சிறுவர்கள் என்பதோடு 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பெண்களாவர்.

**பணயக்கைதிகள் தொடர்பில் பேச்சு**

கடந்த ஐந்து வாரங்களுக்கு மேலாக மோதல் நீடிக்கும் சூழலில் பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை போர் நிறுத்தம் ஒன்றை இஸ்ரேலிய தலைவர்கள் தொடர்ந்து நிராகரித்து வருகின்றனர்.

இந்நிலையில் 100 பணயக்கைதிகளை விடுவிக்கும்படி இஸ்ரேல் கேட்டதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவின் பேச்சாளர் அபூ ஒபைதா குறிப்பிட்டிருந்தார். இதற்கு பதில் இஸ்ரேலிய சிறையில் இருந்து 200 பலஸ்தீன சிறுவர்கள் மற்றும் 75 பெண்களை விடுவிக்கும்படி ஹமாஸ் கேட்டுள்ளது.

"நாங்கள் ஐந்து நாட்கள் போர் நிறுத்தம் பெற்றால் பணயக்கைதிகளை விடுவிக்க முடியும் என்று மத்தியஸ்தர்களிடம் தெரிவித்தோம்... இதன்மூலம் காசா பகுதி முழுவதிலும் உள்ள எங்கள் மக்கள் அனைவருக்கும் உதவிகளை வழங்க முடியும், ஆனால் எதிரிகள் தாமதப்படுத்துகிறார்" என்று அபூ ஒபைதா ஓடியோ ஒன்றை வெளியிட்டு தெரிவித்தார்.

எனினும் காசாவில் நிலவும் மோசமான சூழல் உடன்பாடு ஒன்றை எட்டுவதை சிக்கலாக்கி இருப்பதாக மத்தியஸ்த பணியில் ஈடுபட்டுவரும் கட்டாரின் வெளியுறவு அமைச்சின் பேச்சாளர் மாஜித் பின் முஹமது அல் அன்சாரி தெரிவித்துள்ளார்.

சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்து வரும் நிலையில் பணயக்கைதிகளை விடுவிக்க ஓயாமல் முயற்சித்து வருவதாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார். இஸ்ரேலிய பணயக்கைதிகளின் உறவினர்கள் டெல் அவிவில் இருந்து ஜெருசலத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தை நோக்கி ஐந்து நாள் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை கடந்த செவ்வாய்க்கிழமை (14) ஆரம்பித்திருந்தனர். பணயக்கைதிகளை விடுவிப்பதற்கு அரசு உடன்பாட்டுக்குச் செல்ல வேண்டும் என்று இவர்கள் கோரியுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் ஊடுருவிய ஹமாஸ் போராளிகள் நடத்திய தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டதோடு 240 பேர் வரை பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 நவம்பர் மாதம் 16ம் திகதி வியாழக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பெறுகை அறிவித்தல்

## வட மத்திய மாகாண சபை

## மாகாண சுகாதார சேவைத் திணைக்களம்

### கூட்டிபெருக்கும் சேவைக்காக தொழிலாளர்களை வழங்குதல் - 2023/ 2024

வட மத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் கீழ் உள்ள அநுராதபுர மாவட்டத்தின் போதனா வைத்தியசாலை மற்றும் பொலன்னறுவை மாவட்டத்தின் பொது வைத்தியசாலை தவிர்ந்து ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனைக்கு கூட்டிப்பெருக்கும் சேவைக்காக தொழிலாளர் உழைப்பை வழங்குவதற்காக பொருத்தமான வழங்குநர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் சார்பாக வடமத்திய மாகாண கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக் குழுவின் தலைவர் / பிரதம செயலாளரான என்னால் தகைமையுடைய நபர்கள் மற்றும் நிறுவனங்களிலிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | நிறுவனம் | சேவைகள் | கட்டணம் மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் | |
|---|---|---|---|---|
| | | | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணங்கள் (ரூபா) | 91 நாட்களுக்கு செல்லுப்படியாகும் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட நிபந்தனையற்ற கேள்விப் பிணைமுறி (ரூபா) |
| 01 | அநுராதபுர மாவட்டத்தின் போதனா வைத்தியசாலை தவிர்த்து ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை | கூட்டிப்பெருக்கும் சேவைக்காக தொழிலாளர்களை வழங்குதல் | 10,000.00 | 700,000.00 |
| 02 | பொலநறுவை மாவட்டத்தின் போதனா வைத்தியசாலை தவிர்த்து ஏனைய வைத்தியசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை | கூட்டிப்பெருக்கும் சேவைக்காக தொழிலாளர்களை வழங்குதல் | 8,000.00 | 500,000.00 |

02. சேவைக்கோரல் தேசிய போட்டி முறையிலன பிரகாரம் இடம்பெறும்.

03. மேற்படி வழங்குதலுடன் சம்பந்தப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற விண்ணப்பதாரர்களால் அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் வடமத்திய மாகாண சுகாதார சேவைத் திணைக்களத்தின் பிரதம கணக்காளருக்கு செலுத்திய பின்னர் 2023.11.16 முதல் 2023.12.07 வரை வாரத்தின் கடமை நாட்களில் மு.ப. 9.00 பி.ப 3.00 வரை குறித்த கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். குறித்த நேரங்களில் கேள்வி ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்கள் இலவசமாக பரீட்சித்துப்பார்க்கலாம் (மேலதிக விபரங்கள் தேவையாயின் 025-2050715 தொ.பே இலக்கத்தில் பெற்றுக்கொள்ளலாம்).

04. கேள்விதாரர்கள் இலங்கையில் வியாபார பெயர் பதிவுச் செய்யும் சட்டவாக்கத்தின் கீழ் அல்லது 2007 இல. 07 கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிப்பெருக்கல் சேவையை வழங்கும் நிறுவனங்கள் அல்லது ஏதேனும் யாப்பு அல்லது சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அதிகார சபை அல்லது நிறுவனமாக பத்திரிகை அறிவித்தல் பிரசுரமானத்தினதிற்கு குறைந்தபட்சம் மூன்று வருடத்திற்கு முன்பு பதிவு செய்தல் குறைந்தபட்ச 02 வருடம் வைத்தியசாலைகளில் சேவையை வழங்கிய அனுபவத்துடன் குறித்த துறையில் 03 வருடத்திற்கு குறையாத சேவை அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். உறுதி செய்வதற்காக ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் (உடன்படிக்கை, கட்டளைகள் மற்றும் சேவை சான்றிதழ்கள்).

05. முறையாகப் பூர்த்தி செய்த கேள்வி ஆவணங்களை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வேறுவேறாக தயாரிக்கப்பட்ட மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியை வேறுவேறாக கடித உறைகளில் உள்ளடக்கி அவற்றை மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு அவ் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கூட்டிப்பெருக்கும் சேவைக்கான தொழிலாளர்களை வழங்குவதற்காக விலைமனுப்பத்திரங்கள் - 2023/2024" எனக்குறிப்பிட்டு, 2023.12.08 மு.ப. 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத்தபாலில், "பிரதம செயலாளர் / தலைவர், கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு, பிரதம செயலகம், 4ம் மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிட த்தொகுதி, வடமத்திய மாகாணம், அநூராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதம செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட முடியும். ஒவ்வொரு நிறுவனம் மற்றும் சேவைக்கும் அட்டணையில் குறிப்பிடப்படுமாறு கேள்வி திறக்கப்படும் தினம் முதல் 91 நாட்களுக்கு (2023.12.08 முதல் 2024.03.08 வரை) செல்லுப்படியாகும் வங்கிப்பிணை முறியை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

06. கேள்விகளை இரு மாவட்டங்களுக்கும் அல்லது ஒரு மாவட்டத்திற்கு சமர்ப்பிக்கலாம்.

07. கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் 2023.12.08 மு.ப. 11.00 இற்கு வடமத்திய மாகாண பிரதம செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் கேள்விகள் திறக்கப்படும். குறித்த நேரத்தில் பின்னர் கிடைக்கும் எந்தக் கேள்விப்பத்திரமும் ஏற்கப்படமாட்டாது அத்துடன், கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரிதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

08. இப்பெறுகை சம்பந்தமாக வடமத்திய மாகாண கௌரவ ஆளுநரின் தீர்மானம் இறுதித்தீர்மானமாக இருக்கும்.

**தலைவர் / பிரதம செயலாளர்**
**கௌரவ ஆளுநரால் நியமிக்கப்பட்ட பெறுகைக்குழு**
**பிரமத செயலகம், வடமத்திய மாகாண சபைக் கட்டிடத்தொகுதி,**
**4ம் மாடி B, ஹரிஸ்சந்திர மாவத்த,**
**வடமத்திய மாகாணம், அநுராதபுரம்**
**2023.11.14**

# அறிவித்தல்

## கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம் நகர மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு

## கரையோர பாதுகாப்பு கட்டமைப்பு நிர்மாணத்திற்காக 2024ம் ஆண்டிற்காக பொருட்கள் வழங்குநர்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் கனரக வாகன வழங்குநர்களைப் பதிவு செய்தல்

### முன் தகைமைகளைப் பரீட்சிப்பதற்கான அழைப்பு

01. 2024ம் ஆண்டின் கரையோர பாதுகாப்பு கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக கருங்கல் பொருட்கள் வழங்குதல் மற்றும் இயந்திரம் / கனரக வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குவதற்காக வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக 2023.11.16 முதல் 2023.12.07 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்தல் கொழும்பு, கம்பஹா, புத்தளம், மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய கரையோர மாவட்டங்களுக்காகும். www. coastal.gov. lk இணையதளத்தில் தேவைப்படும் பத்திரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவ விபரங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

02. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வழங்குநர்களால் மீளளிக்கப்படாத ரூ. 4000.00 கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கல் முகாமைத்துவத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி அல்லது "பணிப்பாளர் நாயகம், கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கல் முகாமைத்துவம் கணக்கு இல - 07042641 என்ற பெயருக்கு வங்கியில் வைப்புச் செய்து அல்லது உங்களது விண்ணப்பத்துடன் காசு செலுத்திய பற்றுச்சீட்டு / வங்கி பற்றுச்சீட்டின் பிரதியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. விண்ணப்பங்களை திணைக்கள இணையதளத்தில் அல்லது கீழ்க்காணும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
   - கொழும்பு - 10, மாளிகாவத்தையில் அமைந்துள்ள கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை
   - திணைக்கள தலைமையகத்தில் கரையோர அபிவிருத்தி பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.
   - நீர்கொழும்பு, மொரட்டுமோதர, காலி, மாத்தறை - ஹம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறையில் அமைந்துள்ள கரையோர வளங்கல் முகாமைத்துவ திணைக்களத்தின் பிரதேச பொறியியலாளர் பணிமனைகளில்

04. பிரதேச பொறியியல் பணிமனைகளிலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளும் போது மேற்படி கணக்கிற்கு காசு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டுடன் வேண்டுதல் கடிதத்தை சமர்ப்பித்து விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.

05. பொருட்களை வழங்குதல் மற்றும் இயந்திரம் /கனரக வாகனங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல் போன்ற இருவகை வழங்கல்களுக்கும் பதிவு செய்வதற்கு தேவையாயின், வேறுவேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். இவ் வருடம் (2023) இற்கு முன் தகைமைபெற்ற வழங்குநர்கள் 2024ம் ஆண்டிற்குள் மீண்டும் விண்ணப்பித்தல் வேண்டும்.

06. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் திணைக்களத்தினால் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவதுடன், விண்ணப்பத்தில் சமர்ப்பித்த சான்றிதழ்களின் மூலப்பிரதியொன்றை கொண்டுவரல் வேண்டும்.

07. விண்ணப்பங்கள், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், "2024ம் ஆண்டிற்காக கரையோர பாதுகாப்பு கட்டமைப்பை நிர்மாணிப்பதற்கு பொருள் வழங்குநர்களைப் பதிவு செய்தல்" அல்லது "2024ம் ஆண்டிற்காக கரையோர பாதுகாப்பு கட்டமைப்பு நிர்மாணத்திற்கான இயந்திராதிகள் மற்றும் கனரக வாகன வழங்குநர்களைப் பதிவு செய்தல்" என்று தெளிவாகக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு, 2023.12.07ம் திகதிக்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

08. சகல தெளிவுபடுத்தல்கள் மற்றும் தொடர்புகள் தொ.பே.இல. 011 - 2472622 மூலம் அல்லது மின்னஞ்சல் coastaldevelopmented @gmail.com மூலம் பிரதம பொறியியலாளர் (கரையோர அபிவிருத்தி) இற்கு அனுப்புதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமை திணைக்களம்**
**புதிய செயலகம், 4ம் மாடி**
**மாளிகாவத்த, கொழும்பு - 10.**

# விலைமனுக்கோரல்

ලංකා විදුලිබල මණ්ඩලය
இலங்கை மின்சார சபை
CEYLON ELECTRICITY BOARD

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|
| பிராந்தியம் | கேள்வி இல.<br>பொருட்களது விபரம் - தொகை | விலைமனுக்கோரல் முடிவு திகதி | விலைமனு ஆவணம் பெறும் இடமும் தொ.பே. இலக்கமும் | விலைமனு ஆவண விலை (ரூபா) | கேள்வி விபரம். ICB NCB |
| **சேவைகள்** | | | | | |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/132**<br>வாடகைக்கு வீடு -மின் அத்தியட்சகர் விடுதி<br>(பொத்துவில் மின் பாவனையாளர் சேவை நிலையம்) - அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 29-11-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/133**<br>வாடகைக்கு வான்<br>மின் அத்தியட்சகர் (விநியோக கட்டுமான பிரிவு) - அம்பாறை<br>(இரண்டு வருட காலம்) | 29-11-2023ம் திகதி பி.ப.2.00 மணி | விநியோக கட்டுமான பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை 063-2222440 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666 / 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/134**<br>வாடகைக்கு கட்டிடம்<br>களுவாஞ்சிகுடி மின் பாவனையாளர் சேவை நிலையம் - மட்டக்களப்பு(இரண்டு வருட காலம்) | 29-11-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதேச பிரதம மின் பொறியியலாளர் அலுவலகம் (மட்டக்களப்பு) 065-2222639 அல்லது பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666,026-2221030 | 500.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/135**<br>வாடகைக்கு முச்சக்கரவண்டி - கிழக்கு மாகாண உயர் மின்னழுத்த மின்சார கட்டமைப்பு (33kV/11kV) சம்பந்தமான GPS/GIS கள தரவு சேகரிப்பு - திருகோணமலை<br>(ஒரு வருட காலம்) | 29-11-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |
| பிராந்தியம்-02 கிழக்கு | **DGM(E)/QPPC/23/136**<br>வாடகைக்கு முச்சக்கரவண்டி - கிழக்கு மாகாண உயர் மின்னழுத்த மின்சார கட்டமைப்பு (33kV/11kV) சம்பந்தமான GPS/GIS கள தரவு சேகரிப்பு - திருகோணமலை<br>(ஒரு வருட காலம்) | 29-11-2023ம் திகதி பி.ப.2.00 மணி | பிரதிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், திருகோணமலை 026-2222666/ 026-2221030 | 1000.00 | NCB |

மேற்குறித்த பொருட்கள் வழங்கப்படல் தொடர்பாக வழங்குதாரர்களிடமிருந்து இலங்கை பிராந்தியம்-02 மின்சார சபை சார்பாக கொள்வனவுக் குழுவின் தலைவர் சர்வதேச/ தேசிய போட்டித் தன்மையுடன்

கூடியதான விலைமனுக்களைக் கோருகின்றார். இலங்கை மின்சார சபையிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஆவணங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற முகவர்களுக்கு மாத்திரமே விலைமனு ஆவணங்கள் விநியோகிக்கப்படும். தேவைக்கேற்ப அவர்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்திற்கேற்ப பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு தினங்கள் இருக்கும் வரை விலைமனு ஆவணங்கள் விலைமனுக்கோர உத்தேசித்திருப்பவர்கள் அல்லது அவர்களது முகவர்கள் மூலம் உரித்தான முறையில் இலங்கை மின்சார சபையின் பிரதிப் பொது முகாமையாளருக்கு/ பிரதம பொறியியலாளருக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து 5 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை வழங்குவதன் மூலம் கடமை நாட்களில் 09.00 மணி முதல் 15.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் ஆவணங்கள் பெற்றுக்கொள்ளலாம். பணமாகவோ இலங்கை மின்சார சபை பொது முகாமையாளர் சார்பாக வரையப்பட்ட வங்கி வரைவுப்பத்திரம் ஒன்றின் மூலமாகவோ கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படலாம்.

எழுத்துமூலமான விண்ணப்பமொன்றின் அடிப்படையில் வெளிநாட்டுத் தூதரகங்கள்/ வர்த்தக ஆணைக்குழுக்கள் என்பன இலவசமான முறையில் விலைமனுக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். இ.மி. சபையின் உரித்தான பி.பொ.மு/பிரதம பொறியியலாளர்களது அலுவலகங்களில் வைத்து உத்தேச விலைமனுதாரர்களினாலும் அவர்களது முகவர்களினாலும் விலைமனுக்கோரல் ஆவணங்கள் இலவசமாகப் பரிசீலிக்கப்படலாம்.

4 ஆம் கூட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வைத்து விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் முன்பாக விலைமனுக்கோரல் நேரம் முடிந்தவுடனேயே விலைமனுக்கள் திறக்கப்படும். காலம் பிந்திவரும் மனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு ஆவணங்கள் விநியோகிப்பவர்களான இ.மி.சபை.பொ.மு/ பிரதம பொறியியலாளர் ஆகியோர்களிடமிருந்து விலைமனுக்கோரல் முடிவு திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்பாக அனைத்து விளக்கங்களும் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
**இலங்கை மின்சார சபை**

வளமான வாழ்விற்கு மின்சாரம்

விலைமனு ஆவணத்தின் தகவல் பிரதியானது www.ceb.lk என்ற இ.மி.ச. கூட்டுரு இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

# சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத் தொகுதி அதிகார சபை

## கேள்விக்கான அழைப்பு

| தொ. இல. | பெறுகை கோவை இலக்கம் | விபரம் | கேள்வி ஆவணங்கள் விநியோகிக் கப்படும் இறுதித் திகதி | கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் மற்றும் இடம் | மீளளிக் கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|---|---|---|
| 01. | QTN63/2024 | சுகததாச அதிகார சபையின் உள்ளக, வெளியக விளையாட்டரங்கு நிர்வாக கட்டிடம், விளையாட்டு ஹோட்டல், சிற்றூழியர் இல்லம், பெலிஅத்த நீச்சல் தடாகத்திற்கு 2024ம் ஆண்டிற்கு சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2023.12.06 பி.ப.2.30 வரை | 2023.12.07 மு.ப. 10.30 இற்கு கொழும்பு அலுவலகம் | ரூ. 3,000.00 | ரூ. 120,000.00 செல்லுபடிக் காலம் 107 நாட்கள் (2024.03.02 வரை) |
| 02 | QTN264/2024 | சுகததாச அதிகார சபைக்குச் சொந்தமான போகம்பர விளையாட்டரங்கிற்கு 2024ம் ஆண்டிற்கு சுத்திகரிப்பு சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2023.12.06 பி.ப.2.30 வரை | 2023.12.07 பி.ப. 14.00 மணிக்கு கொழும்பு அலுவலகம் | ரூ. 2500.00 | ரூ. 50,000.00 செல்லுபடிக் காலம் 91 நாட்கள் (2024.03.06 வரை) |

* கேள்வி கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கடிதத் தலைப்புடன் (Letter Head) எழுத்துமூல விண்ணப்பத்தின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.
* கேள்வி ஆவணங்களில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கேள்விகளை பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கீழ்க்காணும் முகவரியில் கொழும்பு அலுவலகத்தில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
* கேள்வி கோரும் முறை - தேசிய போட்டி முறைமை (NCB)
* மேற்படி விடயத்திற்கான கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாக சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபைக்குச் செலுத்தி கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்வதுடன், தேவைப்படுபவர்களுக்கு கேள்வி ஆவணங்களை அலுவலக நாட்களில் 2023.11.17 முதல் 2023.12.06 வரை 9.00 மணி முதல் 14.30 மணி வரை வாரத்தின் வேலை நாட்களில் விநியோகிக்கப்படும்.

  **போகம்பர விளையாட்டரங்கு சுத்திகரிப்பிற்கான** கேள்வி ஆவணங்களை மேற்படி தினங்களில் போகம்பர விளையாட்டரங்கு மற்றும் கொழும்பு தலைமையகம் ஆகிய இரு இடங்களில் பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. போகம்பர வளாக முகாமையாளரை சந்தித்து பரீட்சித்துப் பார்க்கலாம்.
* கேள்விப் பத்திரத்துடன் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவு செய்துள்ள எந்த வர்த்தக வங்கியிலிருந்தும் விநியோகிக்கப்படும் மேற்படி நாட்களுக்காக செல்லுபடியாகக்கூடிய மேற்படி பெறுமதியுடைய கேள்விப் பிணையொன்றை கேள்விதாரரால் சமர்ப்பித்தல் வேண்டும்.
* இதுபற்றிய மேலதிக விபரங்களை சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபையின் கொழும்பு அலுவலகத்தின் கொள்வனவு செய்யும் பிரிவில் மற்றும் போகம்பர முகாமையாளரை அழைத்துப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், தேவைப்படுவோருக்கு அக்கேள்வி ஆவணங்களை குறித்த இடத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
* **QTN63/2024 இற்கான கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.11.24 மு.ப. 10.30 இற்கு கொழும்பு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறும்**.
* தொலைபேசி 0112384385/ 0112445677, பெக்ஸ் 0112445675 (கொழும்பு அலுவலகம்)
* தொலைபேசி 081-2235395, பெக்ஸ் 081-2054970 (போகம்பர அலுவலகம்)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**சுகததாச தேசிய விளையாட்டுக் கட்டிடத் தொகுதி அதிகார சபை,**
**த.பெ. எண் 2211, ஆதர் டி சில்வா மாவத்த, கொழும்பு-13.**

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| C E S / F P / 0 3 / PT/6540(MP) | Spares for Cummins NTA 855 Engines fitted with Mitsui Paceco RTG Cranes | 200,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6541(MAR) | Spares for attending the repairs of main engine (Man B & W, 405-26V0) of Tug Indra | 150,000.00 | 3,500.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/06/ PT/6543(EL) | Analog Input Output module for PLC system of JCT Cranes | 50,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/02/ PT/6544(EL) | Input Output modules for PLC system of JCT Cranes | 50,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/05/ PT/6547(MP) | 02 Nos. Break Thruster and 04 Nos. Repair Kit for Mitsui and ZPMC STS Cranes at JCT | 32,000.00 | 1,000.00 | 2024.01.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/03/ PT/6545(EL) | 06 Nos. 215 RIOR Communication Modules for PLC System of JCT Cranes | 75,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6546(MP) | Hydraulic components of Multifunction system of ZPMC STS at ECT | 70,000.00 | 1,000.00 | 2024.01.09 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
